# க.பொ.த. (சா.தர)ப் பரீட்சை - 2018

# மதிப்பீட்டு அறிக்கை

# 22 - தமிழ்மொழியும் இலக்கியமும்

Curriculum
Assessment & Evaluation
Teaching Learning
N E T S

ஆய்வு அபிவிருத்திக் கிளை,
தேசிய மதிப்பீட்டிற்கும் பரீட்சித்தலுக்குமான சேவை
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்

# க.பொ.த. (சா.தர)ப் பரீட்சை - 2018

# மதிப்பீட்டு அறிக்கை

## 22 - தமிழ்மொழியும் இலக்கியமும்

Curriculum
Assessment & Evaluation
Teaching Learning
N E T S


ஆய்வு அபிவிருத்திக் கிளை
தேசிய மதிப்பீட்டிற்கும் பரீட்சித்தலுக்குமான சேவை
இலங்கை பரீட்சைத் திணைக்களம்

முழுப் பதிப்புரிமையுடையது.

**தமிழ்மொழியும் இலக்கியமும்**

மதிப்பீட்டு அறிக்கை - க.பொ.த. (சா.தர)ப் பரீட்சை - 2018

# அறிமுகம்

இலங்கையின் பொதுப் பரீட்சைகளில் க.பொ.த (சா.தர)ப் பரீட்சைக்கே அதிகளவான பரீட்சார்த்திகள் தோற்றுகின்றனர். தேசிய மட்டத்தில் நடாத்தப்படும் இப்பரீட்சைப் பெறுபேற்றின் அடிப்படையில் வழங்கப்படும் சான்றிதழானது உயர்கல்விக்குத் தகுதியானவர்களைத் தெரிவுசெய்வதற்கு மட்டுமன்றி நடுத்தரமட்ட வேலைவாய்ப்புக்களைப் பெறுவதற்கும் தேசிய மற்றும் சர்வதேச ரீதியான பல்கலைக்கழகங்களில் சில பாட நெறிகளுக்கான அடிப்படைத் தகைமைக்கான அளவுகோலாகவும் கொள்ளப்படுகின்றது. இப்பரீட்சையின் நம்பகம், தகுதி, உயர் பண்புத்தரம் ஆகியனவே இதற்குக் காரணமாக அமைகின்றன.

இப்பரீட்சையில் உயர் அடைவைப் பெறுவதற்கு மாணவரும் அவர்களது அடைவை உறுதிப்படுத்துவதற்கு ஆசிரியர்களும் பெற்றோர்களும் அயராது உழைக்கின்றனர். இவர்களது எதிர்பார்ப்புகளை அடைவதற்கு உதவும் முகமாகவே இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் இம் மதிப்பீட்டு அறிக்கையைத் தயாரித்துள்ளது. இம் மதிப்பீட்டு அறிக்கையில் அடங்கியுள்ள தகவல்கள் பரீட்சார்த்திகள், ஆசிரியர்கள், அதிபர்கள், ஆசிரிய ஆலோசகர்கள், பாடத்துக்குப் பொறுப்பான கல்விப் பணிப்பாளர்கள், பெற்றோர்கள் மற்றும் கல்விசார்ந்த ஆராய்ச்சிகளில் ஈடுபடுவோர் ஆகியோருக்குப் பயனுடையனவாக அமையும். எனவே, இந்த அறிக்கையை அனேகமானோரின் பயன்பாட்டுக்கு ஏற்ற வகையில் நூலகத்தில் பேணுவது சிறந்ததாகும்.

இம் மதிப்பீட்டு அறிக்கை மூன்று பாகங்களைக் கொண்டதாகும். பாடக்குறிக்கோள்கள், பாட அடைவு தொடர்பான புள்ளிவிபரத் தகவல்கள், பாட வினாப்பத்திரத்தின் அடிப்படையில் பரீட்சார்த்திகளின் அடைவு என்பன ஒவ்வொரு வினாவுக்கும் தனித்தனியே பாகம் 1 இல் உள்ளடக்கப்பட்டுள்ளன. மதிப்பீடு மற்றும் ஆராய்ச்சித் துறைகளில் பயன்படுத்தப்பட்டுவரும் மரபுரீதியான சோதனைக் கோட்பாடு (Classical Testing Theory) மற்றும் உருப்படித் துலங்கல் கோட்பாடு (Item Response Theory) ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு இப் பகுப்பாய்வு அறிக்கையில் பரீட்சைத் திணைக்களத்தின் ஆய்வு அபிவிருத்திக் கிளையால் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதில் உள்ளடக்கப்பட்டுள்ள தகவல்கள் உச்ச நம்பகத்தன்மை, தகுதி ஆகியவற்றைக் கொண்டதாகும்.

தமிழ்மொழியும் இலக்கியமும் பாடத்தின் I, II, III ஆகிய வினாப்பத்திரங்களில் எதிர்பார்க்கப்பட்ட விடைகள், புள்ளி வழங்கும் திட்டம், விடையளிக்கப்பட்ட விதம் தொடர்பான அவதானிப்புக்கள், முடிவுகள் மற்றும் பின்னூட்டலுக்கான ஆலோசனைகள் ஆகியன இந்த அறிக்கையின் பாகம் II இல் உள்ளடக்கப்பட்டுள்ளன.

வினாப்பத்திரத்தின் ஒவ்வொரு வினாவுக்கும் விடையளிக்கும்போது பரீட்சார்த்திகள் கவனத்திற்கொள்ள வேண்டிய விடயங்கள், கற்றல் - கற்பித்தல் செயன்முறை தொடர்பான கருத்துக்கள், ஆலோசனைகள் ஆகியன இந்த அறிக்கையின் பாகம் III இல் உள்ளடக்கப்பட்டுள்ளன. பல்வேறு தேர்ச்சிகள் அத்தேர்ச்சி மட்டங்களை அண்மிக்கத்தக்க வகையில் கற்றல் - கற்பித்தல் செயன்முறையை ஒழுங்கமைக்கும் விதம் என்பன பற்றிய வழிகாட்டல் இதன்மூலம் கிடைக்கப்பெறுமென நினைக்கின்றேன்.

இவ் அறிக்கையின் பண்புத்தரத்தை மேம்படுத்துவதற்கான உங்களது ஆலோசனைகள், கருத்துக்களை வரவேற்கின்றேன். இந்த அறிக்கையைத் தயாரிக்க அர்ப்பணிப்புடன் பணியாற்றிய கட்டுப்பாட்டுப் பரீட்சகர்களுக்கும் வளவாளர்களாகப் பங்கேற்றவர்களுக்கும் தகவல்களை வழங்கிய பிரதம/ மேலதிக பிரதம/ உதவிப் பரீட்சகர்களுக்கும் எமது திணைக்கள உத்தியோகத்தர்கள் மற்றும் பணிக்குழுவினர் ஆகியோருக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**பீ. சனத் பூஜித**
பரீட்சை ஆணையாளர் நாயகம்

2019 டிசெம்பர் 30
ஆய்வு அபிவிருத்திக் கிளை
தேசிய மதிப்பீட்டிற்கும் பரீட்சித்தலுக்குமான சேவை
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
பெலவத்தை,
பத்தரமுல்ல.

| | | |
|---|---|---|
| வழிகாட்டல் | - | பீ. சனத் பூஜித<br>பரீட்சை ஆணையாளர் நாயகம் |
| ஒழுங்கமைப்பும் நெறிப்படுத்தலும் | - | கயாத்திரி அபேகுணசேகர<br>பரீட்சை ஆணையாளர்<br>ஆய்வு அபிவிருத்திக் கிளை |
| இணைப்பாளர் | - | எஸ். பிரணவதாசன்<br>பிரதிப் பரீட்சை ஆணையாளர்<br>ஆய்வு அபிவிருத்திக் கிளை - பாடசாலைப் பரீட்சைகள் |
| பாட இணைப்பாளர் | - | மு. செந்தில் வதனி<br>உதவிப் பரீட்சை ஆணையாளர் |
| தொகுப்பாக்கம் | - | பேராசிரியர். வ. மகேஸ்வரன்<br>தமிழ்த்துறை<br>பேராதனைப் பல்கலைக்கழகம்<br><br>கலாநிதி. க. இரகுபரன்<br>மொழித்துறை<br>தென்கிழக்குப் பல்கலைக்கழகம்<br><br>து. இராஜேந்திரம்<br>ஓய்வு பெற்ற சிரேஷ்ட விரிவுரையாளர்<br>திறந்த பல்கலைக்கழகம் |
| ஆக்கக் குழு | - | சோதிநாயகி பாலசுந்தரம்<br>பிரதிப் பரீட்சை ஆணையாளர் (ஓய்வு நிலை)<br>இலங்கை பரீட்சைத் திணைக்களம்<br><br>கண. வரதராஜன்<br>உதவிக் கல்விப் பணிப்பாளர்<br>வலயக் கல்வி அலுவலகம், கல்முனை<br><br>அருந்ததி கிருஷ்ணபிள்ளை<br>ஓய்வுநிலை ஆசிரியர்<br>கொழும்பு விவேகானந்தா கல்லூரி<br><br>கலாநிதி எம்.ஐ. முஹமது ஹணிபா<br>உதவிக் கல்விப் பணிப்பாளர்<br>வலயக் கல்வி அலுவலகம்<br>அக்கறைபற்று<br><br>திருமதி எஸ். வீரசிங்கம்<br>ஓய்வுநிலை ஆசிரியர்<br>யாழ்/ நெல்லியடி மத்திய கல்லூரி |
| கணினிப் பக்க வடிவமைப்பு | - | காஞ்சனா சுப்ரமணியம்<br>கணினி தரவுப் பதிவாளர் |

# உள்ளடக்கம்

**பாகம்** I — **பக்க எண்**

**1.0** **பாடக் குறிக்கோள்களும் பாட அடைவு தொடர்பான தகவல்களும்**

**1.1** **பாடக் குறிக்கோள்கள்** 1

**1.2** **பரீட்சார்த்திகளின் பாட அடைவு தொடர்பான தகவல்கள்**

1.2.1 பாடத்திற்குத் தோற்றிய பரீட்சார்த்திகளின் எண்ணிக்கை 2

1.2.2 பரீட்சார்த்திகள் தரங்கள் பெற்றுள்ள விதம் 2

1.2.3 மாவட்டங்களின் அடிப்படையில் முதல் முறையாகத் தோற்றிய பாடசாலைப் பரீட்சார்த்திகள் பெற்றுள்ள தரங்கள் 3

1.2.4 கல்வி வலயங்களின் அடிப்படையில் முதல் முறையாகத் தோற்றிய பாடசாலைப் பரீட்சார்த்திகள் பெற்றுள்ள தரங்கள் 4

1.2.5 வகுப்பாயிடை அடிப்படையில் புள்ளிகள் பெற்றுள்ள விதம் 7

**1.3.** **பாட அடைவு பற்றிய பகுப்பாய்வு**

1.3.1 வினாப்பத்திரம் I இல் பெறப்பட்ட அடைவு 8

1.3.2 வினாப்பத்திரம் II இல் வினாக்கள் தெரிவு செய்யப்பட்டுள்ள விதம் 9

1.3.3 வினாப்பத்திரம் II இல் புள்ளிகள் பெறப்பட்டுள்ள விதம் 9

1.3.4 வினாப்பத்திரம் II இல் பெறப்பட்ட அடைவு 10

1.3.5 வினாப்பத்திரம் III இல் வினாக்கள் தெரிவு செய்யப்பட்டுள்ள விதம் 11

1.3.6 வினாப்பத்திரம் III இல் புள்ளிகள் பெறப்பட்டுள்ள விதம் 11

1.3.7 வினாப்பத்திரம் III இல் பெறப்பட்ட அடைவு 12

**பாகம்** II

**2.0** **வினாப்பத்திரத்திற்கு விடையளிக்கப்பட்டுள்ளமை தொடர்பான விபரங்கள்**

**2.1** **வினாப்பத்திரம் I உம் அதற்கு விடையளிக்கப்பட்டுள்ளமை தொடர்பான விபரங்களும்**

2.1.1 வினாப்பத்திரம் I - கட்டமைப்பு 13

2.1.2 வினாப்பத்திரம் I 14

2.1.3. எதிர்பார்க்கப்பட்ட விடைகளும் - புள்ளி வழங்கும் திட்டமும் 18

2.1.4 வினாப்பத்திரம் I இற்கு விடையளிக்கப்பட்ட விதம் பற்றிய அவதானிப்பும் முடிவுகளும் ஆலோசனைகளும் 19

2.1.5 வினாப்பத்திரம் I இல் பல்தேர்வு வினாக்களுக்கு விடைகளைத் தெரிவு செய்துள்ள விதமும் குறிப்பிடத்தக்க அம்சங்களும் - (சதவீதத்தில்) 23

**2.2** **வினாப்பத்திரம் II உம் அதற்கு விடையளிக்கப்பட்டுள்ளமை தொடர்பான விபரங்களும்**

2.2.1 வினாப்பத்திரம் II இன் கட்டமைப்பு 26

2.2.2 வினாப்பத்திரம் II இல் எதிர்பார்க்கப்பட்ட விடைகளும், புள்ளி வழங்கும் திட்டமும், விடையளித்தல் தொடர்பான அவதானிப்பும் முடிவுகளும் ஆலோசனைகளும் 27

**2.3** **வினாப்பத்திரம் III உம் அதற்கு விடையளிக்கப்பட்டுள்ளமை தொடர்பான விபரங்களும்**

2.3.1 வினாப்பத்திரம் III - கட்டமைப்பு 42

2.3.2 வினாப்பத்திரம் III - எதிர்பார்க்கப்பட்ட விடைகளும், புள்ளிவழங்கும் திட்டமும், விடையளித்தல் தொடர்பான அவதானிப்பும் முடிவுகளும் ஆலோசனைகளும் 43

2.3.3 வினாப்பத்திரம் III இற்கு விடையளித்தல் தொடர்பான அவதானிப்பும் முடிவுகளின் தொகுப்பும் பொதுவான ஆலோசனைகளும் 61

**பாகம்** III

**3.0** விடையளிக்கும்போது அவதானிக்கப்பட வேண்டிய விடயங்களும் ஆலோசனைகளும்

**3.1** விடையளிக்கும்போது அவதானிக்கப்பட வேண்டிய விடயங்கள் 62

**3.2** கற்றல் கற்பித்தல் தொடர்பான கருத்துகளும் ஆலோசனைகளும் 66

# பாகம் I

## 1.0 பாடக் குறிக்கோள்களும் பாட அடைவு தொடர்பான தகவல்களும்

### 1.1 பாடக் குறிக்கோள்கள்

- தமிழ்மொழியைத் தொடர்பாடற் கருவியாக காலத்திற்குப் பொருத்தமான முறையில் வினைத்திறனுடன் கையாளுதல்.
- இலக்கியங்களினூடாக சமூக, கலாசார விழுமியங்களை அறிந்து அவற்றைப் பேணும் மனப்பாங்கை வெளிப்படுத்தல்.
- கலைகள், அறிவியல், தொழினுட்பத்துறைகள் என்பவற்றின் வளர்ச்சிக்கேற்ப மொழியைச் செம்மையாகப் பயன்படுத்தும் ஆற்றலைப் பெறுதல்.
- மொழியூடாக மாணவர் தம் ஆளுமையை வளர்த்துக் கொள்ளுதல்.
- தேசிய ஒருமைப்பாட்டுணர்வை வளர்க்க மொழியைச் சாதனமாகக் கொள்ளல்.

## 1.2. பரீட்சார்த்திகளின் பாட அடைவு தொடர்பான தகவல்கள்

### 1.2.1 பாடத்திற்குத் தோற்றிய பரீட்சார்த்திகளின் எண்ணிக்கை

| மொழி | பாடசாலை | தனிப்பட்ட | மொத்தம் |
|---|---|---|---|
| தமிழ் | **69532** | **13904** | **83436** |
| மொத்தம் | **69532** | **13904** | **83436** |

அட்டவணை 1

### 1.2.2 பரீட்சார்த்திகள் தரங்கள் பெற்றுள்ள விதம்

| தரம் | பாடசாலைப் பரீட்சார்த்தி | | தனிப்பட்ட பரீட்சார்த்தி | | மொத்தம் | சதவீதம் |
|---|---|---|---|---|---|---|
| | எண்ணிக்கை | சதவீதம் | எண்ணிக்கை | சதவீதம் | | |
| A | 8624 | 12.40 | 130 | 0.93 | 8754 | 10.49 |
| B | 12980 | 18.67 | 632 | 4.54 | 13612 | 16.31 |
| C | 27604 | 39.70 | 4983 | 35.84 | 32587 | 39.06 |
| S | 13402 | 19.27 | 5009 | 36.03 | 18411 | 22.07 |
| W | 6922 | 9.96 | 3150 | 22.66 | 10072 | 12.07 |
| மொத்தம் | **69532** | **100.00** | **13904** | **100.00** | **83436** | **100.00** |

அட்டவணை 2

### 1.2.3 முதல் முறையாகத் தோற்றிய பாடசாலைப் பரீட்சார்த்திகள் பெற்றுள்ள தரங்கள் - மாவட்டங்கள் அடிப்படையில்

| மாவட்டம் | தோற்றியவர் எண்ணிக்கை | மிகச் சிறந்த சித்தி (A) பெற்றவர் | | விசேட திறமைச் சித்தி (B) பெற்றவர் | | திறமைச் சித்தி (C) பெற்றவர் | | சாதாரண சித்தி (S) பெற்றவர் | | சித்தி (A+B+C+S) பெற்றவர் | | சித்தி அடையாதவர் (W) | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % |
| 1. கொழும்பு | 3133 | 547 | 17.46 | 648 | 20.68 | 1078 | 34.41 | 596 | 19.02 | 2869 | 91.57 | 264 | 8.43 |
| 2. கம்பஹா | 1182 | 143 | 12.10 | 242 | 20.47 | 444 | 37.56 | 222 | 18.78 | 1051 | 88.92 | 131 | 11.08 |
| 3. களுத்துறை | 1844 | 166 | 9.00 | 290 | 15.73 | 614 | 33.30 | 400 | 21.69 | 1470 | 79.72 | 374 | 20.28 |
| 4. கண்டி | 4756 | 521 | 10.95 | 872 | 18.33 | 1877 | 39.47 | 925 | 19.45 | 4195 | 88.20 | 561 | 11.80 |
| 5. மாத்தளை | 1369 | 105 | 7.67 | 260 | 18.99 | 572 | 41.78 | 252 | 18.41 | 1189 | 86.85 | 180 | 13.15 |
| 6. நுவரெலியா | 6084 | 564 | 9.27 | 1081 | 17.77 | 2730 | 44.87 | 1207 | 19.84 | 5582 | 91.75 | 502 | 8.25 |
| 7. காலி | 280 | 24 | 8.57 | 35 | 12.50 | 115 | 41.07 | 81 | 28.93 | 255 | 91.07 | 25 | 8.93 |
| 8. மாத்தறை | 459 | 45 | 9.80 | 73 | 15.90 | 192 | 41.83 | 87 | 18.95 | 397 | 86.49 | 62 | 13.51 |
| 9. அம்பாந்தோட்டை | 159 | 16 | 10.06 | 18 | 11.32 | 43 | 27.04 | 32 | 20.13 | 109 | 68.55 | 50 | 31.45 |
| 10. யாழ்ப்பாணம் | 8495 | 1599 | 18.82 | 1803 | 21.22 | 3084 | 36.30 | 1256 | 14.79 | 7742 | 91.14 | 753 | 8.86 |
| 11. கிளிநொச்சி | 2158 | 229 | 10.61 | 361 | 16.73 | 794 | 36.79 | 438 | 20.30 | 1822 | 84.43 | 336 | 15.57 |
| 12. மன்னார் | 1547 | 151 | 9.76 | 305 | 19.72 | 751 | 48.55 | 289 | 18.68 | 1496 | 96.70 | 51 | 3.30 |
| 13. வவுனியா | 2281 | 300 | 13.15 | 507 | 22.23 | 961 | 42.13 | 378 | 16.57 | 2146 | 94.08 | 135 | 5.92 |
| 14. முல்லைத்தீவு | 1747 | 194 | 11.10 | 331 | 18.95 | 738 | 42.24 | 306 | 17.52 | 1569 | 89.81 | 178 | 10.19 |
| 15. மட்டக்களப்பு | 8096 | 1097 | 13.55 | 1524 | 18.82 | 3023 | 37.34 | 1571 | 19.40 | 7215 | 89.12 | 881 | 10.88 |
| 16. அம்பாறை | 5883 | 916 | 15.57 | 1241 | 21.09 | 2345 | 39.86 | 969 | 16.47 | 5471 | 93.00 | 412 | 7.00 |
| 17. திருகோணமலை | 4325 | 441 | 10.20 | 813 | 18.80 | 1603 | 37.06 | 904 | 20.90 | 3761 | 86.96 | 564 | 13.04 |
| 18. குருநாகல் | 2060 | 314 | 15.24 | 424 | 20.58 | 753 | 36.55 | 350 | 16.99 | 1841 | 89.37 | 219 | 10.63 |
| 19. புத்தளம் | 2353 | 318 | 13.51 | 436 | 18.53 | 961 | 40.84 | 431 | 18.32 | 2146 | 91.20 | 207 | 8.80 |
| 20. அனுராதபுரம் | 1011 | 122 | 12.07 | 199 | 19.68 | 410 | 40.55 | 153 | 15.13 | 884 | 87.44 | 127 | 12.56 |
| 21. பொலன்னறுவை | 491 | 44 | 8.96 | 88 | 17.92 | 207 | 42.16 | 100 | 20.37 | 439 | 89.41 | 52 | 10.59 |
| 22. பதுளை | 2891 | 354 | 12.24 | 638 | 22.07 | 1281 | 44.31 | 488 | 16.88 | 2761 | 95.50 | 130 | 4.50 |
| 23. மொனராகலை | 216 | 13 | 6.02 | 35 | 16.20 | 99 | 45.83 | 44 | 20.37 | 191 | 88.43 | 25 | 11.57 |
| 24. இரத்தினபுரி | 1385 | 106 | 7.65 | 230 | 16.61 | 581 | 41.95 | 308 | 22.24 | 1225 | 88.45 | 160 | 11.55 |
| 25. கேகாலை | 1827 | 264 | 14.45 | 375 | 20.53 | 711 | 38.92 | 305 | 16.69 | 1655 | 90.59 | 172 | 9.41 |
| **மொத்தம்** | **66032** | **8593** | **13.01** | **12829** | **19.43** | **25967** | **39.32** | **12092** | **18.31** | **59481** | **90.08** | **6551** | **9.92** |

**அட்டவணை 3**

## 1.2.4 முதல் முறையாகத் தோற்றிய பாடசாலைப் பரீட்சார்த்திகள் பெற்றுள்ள தரங்கள் : கல்வி வலயங்கள் அடிப்படையில்

| கல்வி வலயம் | தோற்றியவர் எண்ணிக்கை | மிகச் சிறந்த சித்தி (A) பெற்றவர் | | விசேட திறமைச் சித்தி (B) பெற்றவர் | | திறமைச் சித்தி (C) பெற்றவர் | | சாதாரண சித்தி (S) பெற்றவர் | | சித்தி (A+B+C+S) பெற்றவர் | | சித்தி அடையாதவர் (W) | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % |
| 1. கொழும்பு | 2831 | 523 | 18.47 | 607 | 21.44 | 952 | 33.63 | 529 | 18.69 | 2611 | 92.23 | 220 | 7.77 |
| 2. ஹோமாகம | 125 | 4 | 3.20 | 10 | 8.00 | 48 | 38.40 | 39 | 31.20 | 101 | 80.80 | 24 | 19.20 |
| 3. ஸ்ரீ ஜயவர்த்தனபுர | 26 | - | - | 2 | 7.69 | 16 | 61.54 | 2 | 7.69 | 20 | 76.92 | 6 | 23.08 |
| 4. பிலியந்தல | 151 | 20 | 13.25 | 29 | 19.21 | 62 | 41.06 | 26 | 17.22 | 137 | 90.73 | 14 | 9.27 |
| 5. கம்பஹா | 313 | 37 | 11.82 | 60 | 19.17 | 105 | 33.55 | 60 | 19.17 | 262 | 83.71 | 51 | 16.29 |
| 6 மினுவாங்கொட | 263 | 43 | 16.35 | 70 | 26.62 | 75 | 28.52 | 47 | 17.87 | 235 | 89.35 | 28 | 10.65 |
| 7. நீர்கொழும்பு | 277 | 29 | 10.47 | 47 | 16.97 | 110 | 39.71 | 55 | 19.86 | 241 | 87.00 | 36 | 13.00 |
| 8. களனி | 329 | 34 | 10.33 | 65 | 19.76 | 154 | 46.81 | 60 | 18.24 | 313 | 95.14 | 16 | 4.86 |
| 9. களுத்துறை | 1307 | 141 | 10.79 | 219 | 16.76 | 416 | 31.83 | 267 | 20.43 | 1043 | 79.80 | 264 | 20.20 |
| 10. மத்துகம | 195 | 14 | 7.18 | 30 | 15.38 | 67 | 34.36 | 54 | 27.69 | 165 | 84.62 | 30 | 15.38 |
| 11. ஹொரணை | 342 | 11 | 3.22 | 41 | 11.99 | 131 | 38.30 | 79 | 23.10 | 262 | 76.61 | 80 | 23.39 |
| 12. கண்டி | 1047 | 166 | 15.85 | 212 | 20.25 | 421 | 40.21 | 169 | 16.14 | 968 | 92.45 | 79 | 7.55 |
| 13. தெனுவர | 575 | 70 | 12.17 | 122 | 21.22 | 227 | 39.48 | 99 | 17.22 | 518 | 90.09 | 57 | 9.91 |
| 14. கம்பளை | 1197 | 127 | 10.61 | 200 | 16.71 | 484 | 40.43 | 263 | 21.97 | 1074 | 89.72 | 123 | 10.28 |
| 15. தெல்தெனியா | 209 | 11 | 5.26 | 32 | 15.31 | 76 | 36.36 | 56 | 26.79 | 175 | 83.73 | 34 | 16.27 |
| 16. வத்தேகம | 827 | 64 | 7.74 | 132 | 15.96 | 330 | 39.90 | 160 | 19.35 | 686 | 82.95 | 141 | 17.05 |
| 17. கட்டுகஸ்தொட்ட | 901 | 83 | 9.21 | 174 | 19.31 | 339 | 37.62 | 178 | 19.76 | 774 | 85.90 | 127 | 14.10 |
| 18. மாத்தளை | 1157 | 91 | 7.87 | 215 | 18.58 | 490 | 42.35 | 217 | 18.76 | 1013 | 87.55 | 144 | 12.45 |
| 19. கலேவெல | 173 | 12 | 6.94 | 37 | 21.39 | 65 | 37.57 | 27 | 15.61 | 141 | 81.50 | 32 | 18.50 |
| 20. நாஉல | 39 | 2 | 5.13 | 8 | 20.51 | 17 | 43.59 | 8 | 20.51 | 35 | 89.74 | 4 | 10.26 |
| 21. வில்கமுவ | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - |
| 22. நுவரெலியா | 2361 | 158 | 6.69 | 401 | 16.98 | 1125 | 47.65 | 487 | 20.63 | 2171 | 91.95 | 190 | 8.05 |
| 23. கொத்மலை | 632 | 49 | 7.75 | 107 | 16.93 | 276 | 43.67 | 135 | 21.36 | 567 | 89.72 | 65 | 10.28 |
| 24. ஹட்டன் | 2376 | 311 | 13.09 | 473 | 19.91 | 1027 | 43.22 | 409 | 17.21 | 2220 | 93.43 | 156 | 6.57 |
| 25. வலப்பனை | 550 | 40 | 7.27 | 78 | 14.18 | 238 | 43.27 | 126 | 22.91 | 482 | 87.64 | 68 | 12.36 |
| 26. ஹங்குரன்கெத்த | 165 | 6 | 3.64 | 22 | 13.33 | 64 | 38.79 | 50 | 30.30 | 142 | 86.06 | 23 | 13.94 |
| 27. காலி | 212 | 20 | 9.43 | 27 | 12.74 | 87 | 41.04 | 62 | 29.25 | 196 | 92.45 | 16 | 7.55 |
| 28. எல்பிட்டிய | 28 | 1 | 3.57 | 3 | 10.71 | 8 | 28.57 | 8 | 28.57 | 20 | 71.43 | 8 | 28.57 |
| 29. அம்பலாங்கொடை | 13 | 1 | 7.69 | 5 | 38.46 | 6 | 46.15 | 1 | 7.69 | 13 | 100.00 | - | - |
| 30. உடுகம | 27 | 2 | 7.41 | - | - | 14 | 51.85 | 10 | 37.04 | 26 | 96.30 | 1 | 3.70 |
| 31. மாத்தறை | 203 | 31 | 15.27 | 36 | 17.73 | 88 | 43.35 | 30 | 14.78 | 185 | 91.13 | 18 | 8.87 |
| 32. அக்குரஸ்ஸ | 132 | 10 | 7.58 | 24 | 18.18 | 53 | 40.15 | 25 | 18.94 | 112 | 84.85 | 20 | 15.15 |
| 33. முலடியன-ஹக்மன | 26 | 3 | 11.54 | 4 | 15.38 | 9 | 34.62 | 5 | 19.23 | 21 | 80.77 | 5 | 19.23 |
| 34. மொறவக்க | 98 | 1 | 1.02 | 9 | 9.18 | 42 | 42.86 | 27 | 27.55 | 79 | 80.61 | 19 | 19.39 |
| 35. தங்காலை | 7 | - | - | - | - | 3 | 42.86 | 3 | 42.86 | 6 | 85.71 | 1 | 14.29 |

| கல்வி வலயம் | தோற்றியவர் எண்ணிக்கை | மிகச் சிறந்த சித்தி (A) பெற்றவர் | | விசேட திறமைச் சித்தி (B) பெற்றவர் | | திறமைச் சித்தி (C) பெற்றவர் | | சாதாரண சித்தி (S) பெற்றவர் | | சித்தி (A+B+C+S) பெற்றவர் | | சித்தி அடையாதவர் (W) | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % |
| 36. அம்பாந்தோட்டை | 140 | 16 | 11.43 | 17 | 12.14 | 35 | 25.00 | 26 | 18.57 | 94 | 67.14 | 46 | 32.86 |
| 37. வலஸ்முல்லை | 12 | - | - | 1 | 8.33 | 5 | 41.67 | 3 | 25.00 | 9 | 75.00 | 3 | 25.00 |
| 38. யாழ்ப்பாணம் | 3064 | 721 | 23.53 | 728 | 23.76 | 1044 | 34.07 | 369 | 12.04 | 2862 | 93.41 | 202 | 6.59 |
| 39. தீவகம் | 614 | 69 | 11.24 | 106 | 17.26 | 234 | 38.11 | 131 | 21.34 | 540 | 87.95 | 74 | 12.05 |
| 40. தென்மராட்சி | 892 | 152 | 17.04 | 177 | 19.84 | 310 | 34.75 | 139 | 15.58 | 778 | 87.22 | 114 | 12.78 |
| 41. வலிகாமம் | 2506 | 344 | 13.73 | 507 | 20.23 | 1011 | 40.34 | 409 | 16.32 | 2271 | 90.62 | 235 | 9.38 |
| 42. வடமராட்சி | 1419 | 313 | 22.06 | 285 | 20.08 | 485 | 34.18 | 208 | 14.66 | 1291 | 90.98 | 128 | 9.02 |
| 43. கிளிநொச்சி | 2158 | 229 | 10.61 | 361 | 16.73 | 794 | 36.79 | 438 | 20.30 | 1822 | 84.43 | 336 | 15.57 |
| 44. மன்னார் | 1187 | 128 | 10.78 | 241 | 20.30 | 557 | 46.93 | 219 | 18.45 | 1145 | 96.46 | 42 | 3.54 |
| 45. மடு | 360 | 23 | 6.39 | 64 | 17.78 | 194 | 53.89 | 70 | 19.44 | 351 | 97.50 | 9 | 2.50 |
| 46. வவுனியா - தெற்கு | 1727 | 266 | 15.40 | 409 | 23.68 | 707 | 40.94 | 265 | 15.34 | 1647 | 95.37 | 80 | 4.63 |
| 47. வவுனியா - வடக்கு | 554 | 34 | 6.14 | 98 | 17.69 | 254 | 45.85 | 113 | 20.40 | 499 | 90.07 | 55 | 9.93 |
| 48. முல்லைத்தீவு | 1169 | 151 | 12.92 | 239 | 20.44 | 497 | 42.51 | 186 | 15.91 | 1073 | 91.79 | 96 | 8.21 |
| 49. துணுக்காய் | 578 | 43 | 7.44 | 92 | 15.92 | 241 | 41.70 | 120 | 20.76 | 496 | 85.81 | 82 | 14.19 |
| 50. மட்டக்களப்பு | 2184 | 373 | 17.08 | 469 | 21.47 | 779 | 35.67 | 379 | 17.35 | 2000 | 91.58 | 184 | 8.42 |
| 51. கல்குடா | 1377 | 153 | 11.11 | 225 | 16.34 | 561 | 40.74 | 293 | 21.28 | 1232 | 89.47 | 145 | 10.53 |
| 52. பட்டிருப்பு | 1519 | 185 | 12.18 | 285 | 18.76 | 527 | 34.69 | 309 | 20.34 | 1306 | 85.98 | 213 | 14.02 |
| 53. மட்டக்களப்பு - மத்தி | 1955 | 311 | 15.91 | 397 | 20.31 | 724 | 37.03 | 319 | 16.32 | 1751 | 89.57 | 204 | 10.43 |
| 54. மட்டக்களப்பு - மேற்கு | 1061 | 75 | 7.07 | 148 | 13.95 | 432 | 40.72 | 271 | 25.54 | 926 | 87.28 | 135 | 12.72 |
| 55. அம்பாறை | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - |
| 56. கல்முனை | 2290 | 414 | 18.08 | 474 | 20.70 | 884 | 38.60 | 361 | 15.76 | 2133 | 93.14 | 157 | 6.86 |
| 57. சம்மாந்துறை | 1384 | 133 | 9.61 | 246 | 17.77 | 565 | 40.82 | 262 | 18.93 | 1206 | 87.14 | 178 | 12.86 |
| 58. மஹாஓய | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - |
| 59. தெஹியத்தகண்டிய | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - |
| 60. அக்கரைப்பற்று | 1423 | 259 | 18.20 | 373 | 26.21 | 579 | 40.69 | 184 | 12.93 | 1395 | 98.03 | 28 | 1.97 |
| 61. திருக்கோவில் | 786 | 110 | 13.99 | 148 | 18.83 | 317 | 40.33 | 162 | 20.61 | 737 | 93.77 | 49 | 6.23 |
| 62. திருகோணமலை | 1723 | 175 | 10.16 | 347 | 20.14 | 623 | 36.16 | 356 | 20.66 | 1501 | 87.12 | 222 | 12.88 |
| 63. மூதூர் | 1070 | 124 | 11.59 | 206 | 19.25 | 446 | 41.68 | 198 | 18.50 | 974 | 91.03 | 96 | 8.97 |
| 64. கந்தளாய் | 111 | 13 | 11.71 | 25 | 22.52 | 44 | 39.64 | 24 | 21.62 | 106 | 95.50 | 5 | 4.50 |
| 65. கிண்ணியா | 1400 | 129 | 9.21 | 234 | 16.71 | 480 | 34.29 | 317 | 22.64 | 1160 | 82.86 | 240 | 17.14 |
| 66. திருகோணமலை வடக்கு | 21 | - | - | 1 | 4.76 | 10 | 47.62 | 9 | 42.86 | 20 | 95.24 | 1 | 4.76 |
| 67. குருநாகல் | 444 | 50 | 11.26 | 83 | 18.69 | 154 | 34.68 | 90 | 20.27 | 377 | 84.91 | 67 | 15.09 |
| 68. குளியாப்பிட்டிய | 287 | 53 | 18.47 | 58 | 20.21 | 111 | 38.68 | 44 | 15.33 | 266 | 92.68 | 21 | 7.32 |
| 69 நிக்கவெரட்டிய | 210 | 33 | 15.71 | 48 | 22.86 | 86 | 40.95 | 35 | 16.67 | 202 | 96.19 | 8 | 3.81 |
| 70. மாகோ | 189 | 24 | 12.70 | 52 | 27.51 | 57 | 30.16 | 30 | 15.87 | 163 | 86.24 | 26 | 13.76 |
| 71. கிரியுள்ள | 628 | 111 | 17.68 | 132 | 21.02 | 236 | 37.58 | 96 | 15.29 | 575 | 91.56 | 53 | 8.44 |
| 72. இப்பாகமுவ | 302 | 43 | 14.24 | 51 | 16.89 | 109 | 36.09 | 55 | 18.21 | 258 | 85.43 | 44 | 14.57 |
| 73. புத்தளம் | 2095 | 277 | 13.22 | 389 | 18.57 | 870 | 41.53 | 379 | 18.09 | 1915 | 91.41 | 180 | 8.59 |
| 74 சிலாபம் | 258 | 41 | 15.89 | 47 | 18.22 | 91 | 35.27 | 52 | 20.16 | 231 | 89.53 | 27 | 10.47 |
| 75. அனுராதபுரம் | 300 | 43 | 14.33 | 56 | 18.67 | 110 | 36.67 | 54 | 18.00 | 263 | 87.67 | 37 | 12.33 |
| 76. தபுத்தேகம | | | | | | | | | | | | | |
| 77. கெக்கிராவை | 406 | 47 | 11.58 | 71 | 17.49 | 157 | 38.67 | 57 | 14.04 | 332 | 81.77 | 74 | 18.23 |
| 78. கலென்பிந்துனுவெவ | 159 | 17 | 10.69 | 30 | 18.87 | 77 | 48.43 | 27 | 16.98 | 151 | 94.97 | 8 | 5.03 |
| 79. கெப்பித்திகொல்லேவ | 146 | 15 | 10.27 | 42 | 28.77 | 66 | 45.21 | 15 | 10.27 | 138 | 94.52 | 8 | 5.48 |

| கல்வி வலயம் | தோற்றியவர் எண்ணிக்கை | மிகச் சிறந்த சித்தி (A) பெற்றவர் | | விசேட திறமைச் சித்தி (B) பெற்றவர் | | திறமைச் சித்தி (C) பெற்றவர் | | சாதாரண சித்தி (S) பெற்றவர் | | சித்தி (A+B+C+S) பெற்றவர் | | சித்தி அடையாதவர் (W) | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % |
| 80. பொலன்னறுவ | 363 | 39 | 10.74 | 71 | 19.56 | 147 | 40.50 | 68 | 18.73 | 325 | 89.53 | 38 | 10.47 |
| 81. ஹிங்குரக் கொடை | 19 | - | - | 1 | 5.26 | 11 | 57.89 | 3 | 15.79 | 15 | 78.95 | 4 | 21.05 |
| 82. திம்புலாகல | 109 | 5 | 4.59 | 16 | 14.68 | 49 | 44.95 | 29 | 26.61 | 99 | 90.83 | 10 | 9.17 |
| 83. பதுளை | 789 | 120 | 15.21 | 182 | 23.07 | 348 | 44.11 | 108 | 13.69 | 758 | 96.07 | 31 | 3.93 |
| 84. பண்டாரவளை | 895 | 73 | 8.16 | 200 | 22.35 | 418 | 46.70 | 172 | 19.22 | 863 | 96.42 | 32 | 3.58 |
| 85. மஹியங்கனை | 7 | - | - | - | - | 4 | 57.14 | 2 | 28.57 | 6 | 85.71 | 1 | 14.29 |
| 86. வெலிமடை | 576 | 85 | 14.76 | 139 | 24.13 | 247 | 42.88 | 84 | 14.58 | 555 | 96.35 | 21 | 3.65 |
| 87. பசறை | 536 | 67 | 12.50 | 98 | 18.28 | 230 | 42.91 | 104 | 19.40 | 499 | 93.10 | 37 | 6.90 |
| 88. வியலுவ | 88 | 9 | 10.23 | 19 | 21.59 | 34 | 38.64 | 18 | 20.45 | 80 | 90.91 | 8 | 9.09 |
| 89. மொனராகலை | 128 | 6 | 4.69 | 18 | 14.06 | 56 | 43.75 | 30 | 23.44 | 110 | 85.94 | 18 | 14.06 |
| 90. வெல்லவாய | 3 | 1 | 33.33 | - | - | 2 | 66.67 | - | - | 3 | 100.00 | - | - |
| 91. பிபிலை | 85 | 6 | 7.06 | 17 | 20.00 | 41 | 48.24 | 14 | 16.47 | 78 | 91.76 | 7 | 8.24 |
| 92. தனமல்வில | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - |
| 93. இரத்தினபுரி | 539 | 36 | 6.68 | 89 | 16.51 | 248 | 46.01 | 112 | 20.78 | 485 | 89.98 | 54 | 10.02 |
| 94. பலாங்கொடை | 365 | 37 | 10.14 | 65 | 17.81 | 154 | 42.19 | 81 | 22.19 | 337 | 92.33 | 28 | 7.67 |
| 95. நிவித்திகல | 225 | 9 | 4.00 | 16 | 7.11 | 78 | 34.67 | 67 | 29.78 | 170 | 75.56 | 55 | 24.44 |
| 96. எம்பிலிபிடிய | 256 | 24 | 9.38 | 60 | 23.44 | 101 | 39.45 | 48 | 18.75 | 233 | 91.02 | 23 | 8.98 |
| 97. கேகாலை | 151 | 26 | 17.22 | 30 | 19.87 | 52 | 34.44 | 32 | 21.19 | 140 | 92.72 | 11 | 7.28 |
| 98. மாவனல்லை | 905 | 176 | 19.45 | 204 | 22.54 | 328 | 36.24 | 123 | 13.59 | 831 | 91.82 | 74 | 8.18 |
| 99. தெஹிஓவிட்ட | 771 | 62 | 8.04 | 141 | 18.29 | 331 | 42.93 | 150 | 19.46 | 684 | 88.72 | 87 | 11.28 |
| மொத்தம் | **66032** | **8593** | **13.01** | **12829** | **19.43** | **25967** | **39.32** | **12092** | **18.31** | **59481** | **90.08** | **6551** | **9.92** |

**அட்டவணை 4**

## 1.2.5 வகுப்பாயிடை அடிப்படையில் புள்ளிகள் பெற்றுள்ள விதம்

| வகுப்பாயிடை | மீடிறன் | சதவீத மீடிறன் | திரள் மீடிறன் | சதவீத திரள் மீடிறன் |
|---|---|---|---|---|
| 91 - 100 | 14 | 0.02 | 83436 | 100.00 |
| 81 - 90 | 1839 | 2.20 | 83422 | 99.98 |
| 71 - 80 | 9281 | 11.13 | 81583 | 97.78 |
| 61 - 70 | 14238 | 17.06 | 72302 | 86.65 |
| 51 - 60 | 16171 | 19.38 | 58064 | 69.59 |
| 41 - 50 | 16545 | 19.83 | 41893 | 50.21 |
| 31 - 40 | 13357 | 16.01 | 25348 | 30.38 |
| 21 - 30 | 7432 | 8.91 | 11991 | 14.37 |
| 11 - 20 | 3498 | 4.19 | 4559 | 5.46 |
| 01 - 10 | 1059 | 1.27 | 1061 | 1.27 |
| 00 - 00 | 2 | 0.00 | 2 | 0.00 |


**அட்டவணை 5**

மேலே தரப்பட்டுள்ள அட்டவணையிலிருந்து தகவல்களைப் பெறும் விதம் கீழே தரப்பட்டுள்ளது.

உ-ம் : இப்பாடத்தில் 9281 மாணவர்கள் 71-80 இற்கும் இடைப்பட்ட வகுப்பாயிடையில் புள்ளிகளைப் பெற்றுள்ளனர். இது 11.13% ஆகும். 16.01% ஆனோர் அதாவது 13357 பேர் 31-40 இற்கும் இடைப்பட்ட புள்ளிகளைப் பெற்றுள்ளனர்.

## 1.3 பாட அடைவு பற்றிய பகுப்பாய்வு


### 1.3.1 வினாப்பத்திரம் I இல் பெறப்பட்ட அடைவு




**வரைபு 1** இது RD/16/05/OL படிவங்கள் மூலம் பெறப்பட்ட தகவல்களைக் கொண்டு தயாரிக்கப்பட்டது. இவ்வரைபிலிருந்து தகவல்களைப் பெறும் முறை பின்வரும் உதாரணம் மூலம் விளக்கப்படுகிறது.

உதாரணம் - மேலே உள்ள வரைபின்படி 20 ஆம் வினாவுக்குச் சரியான விடையளித்தோர் 26% ஆகும். 31 ஆம் வினாவுக்கு சரியான விடையளித்தோர் 90% ஆகும். இதற்கேற்ப 20 ஆம் வினா இலகுதன்மை குறைந்ததாகவும் (கடினமானதாகவும்) 31 ஆம் வினா இலகுதன்மை கூடியதாகவும் (இலகுவானதாகவும்) காணப்படுகின்றன.

### 1.3.2 வினாப்பத்திரம் II - வினாக்கள் தெரிவு செய்யப்பட்டுள்ள விதம்





வரைபு 2 - (RD/16/02/OL படிவத்தை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்டது.)

இவ்வரைபிலிருந்து தகவல்களைப் பெறும் முறை உதாரணம் மூலம் காட்டப்படுகிறது.

உதாரணம் - 1-5 வரையான வினாக்கள் கட்டாயம் தெரிவு செய்யப்பட வேண்டிய வினாக்களாகும். எனினும் முதலாம், இரண்டாம், மூன்றாம் வினாக்களை 99% ஆனோரும் நான்காம், ஐந்தாம் வினாக்களை 98% ஆனோருமே தெரிவு செய்துள்ளனர்.

### 1.3.3 வினாப்பத்திரம் II இல் புள்ளிகள் பெறப்பட்டுள்ள விதம்




வரைபு 3 - (RD/16/02/OL படிவத்தை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்டது.)

இவ்வரைபிலிருந்து தகவல்களைப் பெறும் முறை உதாரணம் மூலம் காட்டப்படுகிறது.

உதாரணம் :

1 ஆம் வினாவுக்கு ஒதுக்கப்பட்ட புள்ளிகள் 20 ஆகும்.

புள்ளி வீச்சு 00-25% இடையில் (0-5 புள்ளிகள்) 28% ஆனோர்,


புள்ளிவீச்சு 26-50% இடையில் (6-10 புள்ளிகள்) 41% ஆனோர்,

புள்ளிவீச்சு 51-75% இடையில் (11-15 புள்ளிகள்) 25% ஆனோர்,

புள்ளிவீச்சு 76-100% இடையில் (16-20 புள்ளிகள்) 6% ஆனோர்

புள்ளிகளைப் பெற்றுள்ளனர்.

## 1.3.4 வினாப்பத்திரம் II இல் பெறப்பட்ட அடைவு





**வரைபு** 4 (இது RD/16/04/OL படிவங்கள் மூலம் பெறப்பட்ட தகவல்களைக் கொண்டு தயாரிக்கப்பட்டது.)

இவ் வரைபிலிருந்து தகவல்களைப் பெறும் முறை பின்வரும் உதாரணம் மூலம் விளக்கப்படுகின்றது.

உதாரணம் :- வினா இலக்கம் 1 இல் உபபிரிவு (viii) இற்கான இலகுச்சுட்டி 0.77 ஆகும். ஆகவே இதன் இலகுதன்மை 77% ஆகும். இதனால் கருதப்படுவது 77% ஆன பரீட்சார்த்திகள் இவ்வினாவுக்குச் சரியாக விடையளித்துள்ளனர் என்பதாகும். இவ்வினாவில் இலகுதன்மை குறைந்த வினாவாக உபபிரிவு (v) காணப்படுகின்றது. இது 12% ஆகும். இதனால் கடினத்தன்மை கூடிய வினாவாக இது காணப்படுகின்றது.

### 1.3.5 வினாப்பத்திரம் III - வினாக்கள் தெரிவு செய்யப்பட்டுள்ள விதம்





இவ் வரைபிலிருந்து தகவல்களைப் பெறும் முறை உதாரணம் மூலம் காட்டப்படுகிறது.

உதாரணம் - 1-4 வரையான வினாக்கள் கட்டாயம் தெரிவு செய்யப்பட வேண்டியவை எனினும் முதலாம் வினாவை 99% ஆனோரும் இரண்டாம் வினாவை 98% ஆனோரும் மூன்றாம் வினாவை 96% ஆனோரும் நான்காம் வினாவை 95% ஆனோரும் தெரிவுசெய்துள்ளனர்.

5, 6, 7 ஆகிய வினாக்கள் தெரிவு வினாக்களாகும். இவற்றுள் 5 ஆம் வினாவை 48% ஆனோரும் 6 ஆம் வினாவை 17% ஆனோரும் தெரிவு செய்துள்ளனர்.

**வரைபு 5** - (RD/16/02/OL படிவத்தை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்டது.)

### 1.3.6 வினாப்பத்திரம் III இல் புள்ளிகள் பெறப்பட்டுள்ள விதம்




இவ்வரைபிலிருந்து தகவல்களைப் பெறும் முறை உதாரணம் மூலம் காட்டப்படுகிறது.

உதாரணம் -
1 ஆம் வினாவுக்கு ஒதுக்கப்பட்ட புள்ளிகள் 20 ஆகும்.

புள்ளி வீச்சு 00-25% இடையில் (0-5 புள்ளிகள்) 30% ஆனோர்,

புள்ளிவீச்சு 26-50% இடையில் (6-10 புள்ளிகள்) 37% ஆனோர்,


புள்ளிவீச்சு 51-75% இடையில் (11-15 புள்ளிகள்) 27% ஆனோர்,

புள்ளி வீச்சு 76-100% இடையில் (16-20 புள்ளிகள்) 6% ஆனோர்

புள்ளிகளைப் பெற்றுள்ளனர்.

**வரைபு 6** - (RD/16/02/OL படிவத்தை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்டது.)

## 1.3.7 வினாப்பத்திரம் III இல் பெறப்பட்ட அடைவு




**வரைபு 7** (இது RD/16/04/OL படிவங்கள் மூலம் பெறப்பட்ட தகவல்களைக் கொண்டு தயாரிக்கப்பட்டது.)

இவ்வரைபிலிருந்து தகவல்களைப் பெறும் முறை பின்வரும் உதாரணம் மூலம் விளக்கப்படுகின்றது.

உதாரணம் :- வினா 1 இல் உபபிரிவு (iv) (ஆ) இன் இலகுதன்மை 80% ஆகவும் உபபிரிவு (v) (அ) இன் இலகுதன்மை 7% ஆகவும் காணப்படுகின்றது.

## பாகம் II

## 2 வினாப்பத்திரத்திற்கு விடையளிக்கப்பட்டுள்ளமை தொடர்பான விபரங்கள்

### 2.1 வினாப்பத்திரம் I உம் அதற்கு விடையளிக்கப்பட்டுள்ளமை தொடர்பான விபரங்களும்

#### 2.1.1 வினாப்பத்திரம் I இன் கட்டமைப்பு

- **நேரம் :- 1 மணித்தியாலம்** **மொத்தம் 40 புள்ளிகள்**
- இவ்வினாப்பத்திரம் நான்கு விடைகளைக் கொண்ட 40 பல்தேர்வு வினாக்களைக் கொண்டது. ஒவ்வொரு வினாவுக்குமுரிய (1), (2), (3), (4) ஆகிய தெரிவுகளில் சரியானதை அல்லது மிகப் பொருத்தமானதைத் தெரிவு செய்தல் எதிர்பார்க்கப்படுகின்றது.
- **எல்லா** வினாக்களுக்கும் விடையளிக்கப்படல் வேண்டும்.
  - 1-20 வரையான வினாக்கள் பெரும்பாலும் மொழிவளத்தையும்
  - 21-30 வரையான வினாக்கள் இலக்கணத்திறனையும்,
  - 31-40 வரையான வினாக்கள் நடைமுறைப் பிரயோகம், வாக்கிய அமைப்பு, கிரகித்தல், பந்தியாக்கம் போன்ற திறன்களையும் மதிப்பிடுவனவாக அமைந்துள்ளன.

### 2.1.2 வினாப்பத்திரம் I

● தடித்த எழுத்தில் அமைந்த சொல் பற்றிய வினாவுக்குப் பொருத்தமான விடையைத் தெரிவுசெய்க.

**1.** 'பண்டே பழகியிருந்தாலும் அறியார் **புல்லர்**.' - இங்கு புல்லர் என்பது
(1) சிறியவர் (2) அறிவிலார் (3) பெரியவர் (4) நல்லோர்

**2.** 'புலங்களோடு **கரணமும்** ஆவியும் போந்து நின்ற...' இங்கு கரணம் என்பது
(1) மனம் (2) உடல் (3) உயிர் (4) முகம்

**3.** 'இன் துணைவன் இராகவனுக்கும் எனக்கும் **மூத்தான்**.' - இங்கு மூத்தான் என்பதன் எதிர்க்கருத்துள்ள சொல்
(1) நண்பன் (2) தம்பி (3) இளையான் (4) மைத்துனன்

**4.** **கலக்கம்** என்ற சொல்லுக்கான எதிர்க்கருத்துச் சொல்
(1) துன்பம் (2) தெளிவு (3) குழப்பம் (4) மயக்கம்

**5.** 'நெருங்கக் காண்பது **கன்னலிற்** செந்நெல்.' - இங்கு கன்னல் என்று சுட்டப்பெறுவது
(1) நெல் (2) புல் (3) வாழை (4) கரும்பு

● பின்வரும் வினா ஒவ்வொன்றுக்கும் பொருத்தமான விடையைத் தெரிவுசெய்க.

**6.** 'வால் வண்டியில் இருப்பது எனக்கு நல்ல குஷி.' - இங்கு 'குஷி' என்ற சொல் தரும் பொருள்
(1) பயம் (2) ஆவல் (3) மகிழ்ச்சி (4) விருப்பம்

**7.** 'சுப்பர் மார்க்கட்' (Super market) என்ற ஆங்கிலச் சொல்லின் தமிழ் வடிவம்
(1) சிறப்பங்காடி (2) நாளங்காடி (3) அல்லங்காடி (4) அங்காடி

**8.** பொருத்தமற்ற சொற்களின் இணைப்பு
(1) சோலை, தோப்பு (2) வாள், வேல்
(3) பாடசாலை, பட்டப்படிப்பு (4) நண்பன், தோழன்

**9.** அரச சபையில் அரசனுக்கு ஆலோசனை வழங்குபவர்
(1) கட்டியக்காரர் (2) அமைச்சர் (3) விகடகவி (4) புலவர்

**10.** தென்னையின் இளையது பிள்ளை என்பது போல பனையின் இளையது
(1) வடலி (2) நாற்று (3) குட்டி (4) முளை

**11.** 'அள்ளி இறைத்தல்' எனும் மரபுத்தொடரின் கருத்து
(1) அதிகமாக இறைத்தல் (2) ஊதாரிச் செலவு
(3) வள்ளண்மை (4) மிகைச் செலவு

**12.** எவ்வளவு உழைத்தாலும் பணத்தைச் சேமிக்காதவனைக் குறிக்கும் மரபுத்தொடர்
(1) ஓட்டைக் கையன் (2) விசிறு கையன் (3) மழைக் கையன் (4) கொடைக் கையன்

**13.** 'பால் நிலவு' என்பது
(1) இணைமொழி (2) அடுக்குத்தொடர்
(3) தொகைநிலைத் தொடர் (4) மரபுத்தொடர்

**14.** பொதுக் கூட்டம் ஒன்றில் தவிசாளர் உரை நிகழ்த்தினார் - இங்கு 'தவிசாளர்' எனக் குறிக்கப்படுபவ
(1) காப்பாளர் (2) தலைவர் (3) செயலாளர் (4) பொருளாளர்

15. உலோபியினுடைய பொருள் பிறரால் களவாடப்படும் எனும் பொருள் தரும் பழமொழி
(1) ஈயார் தேட்டைத் தீயார் கொள்வர்.
(2) அன்னமிட்டவர் வீட்டில் கன்னமிடாதே!
(3) உண்ணாச் சொத்து மண்ணாய்ப் போகும்.
(4) எரிகிற வீட்டில் பிடுங்கினது லாபம்.

16. 'புத்திமான் பலவான்' எனும் பழமொழியின் கருத்து
(1) பலசாலியாக இருப்பவன்தான் புத்திசாலியாக இருப்பான்.
(2) புத்திசாலியான ஒருவன் பல ஆண்களுக்கு நிகராவான்.
(3) புத்திசாலிக்குப் பலம் மிகவும் அவசியமானது.
(4) புத்திசாலியாக இருப்பவனே உண்மையான பலசாலியாவான்.

17. பெற்றோர் தம் மகனை கண்ணுக்குக் கண்ணாக வளர்த்தனர். இங்கு 'கண்ணுக்குக் கண்ணாக' என்ற அருஞ்சொற்றொடரால் உணர்த்தப்படுவது
(1) நெருக்கமாக இருத்தல் (2) கவனமாகப் பார்த்தல்
(3) உறக்கமின்றி வளர்த்தல் (4) நேரடியாக நோக்குதல்

18. (அ) சுற்றுச் சூழல் நன்றாகப் பேணப்படுகின்றது.
(ஆ) நுளம்பின் பெருக்கம் குறித்து அச்சப்படத்தேவையில்லை.
மேற்படி வாக்கியங்களை இணைப்பதற்கு மிகப் பொருத்தமான இணைப்பிடைச் சொல்
(1) எனவே (2) எனினும் (3) அத்துடன் (4) ஆனால்

19. கையும் மெய்யுமாகப் பிடிபட்ட திருடன் திருதிரு என விழித்தான். இங்கு 'திருதிரு' என்பது
(1) அடுக்குத்தொடர் (2) இணைமொழி (3) இரட்டைக்கிளவி (4) அடுக்கிடுக்குத்தொடர்

20. வீட்டின் படுக்கையறையில் பீரோ உள்ளது. இங்கு 'பீரோ' என்பது
(1) ஒல்லாந்து மொழிச்சொல் (2) பிரான்சிய மொழிச்சொல்
(3) ஆங்கில மொழிச்சொல் (4) போர்த்துக்கேய மொழிச்சொல்

- பின்வரும் வினா ஒவ்வொன்றுக்கும் மிகச் சரியான விடையைத் தெரிவுசெய்க.

21. 'கணினிகள் இயங்கியது' என்பது
(1) எண்வழு (2) காலவழு (3) திணைவழு (4) மரபுவழு

22. 'கண்ணன் அலுவலகத்தில் இருந்தான்; அவனைத் தேடி அப்பா வந்தார்.' இவ்வாக்கியத்தில் இடம்பெற்றுள்ள மாற்றுப்பெயர்
(1) கண்ணன் (2) அலுவலகம் (3) அப்பா (4) அவன்

23. பேச்சுப் போட்டியில் குமரன் முதலாம் பரிசு பெற்றான். இங்கு 'பரிசு' என்பது
(1) எழுவாய் (2) பயனிலை
(3) செயப்படுபொருள் (4) அடைமொழி

24. சிறு + குடை என்பதைப் புணர்த்தி எழுதினால் வருவது
(1) சிறுகுடை (2) சிறுக்குடை (3) சின்னக்குடை (4) சிற்குடை

25. இந்தியா விண்வெளியில் ஏவுகணையைச் செலுத்தியது. இங்கு 'ஏவுகணை' என்பது
(1) பண்புத்தொகை (2) உவமைத்தொகை (3) வினைத்தொகை (4) வேற்றுமைத்தொகை

26. அவள் மிக அழகான பொம்மை ஒன்றை வாங்கினாள். இங்கு 'மிக அழகான' என்பது
(1) பெயரெச்சத்தொடர் (2) வினையடைத்தொடர்
(3) பெயர்த்தொடர் (4) பெயரடைத்தொடர்

**27.** பின்வருவனவற்றுள் பின்னொட்டு **ஏற்காத** சொல்

(1) அநீதி (2) நோயாளி
(3) புதுமை (4) அரசியல்

**28.** மழைக் காலமாதலால் வாய்க்காலில் நீர் நிறைந்திருந்தது. இங்கு 'வாய்க்கால்' என்பது

(1) இலக்கணமுடையது (2) இலக்கணப்போலி
(3) எழுத்துப்போலி (4) மரூஉ

● **பொருத்தமற்ற** உதாரணம் இடம்பெற்றுள்ள சொற்றொகுதியைத் தெரிவுசெய்க.

**29.** (1) பெயர்ச்சொல் : கதிரை, மார்கழி, செம்மை
(2) இடுகுறிப்பெயர்: மரம், மலை, மண்
(3) வினைச்சொல் : படி, அலை, நடை
(4) உரிச்சொல் : சால, உறு, நனி

**30.** (1) கூட்டுப்பெயர் : மின்சாரநிலையம், எழுதுகோல், பறிமுதல்
(2) ஆக்கப்பெயர் : முதலாளி, கணையாழி, விடுகாலி
(3) தொழிற்பெயர் : காணுதல், நடத்தல், கூவுதல்
(4) வினையாலணையும்பெயர் : வந்தவன், போனவன், நடந்தவன்

● புள்ளிக் கோடிட்ட இடத்தை நிரப்புவதற்கு மிகப் பொருத்தமான விடையைத் தெரிவுசெய்க.

**31.** நீதிபதி வழக்கு விசாரணையை மறுதிகதிக்கு .......................... வைத்தார்.

(1) தாமதித்து (2) நிறுத்தி (3) முடக்கி (4) ஒத்தி

**32.** இலங்கை மத்திய வங்கி அமெரிக்க டொலருக்கு நிகரான இலங்கை ரூபாவின் .......................... விகிதத்தை அறிவித்துள்ளது.

(1) செலாவணி (2) பிணைமுறி (3) வட்டி (4) நாணயமாற்று

**33.** வெளிநாட்டிலிருந்து அதிக பொருட்களைக் கொண்டு வந்த பயணிக்கு சுங்க அதிகாரிகள் ................... விதித்தனர்.

(1) குற்றம் (2) தண்டனை (3) தீர்வை (4) கட்டணம்

**34.** தேர்தல் காலத்தில் வாக்களிக்கும் நடைமுறைகளை ................................ பல்வேறு நாடுகளிலிருந்தும் பிரதிநிதிகள் வந்துசேர்ந்தனர்.

(1) நிர்வகிக்க (2) பயிற்சியளிக்க (3) பாதுகாக்க (4) கண்காணிக்க

**35.** பாடசாலைக்கு முதலாம் தரத்திற்குப் பிள்ளைகளை அனுமதிப்பது தொடர்பான புதிய ................... கல்வியமைச்சினால் பாடசாலைகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

(1) சுற்றறிக்கை (2) அறிக்கை (3) வர்த்தமானி (4) சட்டமூலம்

● பின்வரும் வாக்கியத்தின் முன்பகுதிக்குப் பொருத்தமான முடிக்கும் சொல்லைத் தெரிவுசெய்க.

**36.** களியாட்ட விழாவைக் காண நண்பர்கள் கூட்டம் மைதானத்திற்குச் ...................

(1) சென்றனர். (2) சென்றது. (3) சென்றார்கள். (4) சென்றன.

● கீழே தரப்பட்டுள்ள பாடலை அடிப்படையாகக் கொண்டு வினாக்களுக்கு விடை தருக.

தேடிச் சோறு நிதம் தின்று - பல
சின்னஞ் சிறு கதைகள் பேசி
வாடித் துன்பம் மிக உழன்று - பிறர்
வாடப் பல செயல்கள் செய்து - நரை
கூடிக் கிழப் பருவம் எய்தி - கொடுங்
கூற்றுக் கிரையெனப் பின் மாயும்
வேடிக்கை மனிதரைப் போலே நான்
வீழ்வேன் என்று நினைத்தாயோ?

**37.** இக் கவிதை உணர்த்தும் அடிப்படையான பொருள்

(1) தற்பெருமை (2) தன்னலம் (3) தன்சரிதை (4) தன்னம்பிக்கை

**38.** இங்கு 'கூற்றுக்கு இரை' என்ற தொடர் குறிப்பது

(1) உணவு (2) மரணம் (3) ஜனனம் (4) யமன்

**39.** 'சின்னஞ்சிறு கதைகள்' என இங்கு குறிப்பிடப்படுவது

(1) மிகச்சிறிய கதைகள் (2) சிறுகதைகள்
(3) பயனற்ற கதைகள் (4) கேலிக்கதைகள்

**40.** கீழே சில வாக்கியங்கள் ஒழுங்கின்றிக் காணப்படுகின்றன. அவற்றை ஒழுங்குபெற வைத்தால் கட்டுக்கோப்பான பந்தியொன்று அமையும். அதற்கேற்ற பொருத்தமான வைப்பு முறையைத் தெரிவுசெய்க.

அ - ஆயினும் தமிழ்நாட்டைப் பற்றியும் தமிழ்மொழியைப் பற்றியும் அவர் ஒரு சிறுகுறிப்பும் குறிக்கவில்லை.

ஆ - இது போலவே அவர் குறிப்பிட்டவொரு காலத்தில் வாழ்ந்தாராயினும் காலத்தைக் கடந்த பொதுக்கருத்துக்களையே கூறினார்.

இ - திருவள்ளுவர் தமிழ்நாட்டில் வாழ்ந்தார். தமிழ்மொழி பேசினார்.

ஈ - அதனால்தான் திருக்குறள் உலகப்பொது நூலாக விளங்குகிறது.

உ - இவ்வாறு இடத்தையும் சூழ்நிலையையும் கடந்து நிலவும் பொதுக் கருத்துக்களை திருக்குறளில் காணலாம்.

(1) ஆ, ஈ, இ, உ, அ (2) இ, அ, ஆ, உ, ஈ
(3) இ, ஆ, அ, ஈ, உ (4) உ, ஆ, ஈ, இ, அ

❋ ❋


### 2.1.3 எதிர்பார்க்கப்பட்ட விடைகளும் புள்ளி வழங்கும் திட்டமும்

#### வினாப்பத்திரம் I புள்ளி வழங்கும் திட்டம்

| வினா இல. | விடை | வினா இல. | விடை |
|---|---|---|---|
| 01 | 2 | 21 | 1 |
| 02 | 1 | 22 | 4 |
| 03 | 3 | 23 | 3 |
| 04 | 2 | 24 | 1 |
| 05 | 4 | 25 | 3 |
| 06 | 3 | 26 | 4 |
| 07 | 1 | 27 | 1 |
| 08 | 3 | 28 | 2 |
| 09 | 2 | 29 | 3 |
| 10 | 1 | 30 | 2 |
| 11 | 4 | 31 | 4 |
| 12 | 1 | 32 | 4 |
| 13 | 3 | 33 | 3 |
| 14 | 2 | 34 | 4 |
| 15 | 1 | 35 | 1 |
| 16 | 4 | 36 | 2 |
| 17 | 2 | 37 | 4 |
| 18 | 1 | 38 | 2 |
| 19 | 3 | 39 | 3 |
| 20 | 2 | 40 | 2 |


**ஒரு விடைக்கு 01 புள்ளி வீதம் மொத்தப் புள்ளிகள் (1 x 40) = 40 புள்ளிகள்**

### 2.1.4 வினாப்பத்திரம் 1 இற்கு விடையளிக்கப்பட்ட விதம் பற்றிய அவதானிப்பும் முடிவுகளும் ஆலோசனைகளும்



| வினா இல. | தொனிப்பொருள் | இலகுதன்மை கூடிய வினாவும் அதன் சதவீதமும் | இலகுதன்மை குறைந்த வினாவும் அதன் சதவீதமும் |
|---|---|---|---|
| 1 - 20 | மொழி வளம் | 3 (87%) | 20 (26%) |
| 21 - 30 | இலக்கணப் பயன்பாட்டுத் திறன் | 22 (68%) | 29 (30%) |
| 31 - 40 | கிரகித்தல், நடைமுறைப் பயன்பாட்டுச் சொற்கள், பந்தியாக்கம் | 31 (90%) | 39 (29%) |

- பகுதி I வினாப்பத்திரம் மாணவர்களுக்குப் பொருத்தமானதாக அமைந்திருந்தது.
- 40 வினாக்களில் 34 வினாக்களுக்கு 40% இற்கு மேலான மாணவர்கள் சரியான விடையைத் தேர்ந்தெடுத்துள்ளனர்.




வினாத்தாள் I இல் 40% ஐ விட குறைந்த இலகுதன்மையைக் கொண்ட வினாக்களும் அவற்றிற்கு சரியாக விடையளித்தோரின் வீதமும் பின்வரும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன.

| தொனிப்பொருள் | வினா இல. | சரியான விடையைத் தெரிவு செய்தோர் வீதம் |
|---|---|---|
| மொழி வளம் | 11 | 39% |
| | 20 | 26% |
| இலக்கணப் பயன்பாட்டுத் திறன் | 29 | 30% |
| | 30 | 39% |
| நடைமுறைப் பிரயோகம், வாக்கிய அமைப்பு, கிரகித்தல், பந்தியாக்கம் | 36 | 30% |
| | 39 | 29% |

**மொழி வளம் (வினா இல 1 - 20)**

**அவதானிக்கப்பட்டவை :**

- 1 - 20 வரையான வினாக்களில் 11, 20 ஆகிய இரு வினாக்களுக்கும் சரியான விடையைத் தெரிவு செய்வதில் மாணவர்கள் இடர்பட்டுள்ளனர்.
- மொழிவளத்தைக் கணிப்பிடும் 1 - 20 வரையான வினாக்களில் 3 ஆம் வினாவிற்கு 88% ஆனோர் சரியாக விடையளித்துள்ளனர்.
- வினா இலக்கம் 20 இற்கு 26% ஆனோர் மாத்திரமே சரியாக விடையளித்துள்ளனர்.
- தமிழ் மொழியில் கலந்துள்ள பிறமொழிச் சொற்கள் பற்றிய விளக்கம் போதியளவு இன்மையால் இவ்வினாவுக்குச் சரியாக விடையளிப்பதில் இடர்பட்டுள்ளனர்.

**ஆலோசனைகள் :**

**வினா இலக்கம் 11**

மரபுத் தொடர்களின் நேரடிப் பொருள் அல்லாது உட்பொருளை விளங்கிக்கொள்ளக் கூடியதாக பயிற்சிகளை வழங்குதல். மரபுத்தொடர்களின் பொருள் விளங்கும் வகையில் வாக்கியங்களை அமைக்கப் பயிற்சிகள் வழங்குதல்.

**வினா இலக்கம் 20**

- வகுப்பறையில் பிறமொழிச் சொற்கள் கொண்ட பட்டியலைக் காட்சிப்படுத்துதல்.
- பிறமொழிச் சொற்களின் தொகுதியைக் காட்சிப்படுத்தி, அவற்றை இனங்கண்டு கொள்வதற்கான பயிற்சிகளை வழங்குதல்.
- உணவு, அன்றாடப் பொருட்கள், ஆடை முதலானவை தொடர்பாக வழங்கிவரும் பிறமொழிச் சொற்களைத் தேடித் தொகுத்து அவை எம்மொழிச் சொற்கள் என்பதை இனங்கண்டு வகைப்படுத்தச் செய்தல்.

**இலக்கணப் பயன்பாட்டுத் திறன் : (வினா இல 21 - 30)**

**அவதானிக்கப்பட்டவை :**

இலக்கணப் பயன்பாட்டுத் திறனைக் கணிப்பிடும் 21 - 30 வரையான வினாக்களில் வினா 29, 30 ஆகிய வினாக்களுக்கு 40% இற்குக் குறைவான பரீட்சார்த்திகளே சரியான விடையைத் தேர்ந்தெடுத்துள்ளனர்.

- இவ்விரு வினாக்களிலும் கொடுக்கப்பட்ட சொற்கூட்டத்தில் பொருத்தமற்ற உதாரணம் உள்ள சொல்லை இனங்கண்டு கொள்ள முடியாமை.
- வினா 29 இல் தொழிற் பெயருக்கும் வினைச் சொல்லுக்கும் இடையிலான வேறுபாட்டைக் காணமுடியாமை.
- வினா 30 இல் ஆக்கப் பெயர்களுக்கும் தனிப்பெயர்ச் சொற்களுக்கும் இடையிலான வேறுபாட்டை விளங்கிக்கொள்ளாமை.

**ஆலோசனைகள் :**

- வினாவின் முற்பகுதியில் தரப்பட்டுள்ள இலக்கணப் பாகுபாடுகளுக்கு உரிய வரைவிலக்கணங்களைச் செம்மையுற விளக்குதலும் அதனூடாக அவற்றுக்குரிய உதாரணங்களை இனங்காணச்செய்தலும்.

**நடைமுறைப் பயன்பாட்டுச் சொற்கள், கிரகித்தல், பந்தியாக்கம் (வினா இல 31 - 40)**

**அவதானிக்கப்பட்டவை :**

36, 39 ஆகிய வினாக்களுக்கு அதிகளவு பரீட்சார்த்திகள் சரியாக விடையளிக்கத் தவறியுள்ளனர்.

**வினா இலக்கம் 36**

எழுவாய், பயனிலை இயைபு பற்றிய தெளிவின்மை. நண்பர்கள் 'கூட்டம்' என்பதே எழுவாய் ஆகும். இதில் கூட்டம் என்பது அ.்.றிணை ஒருமைச் சொல் என்பதை இனங்காணத் தவறியமை. பலரும் நண்பர்கள் என்பதே எழுவாய் என்று கருதியிருந்தமை.

**வினா இலக்கம் 39**

இப்பாடலில் 'சின்னஞ்சிறு கதைகள்' என்ற தொடரின் பொருள் 'வாடித் துன்பம் மிக உழன்று' என்ற தொடருடன் பொருத்திப் பார்க்கும்போதே 'பயனற்ற கதைகள்' என்ற கருத்து வெளிப்படும் என்பதைப் பரீட்சார்த்திகள் விளங்கிக் கொள்ளாமை.

**ஆலோசனைகள் :**

**வினா இலக்கம் 36**

வாக்கியங்களில் எழுவாய்ச் சொல்லை இனம்காண வழிப்படுத்தல்.

எழுவாய் பயனிலை இயைபு பற்றி எடுத்துக்காட்டுதலும் பயிற்சிகளை வழங்குதலும்.

**வினா இலக்கம் 39**

பாடலின் கருத்தையும் அதனது புலப்பாட்டுத்திறனையும் விளங்கிக் கொள்ளும் முறையினை எடுத்துக்காட்டுகள் மூலம் விளக்குதல்.

## 2.1.5 வினாப்பத்திரம் I இல் பல்தேர்வு வினாக்களுக்கு விடைகளைத் தெரிவுசெய்துள்ள விதம் (சதவீதத்தில்)

| வினா இலக்கம் | சரியான தெரிவு | தெரிவு செய்யப்பட்ட தெரிவின் வீதம் | | | | விடுபட்டோர் |
|---|---|---|---|---|---|---|
| | | 1 | 2 | 3 | 4 | |
| 1 | 2 | 3.80 | **85.00** | 4.27 | 6.80 | 0.13 |
| 2 | 1 | **49.53** | 24.93 | 22.40 | 2.83 | 0.31 |
| 3 | 3 | 2.03 | 4.10 | **86.60** | 7.20 | 0.07 |
| 4 | 2 | 2.73 | **81.03** | 9.67 | 6.43 | 0.14 |
| 5 | 4 | 12.07 | 14.83 | 4.63 | **68.20** | 0.27 |
| 6 | 3 | 1.50 | 2.53 | **72.00** | 23.73 | 0.24 |
| 7 | 1 | **74.90** | 6.70 | 9.23 | 8.70 | 0.47 |
| 8 | 3 | 17.97 | 33.90 | **40.13** | 7.53 | 0.47 |
| 9 | 2 | 4.10 | **78.00** | 6.13 | 11.50 | 0.27 |
| 10 | 1 | **85.97** | 5.57 | 5.00 | 3.23 | 0.23 |
| 11 | 4 | 13.50 | 32.10 | 15.17 | **39.07** | 0.16 |
| 12 | 1 | **80.23** | 8.80 | 3.43 | 7.30 | 0.24 |
| 13 | 3 | 18.77 | 7.90 | **59.47** | 13.73 | 0.13 |
| 14 | 2 | 6.73 | **42.80** | 40.67 | 9.47 | 0.33 |
| 15 | 1 | **44.87** | 8.53 | 36.33 | 10.03 | 0.24 |
| 16 | 4 | 3.70 | 8.17 | 4.07 | **84.03** | 0.03 |
| 17 | 2 | 10.20 | **81.07** | 4.93 | 3.67 | 0.13 |
| 18 | 1 | **86.23** | 4.40 | 4.33 | 4.97 | 0.07 |
| 19 | 3 | 9.97 | 6.80 | **79.63** | 3.53 | 0.07 |
| 20 | 2 | 32.73 | **26.00** | 16.57 | 24.40 | 0.3 |
| 21 | 1 | **58.10** | 21.27 | 14.60 | 5.87 | 0.16 |
| 22 | 4 | 7.60 | 12.97 | 10.93 | **68.17** | 0.33 |
| 23 | 3 | 14.33 | 19.33 | **56.27** | 9.73 | 0.34 |
| 24 | 1 | **47.50** | 13.33 | 26.70 | 12.13 | 0.34 |
| 25 | 3 | 16.07 | 10.10 | **54.70** | 18.93 | 0.2 |
| 26 | 4 | 23.60 | 19.13 | 6.00 | **50.90** | 0.37 |
| 27 | 1 | **42.20** | 16.33 | 18.63 | 22.47 | 0.37 |
| 28 | 2 | 19.80 | **46.37** | 9.63 | 23.87 | 0.33 |
| 29 | 3 | 46.97 | 13.93 | **30.40** | 8.37 | 0.33 |
| 30 | 2 | 33.60 | **39.00** | 12.67 | 14.47 | 0.26 |
| 31 | 4 | 4.50 | 3.07 | 1.77 | **90.30** | 0.36 |
| 32 | 4 | 10.13 | 3.97 | 18.73 | **67.00** | 0.17 |
| 33 | 3 | 3.53 | 12.77 | **61.57** | 21.90 | 0.23 |
| 34 | 4 | 19.00 | 4.60 | 5.77 | **70.40** | 0.23 |
| 35 | 1 | **47.23** | 33.13 | 7.83 | 11.47 | 0.34 |
| 36 | 2 | 30.93 | **29.87** | 29.77 | 9.33 | 0.10 |
| 37 | 4 | 22.27 | 10.93 | 10.60 | **55.80** | 0.40 |
| 38 | 2 | 37.77 | **39.70** | 7.90 | 14.30 | 0.33 |
| 39 | 3 | 23.57 | 20.80 | **29.03** | 26.43 | 0.17 |
| 40 | 2 | 2.00 | **81.53** | 13.40 | 2.83 | 0.24 |

ஒவ்வொரு வினாவின் கீழும் சரியான விடையைத் தெரிவு செய்த மாணவர் சதவீதம் நிழற்றிக் காட்டப்பட்டுள்ளது.

விடுபட்டோர் (Missing) என்பதால் காட்டப்படுவது வினாவிற்கு தெரிவுகளை மேற்கொள்ளாத அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட தெரிவுகளை மேற்கொண்ட மாணவர்களின் சதவீதம்.

**வினாப்பத்திரம் I இன் பல்தேர்வு வினாக்களுக்கு விடைகளைத் தெரிவு செய்துள்ள விதத்தில் விசேடமாகக் குறிப்பிடத்தக்க அம்சங்கள்**

**I. மொழி வளம் - வினா 1 - 20**

வினா இலக்கம் 1, 3 ஆகியன இலக்கியத்தோடு தொடர்புபட்டவையாக அவர்களுக்குப் பரிச்சயமானவையாக இருப்பதனால் பரீட்சார்த்திகள் இலகுவில் விடையளித்துள்ளனர். அதுபோல் மரபுப் பெயர் தொடர்பான பத்தாம் வினாவும் பரிச்சயமானதே. வினா இல 16 இல் வழங்கப்பட்ட பழமொழி பரிச்சயமானது. வினா இல 18 இல் வழங்கப்பட்ட இணைப்பிடைச் சொல் மிகவும் இலகுவானதாக அமைந்தமையால் பெரும்பாலான பரீட்சார்த்திகள் சரியான விடையை தெரிவுசெய்துள்ளனர்.

வினா இல. 8, 14, 15 ஆகியவற்றுக்கு 40 - 45 சதவீதமான பரீட்சார்த்திகளே சரியான விடையைத் தெரிவு செய்துள்ளனர். இவை கடினத்தன்மை வாய்தவையாகக் கொள்ளலாம். குறிப்பாக பொருத்தமற்ற சொற்களின் இணைப்பு பற்றிய 8 ஆம் வினாவுக்குப் பிழையான விடையான இல 2 இனை பரீட்சார்த்திகள் தெரிவு செய்துள்ளனர். பொருத்தமற்ற என்ற சொல்லைக் கவனத்திற் கொள்ளாமையும் இதற்குக் காரணம் எனலாம். அத்துடன் இவ்வினா, மொழி பற்றியது மட்டுமல்ல சிறிது பொது விவேகம் பற்றியதுமாகும்.

வினா இல. 14 இல் ‘தவிசாளர்’ என்று தற்போது நடைமுறையில் அதிகம் பயன்படுத்தப்படும் சொல்லை பரீட்சார்த்திகள் தெரிந்திருக்கவில்லை. இவை போன்ற சொற்கள் பற்றிய பயிற்சி அவசியம்.

வினா இல. 15 இல் பழமொழி தொடர்பான வினாவில் பிழையான 3 ஆவது தெரிவைக் கணிசமான பரீட்சார்த்திகள் தெரிவு செய்துள்ளனர். நடைமுறையில் உள்ள பழமொழிகள் பற்றிய பயிற்சி அவசியமானது. 26% ஆனோரே வினா இல 20 க்கு சரியான விடையைத் தெரிவு செய்துள்ளனர். பிழையான விடையான 1 ம் தெரிவையே 30.7% ஆனோர் தெரிவு செய்துள்ளமை இங்கு கவனத்திற் கொள்ள வேண்டிய ஒன்றாகும். பிற மொழிகளிலிருந்து தமிழ் மொழியில் கலந்த சொற்களை பரீட்சார்த்திகளுக்கு வகைப்படுத்தத் தெரியவில்லை.

**II. இலக்கணப் பயன்பாட்டுத்திறன் - வினா 21 - 30**

வினா இலக்கங்கள் 24, 26, 27, 28, 29, 30 முதலியவற்றிற்கான சரியான விடைகளைத் தெரிவு செய்தோர் 51% திற்குக் குறைவான பரீட்சார்த்திகளே.

வினா இல. 26 - பெயர், பெயர் அடை, பெயரெச்ச வினையடை தொடர்கள் பற்றிய தெளிவான விளக்கமின்மையைப் புலப்படுத்துகின்றது.

வினா இல. 27 - முன்னொட்டு, பின்னொட்டு தொடர்பானது. இவை அமையுமாற்றை பரீட்சார்த்திகள் அறியத் தவறியுள்ளனர்.

வினா இல. 28 - தகுதி வழக்கின் வகைகள் அமையுமாற்றைத் தெளிவுற விளங்கத் தவறியுள்ளனர்.

வினா இல. 29 - இவ் வினாவுக்குச் சரியான விடையளித்தோர் 30.49% த்தினர் மட்டுமே. அதேவேளை பிழையான விடையான 1 ஆவது தெரிவைத் தெரிவு செய்தோர் 46.9% ஆகும். இவ்வினா சொற்களின் வகைகள் பற்றியதாகும். இங்கு சரியான விடையெனக் கருதப்படும் 'நடை' என்பது தொழிற் பெயர். அது வினைச் சொல் அல்ல. வினை அடியுடன் தொழிற் பெயர் விகுதிகள் சேர்ந்து தொழிற்பெயர் ஆக்கப்படுவது பற்றிய தெளிவின்மை புலப்படுகின்றது. அதேவேளை அதிகமானோர் விடையளித்த பெயர்ச்சொல் வரிசையில் செம்மை என்பது பண்புப் பெயர் என்பதை பரீட்சார்த்திகள் உணரத் தவறியுள்ளனர்.

வினா இல. 30 - கூட்டுப்பெயர், ஆக்கப்பெயர் என்பவற்றிற்கிடையிலான வேறுபாட்டை அறியத் தவறியுள்ளனர். அடை, ஒட்டுக்கள், கூட்டுப்பொருள், ஆக்கப்பெயர் பற்றிய தெளிவான விளக்கம் அவசியம்.

**III. நடைமுறை பிரயோகச் சொற்கள், கிரகித்தல், பந்தியாக்கம் - வினா 21 - 30**

வினா இல. 31 - பொருத்தமற்ற கவனக்கலைப்பான்கள் வழங்கப்பட்டமையால் பரீட்சார்த்திகள் சரியான விடையை இலகுவில் இனங்கண்டுள்ளனர். இதற்கு 90.3% த்தினர் சரியான விடையைத் தெரிவு செய்துள்ளனர்.

வினா இல. 35 - சரியான விடையைத் தெரிவு செய்தோர் 47.23% த்தினர் ஆவர். அதே வேளை பிழையான விடையான 2 ஆவது தெரிவைத் தெரிவு செய்தோர் 33.13% ஆவர். சுற்றறிக்கைக்கும் அறிக்கைக்குமிடையே உள்ள வேறுபாட்டை அறியத்தவறியுள்ளனர். நிர்வாகம் தொடர்பாக நடைமுறையில் உள்ள சொற்களை இனங்காணச் செய்தல் அவசியம்.

வினா இல 36 - சரியான விடையைத் தெரிவு செய்தோர் 29.87% த்தினர் மட்டுமே என்பது இங்கு சுட்டிக்காட்டப்பட வேண்டிய ஒன்றாகும். அதேவேளை பிழையான தெரிவுகளான 1 ஐயும் 3 ஐயும் தெரிவு செய்தோர் முறையே 30.93%, 29.77% த்தினர் ஆவர். இங்கு பரீட்சார்த்திகளின் தெரிவு மிக நெருக்கமாக இருப்பதைக் காணலாம். இங்கு இவ்வினா நெருக்கமான கவனக்கலைப்பான்களைக் கொண்ட சிறந்த வினாவாக அமைகிறது.

வினா இல 38 - சரியான விடையளித்தோர் 39.70% இனர் ஆகும். அதே வேளை பிழையான 1 ஆம் தெரிவை தெரிவுசெய்தோர் 37.77% இனர் ஆகும். இங்கு இத்தெரிவுக்குக் காரணம் கூற்றுக்கு இரை என்ற தொடர் முழுவதையும் கருத்திற் கொள்ளாது இரை என்பதைக் கருத்திற்கொண்டு விடையளித்தமையே ஆகும். செய்யுளின் சொற்கள் குறிக்கும் மறைமுகமான கருத்துக்கள் பற்றித் தெளிவுறுத்துதல் அவசியம்.

வினா இல 39 - சரியான விடையைத் தெரிவு செய்தோர் 29.03% ஆகும். ஏனைய விடைகளும் சரியான விடைக்கு நெருக்கமாக அமைந்தமையால் அவை ஒவ்வொன்றையும் கணிசமானோர் தெரிவு செய்துள்ளனர். இது நல்லதொரு வினாவாக அமைந்துள்ளது.

## 2.2 வினாப்பத்திரம் II உம் அதற்கு விடையளிக்கப்பட்டுள்ளமை தொடர்பான விபரங்களும்

### 2.2.1 வினாப்பத்திரம் II இன் கட்டமைப்பு

- **நேரம் :- 2 மணித்தியாலங்கள்** **மொத்தம் 80 புள்ளிகள்**
- இவ்வினாப்பத்திரம் 5 வினாக்களைக் கொண்டது. எல்லா வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.

1. குறுவிடை வினாக்கள் 10. ஒரு வினாவுக்கு 2 புள்ளிகள் வீதம் மொத்தம் 20 புள்ளிகள்
2. கட்டுரை எழுதுதல். வழிகாட்டற் குறிப்புகளுடனான **நான்கு** கருப்பொருள்களுள் ஒன்றினைத் தெரிவு செய்தல் வேண்டும் - 25 புள்ளிகள்
3. சுருக்கம் எழுதுதல் - 10 புள்ளிகள்
4. கிரகித்தல் தொடர்பான வினாக்கள் - 10 புள்ளிகள்
5. நடைமுறைத் தேவைகளுக்காக எழுதுதல் - 15 புள்ளிகள்

**வினாப்பத்திரம் II இற்கான மொத்தப் புள்ளிகள் = 20+25+10+10+15 = 80 புள்ளிகள்**

## 2.2.2. வினாப்பத்திரம் II இல் எதிர்பார்க்கப்பட்ட விடைகளும், புள்ளி வழங்கும் திட்டமும், விடையளித்தல் தொடர்பான அவதானிப்பும் முடிவுகளும் ஆலோசனைகளும்

**வினா இல. 1**

**1. சுருக்கமான விடை எழுதுக.**

**1.** சுருக்கமான விடை எழுதுக.

(i) பின்வரும் தொடரைச் சந்திபிரித்து எழுதுக.
'பொலிந்தசெழுந்தாதிறைக்கும்'

(ii) "என்மேல சந்தேகமா? நேத்து பெரியவரே என்கிட்ட சொன்னாரு" என்ற பேச்சு வழக்கு வாக்கியத்தை எழுத்து வழக்காக மாற்றி எழுதுக.

(iii) பின்வரும் வாக்கியத்துக்குப் பொருத்தமான நிறுத்தக்குறிகளையிட்டு அதனை மீண்டும் எழுதுக.
காகம் கண்டதைத் தின்னும் ஒரு பறவையான போதும் தனது உடம்பைத் தூய்மையாக வைத்துக்கொள்கிறது

(iv) 'சுந்தரனார் நேற்றுமாலை இறையடி சேர்ந்தார்' என்பதில் மங்கல வழக்காக அமைந்த தொடர் யாது?

(v) 'நான் அந்தப் பணியைச் செய்யமாட்டேன்' என்பதில் இடம்பெற்றுள்ள எதிர்மறை இடைநிலை யாது?

(vi) 'தறி' என்ற சொல் பெயராகவும் வினையாகவும் அமையுமாறு ஒவ்வொரு வாக்கியம் எழுதுக.

(vii) 'சூரியன் தவிதவிக்கும் நெடுஞ்சாலையோரம் வெயிலை உதறி எறிந்தவாறு நடக்கிறாள் மூதாட்டி'
இந்த வாக்கியத்திலுள்ள எழுவாய், பயனிலையை எடுத்துக்காட்டுக.

(viii) (அ) பாடசாலையின் அடுத்த தவணை ஜனவரி 8 ஆம் திகதி ஆரம்பமாகும்.
(ஆ) மாணவர்கள் யாவரும் சீருடை அணிந்து பாடசாலைக்கு வரவேண்டும்.
இவ்விரு வாக்கியங்களில் அறிவித்தலாக அமைந்த வாக்கியம் எது? அறிவுறுத்தலாக அமைந்த வாக்கியம் எது?

(ix) நான் கண்டிக்குச் சென்றேன்.
நீ கண்டிக்குச் சென்றாய்.
அவள் கண்டிக்குச் சென்றாள்.
இம் மூன்று வாக்கியங்களையும் இணைத்து தனியொரு வாக்கியமாக எழுதுக.

(x) மாதிரி நிகழ்ச்சிநிரலொன்றுக்கு ஏற்ற விதத்தில் பின்வரும் நிகழ்ச்சிகளை ஒழுங்குபடுத்தி மீண்டும் எழுதுக.
வரவேற்புரை, நன்றியுரை, மங்கல விளக்கேற்றல், தலைமையுரை, பரிசில் வழங்கல், சிறப்புரை

(20 புள்ளிகள்)

## 1 ஆம் வினாவிற்கு எதிர்பார்க்கப்பட்ட விடைகளும் புள்ளிவழங்கும் திட்டமும் :

**வினா இல. 1**

(i) "பொலிந்தசெழுந்தாதிறைக்கும்"

பொலிந்த + செழும் + தாது + இறைக்கும்

(ii) என்மேல் / என்னிடத்தில் சந்தேகமா? நேற்று பெரியவரே

என்னிடம் / என்னிடத்தில் சொன்னார்.

(iii) காகம், கண்டதைத் தின்னும் ஒரு பறவையான போதும், தனது உடம்பைத் தூய்மையாக வைத்துக்கொள்கிறது.

(vi) இறையடி சேர்ந்தார்.

(v) மாட்டு

(vi) தறி - பெயர் (தூண், முளை, நெசவு இயந்திரம், முரசு அடிக்கும் தடி)

எடுத்துக்காட்டு : கனகம் கைத்தறிப் புடைவை கட்டினாள்.

தறி - வினை (வெட்டுதல், பிரித்தல்)

எடுத்துக்காட்டு : மரத்தைத் தறித்தான்.

(vii) மூதாட்டி - எழுவாய்

நடக்கிறாள் - பயனிலை

(viii) அ - அறிவித்தல்

ஆ - அறிவுறுத்தல்


(ix) நானும் நீயும் அவளும் கண்டிக்குச் சென்றோம்.

(x) மங்கல விளக்கேற்றல், வரவேற்புரை, தலைமையுரை, சிறப்புரை, பரிசில் வழங்கல், நன்றியுரை

(2 × 10 = 20 புள்ளிகள்)

## 1ஆம் வினாவிற்கு விடையளித்துள்ளமை தொடர்பான அவதானிப்புகளும் முடிவுகளும் :


**1ஆம் வினாவுக்கு புள்ளிகள் பெற்றுள்ள விதம்**




முதலாம் வினா கட்டாயம் விடையளிக்க வேண்டிய வினாவாகும். இதற்கு 99% ஆனோர் விடையளித்துள்ளனர். இவ்வினாவிற்கான மொத்தப் புள்ளிகள் 20 ஆகும்.

16-20 வரையான வீச்சில் 6% ஆனோரும்
11-15 வரையான வீச்சில் 25% ஆனோரும்
06-10 வரையான வீச்சில் 41% ஆனோரும்
00-05 வரையான வீச்சில் 28% ஆனோரும்
புள்ளிகளைப் பெற்றுள்ளனர்.

இவ்வினாவிற்கு 6 சதவீதத்தினர் 16 அல்லது அதற்கு மேற்பட்ட புள்ளிகளைப் பெற்றிருக்கும் அதேவேளை 28 சதவீதமானோர் 5 அல்லது அதற்கு குறைவான புள்ளிகளைப் பெற்றுள்ளனர்.




வினாப்பத்திரம் II இல் குறுவினாக்கள் கொண்ட 1 ஆம் வினாவில் உபபிரிவு (viii) இலகுதன்மை கூடியதாக அமைந்துள்ளது. உபபிரிவு (v) இலகுதன்மை குறைந்ததாகக் காணப்படுகின்றது.

**குறைந்த அடைவு மட்டத்தைப் பெற்ற பரீட்சார்த்திகளின் விடைகளில் அவதானிக்கப்பட்டவை.**

**வினா இலக்கம் 1**

வினா i. பொருளுக்கேற்ப பாடல் அடியினை சந்திபிரித்தலில் இடர்ப்பட்டமை.

ii. பேச்சுவழக்குச் சொற்களை எழுத்துவழக்காக மாற்றுவதில் சிரமத்தை எதிர்நோக்கியமை.

v. 'மாட்டு' என்பது எதிர்மறை இடைநிலை என்ற தெளிவின்மையால் சரியான விடை எழுதத் தவறியமை.

vi. 'தறி' என்ற சொல்லை பெயராகவும் வினையாகவும் தனித்தனி வாக்கியங்களில் எழுதாமை. எழுதப்பட்ட வாக்கியங்கள் கருத்துத் தெளிவின்றி இருந்தமை.
உதாரணமாக அவனது வீட்டில் 'தறி' ஒன்று இருந்தது. இங்கு 'தறி' என்பது எதனைக் குறிக்கின்றது என்ற தெளிவின்மை.

x. நிகழ்ச்சிகளை ஒழுங்குபடுத்தி நிகழ்ச்சி நிரலை எழுதுவதில் சிரமத்தை எதிர்நோக்கியமை.

**அடைவு மட்டத்தை அதிகரிப்பதற்கான ஆலோசனைகள்**

- செய்யுட் பகுதிகளைக் கற்பிக்கும்போது பொருள் விளங்கும் வகையில் பதம் பிரித்துக் காட்டுதல்.
- பொருளுக்கேற்ப சந்திபிரித்து எழுதும் பயிற்சிகள் வழங்குதல்.
- அன்றாடம் மாணவர்கள் பேசும் பேச்சுவழக்குச் சொற்களையும், வேறு பிராந்தியங்களில் வழங்கும் பேச்சுவழக்குச் சொற்களையும் தொகுத்து எழுதச் செய்து, அவற்றை எழுத்து வழக்காக மாற்றி எழுதுவித்தல்.
- 'செய்ய மாட்டேன்' என்பதை செய் + மாட்டு + ஏன் என பகுத்துக்காட்டி 'மாட்டு' என்பது தற்கால மொழிவழக்கில் எதிர்மறை இடைநிலையாக வழங்குவதை விளக்குதல். எதிர்மறை இடைநிலைகள் சொற்றொடர்களில் இடம்பெறும் விதத்தை உதாரணங்கள் காட்டி விளக்குதல்.
- பெயராகவும் வினையாகவும் வரக்கூடிய சொற்களை வழங்கி அவற்றைக் கருத்துத் தெளிவுடன் பெயராகவும் வினையாகவும் அமையத்தக்க வகையில் தனித்தனி வாக்கியங்களில் எழுதப் பயிற்சியளித்தல்.
- நிகழ்ச்சிகளை முறைப்படி ஒழுங்கமைத்து எழுதுவதற்கேற்ற நடைமுறைப் பயிற்சிகளை வழங்குதல்.

வினா இல. 2

**2.** பின்வருவனவற்றுள் **ஒன்றைத்** தெரிவுசெய்து, ஏறத்தாழ **250** சொற்களில் அமையுமாறு விடை எழுதுக. நீங்கள் தெரிவுசெய்த விடயத்துக்குப் பொருத்தமான தலையங்கம் இடுக.

(i) இன்று உலகில் காலநிலை மாற்றங்களால் பல அனர்த்தங்கள் ஏற்படுகின்றன. நமது நாட்டிலும் அவ்வாறே பல சம்பவங்கள் நடந்தேறியுள்ளன. நிலச்சரிவு, கடற்சீற்றம், வெள்ளப்பெருக்கு எனப்பலவாறாக இவை நிகழ்ந்துள்ளன. இவற்றுக்கு இயற்கை மட்டுமன்றி நாமும் ஒரு காரணமாக இருக்கிறோம். எனவே அனர்த்தங்கள் ஏற்படாதவாறு நம்நாட்டைப் பாதுகாக்க வேண்டும் என்ற பொருளில் ஒரு **விளக்கக் கட்டுரை.**

(ii) வருடந்தோறும் சர்வதேச மகளிர் தினம் கொண்டாடப்படுகிறது. பெண்கள் நமது சமூகத்தின் உயிர்த்துடிப்பான பங்காளிகள். தாய், சகோதரி, தாரம், மகள் என அவர்கள் குடும்பத்தில் வாழ்பவர்கள். அதற்கும் மேலே பல வழிகளிலும் உழைப்பவர்கள். அவர்களைப் போற்றுதலும் பாதுகாத்தலும் நம் கடமை என்ற பொருளில் ஒரு **மேடைப்பேச்சு.**

(iii) இன்று இலத்திரனியல் ஊடகங்களூடாகவும் அறிவுப்பரப்புகை நிகழ்கிறது. குறிப்பாக இணையம், தொலைக்காட்சி ஆகியவற்றின் மூலம் இது பெரும்பாலும் நடைபெறுகிறது. இதனால் பாரம்பரியமான வாசிப்புப் பழக்கமும் அதனால் பெற்றுக்கொள்ளத்தக்க அறிவும் நம்மிடையே அருகி வருகின்றன. இணையம் முதலானவற்றினூடாகப் பெறப்படும் அறிவே சிறந்தது என வாதிடும் ஒருவருக்கும் நூல்வழி வாசிப்பினூடாகப் பெறப்படும் அறிவே சிறந்தது என வாதிடும் இன்னொருவருக்கும் இடையிலான **உரையாடல்.**

(iv) 'கண்ணன் எனது வகுப்பில் வந்து சேர்ந்தபோது, அவன் மற்ற மாணவர்களைப் போல இருக்கவில்லை. படிப்பில் நாட்டமற்று இருந்தான். எனினும் அவன்மீது கவனம் கொண்டு சிறிது சிறிதாக அவனை உருவாக்கினேன். இன்று அவன் கல்வியில் முன்னேறி மிகப்பெரிய பட்டங்களையும் பதவியையும் பெற்றவனாக இருக்கிறான். அவனை உருவாக்க ஆசிரியராக இருந்து நான் பட்ட பாடுகள் எண்ணிலடங்கா...' என்று தொடங்கும் ஒரு **சிறுகதை.**

(25 புள்ளிகள்)

## 2 ஆம் வினாவிற்கு எதிர்பார்க்கப்பட்ட விடைகளும் புள்ளி வழங்கும் திட்டமும் :

(i) **விளக்கக் கட்டுரை**

**இயற்கை அனர்த்தங்களிலிருந்து நாட்டைப் பாதுகாப்போம் / அனர்த்தங்கள் ஏற்படாது பாதுகாக்கும் வழிமுறைகள் / அனர்த்தங்களுக்கான காரணங்களும் தீர்வுகளும்**
**(இவை போன்ற தலைப்புக்கள்)**

- உலக நாடுகள் பலவற்றிலும் நமது நாட்டிலும் ஏற்பட்டுள்ள பல்வேறு அனர்த்தங்கள்.
  - சுனாமி - கடற்பேரலைத் தாக்கம்
  - வெள்ளப்பெருக்கு
  - சூறாவளி
  - மண்சரிவு
  - குப்பை மேட்டுச் சரிவு
- அனர்த்தங்களுக்கான காரணங்கள்
  - இயற்கை (உலகில் ஏற்பட்டு வரும் காலநிலை மாற்றங்கள்)
  - மனித செயற்பாடுகள் (காடழிப்பு, நீர்நிலைகளின் மீதான ஆக்கிரமிப்பு, மண் அகழ்வு, மலைக்குடைவு, திண்மக் கழிவகற்றல் குறைபாடுகள்)
  - பாதுகாக்கும் வழிமுறைகள்
  - பொதுமக்களுக்கான அறிவூட்டல் / விழிப்புணர்வு ஊட்டுதல்.
  - காட்டு வளம், மண்வளம் பேணுதல்
  - நீர்நிலைகளைப் பாதுகாத்தல்
  - திண்ம, திரவ கழிவகற்றல் முகாமை
  - அனர்த்த முகாமைத்துவம்

(ii) **மேடைப்பேச்சு**

**பெண்களைப் போற்றுவோம், பாதுகாப்போம்**

**பெண்மையை உயர்வு செய்வோம்.**

**பெண்கள் சமூகத்தின் கண்கள்**

**சமூகத்தின் உயிர்த்துடிப்புள்ள பங்காளிகளே பெண்கள்**

**(இவை போன்ற தலைப்புகள்)**

- அவதானிப்புக்குரியவை
  - சபையோரை விளித்தல், வணக்கம் கூறுதல்
  - பேசப்போகும் தலைப்பைத் தொடர்புபடுத்திப் பேசுதல்.

- உள்ளடங்க வேண்டியவை
  - பல்வேறு நிலையிலும் பெண்ணின் வகிபாகம்
  - பெண்ணின் பெருமையைப் போற்றுதல்.
  - பெண்களின் உரிமைகள், சுதந்திரம் என்பவற்றைப் பேணுவதற்கான வழிமுறைகள்.
  - கல்வி, தொழில் வாய்ப்பு, சமூக அந்தஸ்து முதலானவை ஆண்களுக்கு நிகராக வழங்கப்படல்.
  - வன்முறைச் சூழல்களிலிருந்து பெண்களைப் பாதுகாத்தல்.

(iii) **உரையாடல்**

**ஊடக அறிவும் நூலறிவும்**

**நூல்களே நல்லாசான்**

**இணையமே உயர் அறிவு தரும்**

**எது சிறந்த வாசிப்பு ஊடகம்**

**(இவை போன்ற தலைப்புகள்)**

- அவதானிப்புக்குரியவை
  - உரையாடல் இருவருக்கிடையே நடைபெற வேண்டும்.
  - தலைப்பை ஒட்டியதாக அமைய வேண்டும்.
  - உரையாடல், தர்க்க ரீதியாகவும் உரையாடல் பாங்குடனும் எழுதப்படல் வேண்டும்.
  - உரையாடலுக்கிடையே ஒரு தொடர்ச்சி காணப்பட வேண்டும்.

- இணையம், தொலைக்காட்சி முதலிய ஊடகங்களினூடாகப் பெறப்படும் அறிவு
  - இற்றைப்படுத்தப்பட்டதாகவும், இலகுவாகப் பெறக்கூடியதாகவும் இருக்கும்.
  - விரல் நுனியில் பூமிப்பந்தை வருவிக்கும் ஆற்றல் இதற்குண்டு
  - தரவிறக்கம் செய்தல், சேமித்து வைத்தல், வேறொருவருக்கு அனுப்புதல், பிரதி எடுத்தல் போன்ற நன்மைகள்.
  - இணையம், தொலைக்காட்சி முதலானவற்றுக்கு ஆதரவாகப் பேசுபவர் இவற்றை முன்வைக்கலாம்.

- நூல் வாசிப்பினூடாக கிடைக்கப்பெறும் அறிவு
  - வரலாற்றுக் காலம் தொடங்கி அறிவைப் பெருக்கும் தன்மை கொண்டது.
  - வாசிப்புப் பழக்கத்தை மேம்படுத்தி அறிவைப் பெருக்கலாம்.
  - சுவையும், சுவாரஸ்யமும் கிட்டும்.
  - வாசிப்பதால் மனிதன் பூரணமடைகிறான்.
  - தேவைப்படும் நேரத்தில் நூல்களைப் பயன்படுத்த முடியும்.

(iv) **சிறுகதை**


**ஏணி**

**சிற்பி**

**(இவை போன்ற தலைப்புகள்)**

- அவதானிப்புக்குரியவை
  - சிறுகதைகளுக்குரிய அமைப்புப் பேணப்படல்.
  - வழங்கப்பட்ட கருப்பொருளுக்கமைய கற்பனைச் செறிவுடன் எழுதப்படல்.
  - கதையை சுவை படவும் விறுவிறுப்பாகவும் நகர்த்திச் செல்லுதல்.
  - இயல்பான, கவர்ச்சியான கதையோட்டம்.
  - கதைக்குப் பொருத்தமான மொழிநடை.
  - இயல்பான பாத்திர உரையாடல்.
  - படிப்பினையை வெளிப்படுத்தல்.
  - முடிவு பொருத்தமாக அமைதல்.


**2 ஆம் வினாவிற்கு விடையளித்தல் தொடர்பான அவதானிப்புகளும் முடிவுகளும் :**




2ஆம் வினா கட்டாய வினாவாகும். 99% ஆனவர்கள் இவ்வினாவுக்கு விடையளித்துள்ளனர். இவ்வினாவுக்கான மொத்தப் புள்ளிகள் 25 ஆகும்.

19-25 வரையான வீச்சில் 21% ஆனோரும்
13-18 வரையான வீச்சில் 51% ஆனோரும்
07-12 வரையான வீச்சில் 20% ஆனோரும்
00-06 வரையான வீச்சில் 8% ஆனோரும்
புள்ளிகளைப் பெற்றுள்ளனர்.

இவ்வினாவிற்கு 21 சதவீதத்தினர் 19 அல்லது அதற்கு மேற்பட்ட புள்ளிகளைப் பெற்றிருக்கும் அதேவேளை 8% சதவீதத்தினர் 06 அல்லது அதற்குக் குறைவான புள்ளிகளைப் பெற்றுள்ளனர்.




வினாப்பத்திரம் II இல் 2 ஆம் வினாவான கட்டுரை வினா கட்டாயமானதாகும். இதில் (ii) ஆம் பகுதியான மேடைப்பேச்சுக்குரிய இலகுதன்மை 68% ஆகும். இலகுதன்மை குறைவாக (iv) ஆம் பகுதியான சிறுகதை எழுதுதல் உள்ளது. இது 53% ஆகும்.

**குறைந்த அடைவுமட்டத்தைப் பெற்ற பரீட்சார்த்திகளின் விடைகளில் அவதானிக்கப்பட்டவை.**

- கொடுக்கப்பட்ட வழிகாட்டல் குறிப்புகளை அவதானித்து கட்டுரை எழுதப்படாமை.
- தலைப்பு அதிக சொற்களில் எழுதப்பட்டிருந்தமை.
- மொழிச் செம்மை திருப்திகரமாக அமையாமை.
- எழுத்துப் பிழை, வாக்கிய வழு என்பன அதிகமாக இருந்தமை.
- உரையாடல் நீண்ட வசனங்களாக அமைந்திருந்தமை.
- கதையை சுவைபட விறுவிறுப்பாக நகர்த்திச் செல்லாமை.
- சிறுகதைக் கருவை விளங்கிக் கொள்ளாமை. (மாணவனுக்கு ஆசிரியர் உதவியதாகவே கதைக்கரு அமைக்கப்பட்டுள்ளது. சிலர் சகமாணவன் உதவியதாக எழுதியுள்ளனர்.)
- உரையாடல் நீண்ட வசனங்களாக அமைந்திருந்தமை.

**அடைவு மட்டத்தை அதிகரிப்பதற்கான ஆலோசனை**

- தலைப்பினைச் சுருக்கமாகவும் கவர்ச்சிகரமாகவும் எழுத வழிப்படுத்தல்.
- ஆசிரியர்கள் பயிற்சிக்காக வழங்கும் கட்டுரைகளிலும் அதற்கேற்ற வழிகாட்டற் குறிப்புகளை வழங்கி அதற்கேற்றவாறு எழுத வழிப்படுத்துதல்.
- வழிகாட்டற் குறிப்புகளை வாசித்து விளங்கி, அவற்றிற்கு ஏற்றவாறு கட்டுரைகளை எழுதச் செய்தல்.
- சட்டகம் அமைத்துக் கட்டுரை எழுதும் பயிற்சிகளை வழங்குதல்.
- ஒரு விடயம் ஒரு பந்தியில் அமையுமாறு விரித்து எழுதும் திறனை வளர்த்தலும், பந்திகளுக்கிடையேயான தொடர்பினைப் பேணுதலும்.
- கதைக் கருவுக்குப் பொருத்தமாகக் கதை எழுத வழிகாட்டுதல். கதைக்கான கருவினை சரியாக விளங்கிக்கொள்ள நெறிப்படுத்தல்.
- உரையாடல் இயல்பானதாகவும் தர்க்க ரீதியானதாகவும் அமைந்திருத்தல்.
- உரையாடல் நீண்ட பந்திகளாக அமையாதிருக்க வழிப்படுத்தல்.
- உரையாடலில் உரையாடுபவர்களிருவரும் ஒரு பொது உடன்பாட்டுக்கு வருவதாக அமைய எழுத வழிப்படுத்தல்.
- வழிகாட்டற் குறிப்பில் தரப்பட்ட பொருத்தமான மொழிநடையில் சிறுகதை எழுதும் பயிற்சி வழங்குதல்.
- கதை நகர்வுக்கேற்ப பாத்திர உரையாடல் இயல்பாகவும் தொடர்ச்சியாகவும் அமையுமாறு எழுத வழிகாட்டுதல்.

**வினா இல. 3**

**3.** பின்வரும் உரைப்பகுதியின் **சுருக்கத்தை 40 - 45** சொற்களில் அமையக்கூடியவாறு எழுதுக. (சொற்களின் எண்ணிக்கையைக் குறிப்பிடுக.)

அன்பு, பரிவு, மனித உறவு, சொந்தபந்தம், மனநிறைவு, அறிவார்ந்த ரசனை முதலியவை மனிதனுக்கு வசதிகளும் நலன்களும் தருகின்றன; மிகவும் நெருக்கம் தருகின்றன. பண்பாடு அத்தகைய காரியங்களைச் செய்கிறது. எனவேதான், மனிதன் பண்பாடு பற்றி மிகவும் அக்கறை எடுத்துக்கொள்கிறான் என்கிறார் டெர்ரி ஈகிள்டன். வர்க்கம், சாதி, சமயம், மொழி, இலக்கியம் முதலியவற்றின் வழியாகவும் அவற்றின் குணங்களாகவும் பண்பாடு வெளிப்படுகிறது. ஒற்றைக் கருத்திலோ ஒற்றைக் குரலிலோ வெளிப்படுவதல்ல பண்பாடு. பலவகைப் பரிமாணங்கள் அதற்கு உண்டு. அதனால் ஒருங்கிணைந்த ஒரு கூட்டுமொத்த வடிவமும் உயிர்ப்பும் அதற்கு உண்டு. மேலும் எந்தப் பண்பாடும் தனித்து இருப்பதில்லை. பிற பண்பாடுகளோடு உறவு கொண்டே வாழ்கிறது. ஒரு சமூகக் குழுவோ, இனமோ தனித்து இயங்குவதில்லை. இருப்பதில்லை. அதுபோலவே பண்பாடுகளும் அருகருகே சேர்ந்து வாழ்கின்றன. தொடர்பு கொள்கின்றன.

பண்பாடுகள், எதிர் எதிரே நெருங்கி நிற்கின்றபோது, அவற்றின் தனித்தன்மைகளும் மரபுகளும் சிறப்புகளும் மற்றும் நிகழ்காலத்தின் நிலைகளும் முரண்பாடுகளை ஏற்படுத்துகின்றன. இத்தகைய முரண்பாடுகளின் காரணமாக சமூக அமைப்புகளின் செயற்பாடுகளிலும் பிரச்சினைகள் ஏற்படுவது தவிர்க்க முடியாதது. (10 புள்ளிகள்)

## 3ஆம் வினாவிற்கு எதிர்பார்க்கப்பட்ட விடைகளும் புள்ளி வழங்கும் திட்டமும்

**சுருக்கம் எழுதுதல்**

**விடய உள்ளடக்கம்**

- பண்பாடு மணிதனுக்குப் பல்வேறு நலன்களைத் தருகின்றது.
- இது பல வழிகளிலும் வெளிப்படுத்தப்படுகின்றது.
- பண்பாடென்பது பல்வேறு பரிமாணங்களைக் கொண்ட ஒருங்கிணைந்த வடிவமாகும்.
- இது பிற பண்பாடுகளோடு உறவு கொண்டே வளர்கிறது.
- பண்பாடுகள் எதிர் எதிர் நிலையில் செயற்படும்போது முரண்பாடுகள் ஏற்படுகின்றன.
- இந்த முரண்பாடுகள் சமூக அமைப்பின் செயற்பாடுகளில் பிரச்சினைகளை ஏற்படுத்துகின்றன.

**கவனிக்க வேண்டியவை**


- பிரதான கருத்து, துணைக் கருத்துக்கள்
- சொந்த மொழிநடையில் எழுதுதல்
- ஒரு பந்தியாக எழுதுதல்
- கட்டுக்கோப்பாக கருத்துச் சிதைவின்றி எழுதுதல்
- பிரதான அம்சங்களை அனுசரித்தல்
- தவிர்க்க வேண்டியன தவிர்க்கப்படல்
  (கூறியது கூறல் - உதாரணங்கள் முதலானவை)
- தொகைமொழிச் சொற்களைப் பயன்படுத்தல்
- கருத்தமைவில் தொடர்ச்சி காணப்படல்
- குறித்த சொல்லளவில் எழுதுதல்

| | | |
|---|---|---|
| விடய உள்ளடக்கம் | - | 06 புள்ளிகள் |
| சொல்லளவு | - | 02 புள்ளிகள் |
| மொழி நடை | - | 02 புள்ளிகள் |

**சொல்லளவு**

- 40 - 45 சொற்களுக்குள் இருத்தல் எதிர்பார்க்கப்படுகின்றது.
- 35 - 50 சொற்கள் வரை ஏற்றுக் கொள்ளப்படும்.
- 35 சொற்களுக்குக் குறைவாகவோ 50 சொற்களுக்குக் கூடுதலாகவோ இருந்தால் சொல்லளவிற்கான ஒரு புள்ளியைக் குறைக்கவும்.
- சொல்லளவு 50 ற்கு மேற்படின் 50 சொற்களை எல்லையாகக் கொண்டு அதற்குள் எழுதப்பட்ட விடயங்களை அனுசரித்துப் புள்ளிகளை வழங்கவும்.
- சொல்லளவு 35 ற்கு குறைவாக இருப்பின் பிரதான கருத்தின் சாராம்சங்களை அடிப்படையாகக் கொண்டு புள்ளிகளை வழங்கவும்.
- சொற்களை எண்ணும் போது நிதானமாகக் கணக்கிடவும்.


## 3ஆம் வினாவிற்கு விடையளித்தல் தொடர்பான அவதானிப்புகளும் முடிவுகளும் :




3ஆம் வினாவும் கட்டாய வினாவாகும். இவ்வினாவுக்கு 99% ஆனவர்கள் விடையளித்துள்ளனர். இவ்வினாவிற்கான மொத்தப் புள்ளிகள் 10 ஆகும்.

08-10 வரையான வீச்சில் 32% ஆனோரும்
06-07 வரையான வீச்சில் 42% ஆனோரும்
03-05 வரையான வீச்சில் 21% ஆனோரும்
00-02 வரையான வீச்சில் 5% ஆனோரும்
புள்ளிகளைப் பெற்றுள்ளனர்.

இவ்வினாவுக்கு 08 அல்லது அதற்குக் கூடிய புள்ளிகளைப் பெற்றவர்கள் 32% ஆக இருக்கும் அதேவேளை 5% ஆனோர் 02 அல்லது அதற்குக் குறைவான புள்ளிகளைப் பெற்றுள்ளனர்.




வினாப்பத்திரம் II இன் 3 ஆம் வினா சுருக்கம் எழுதுதல் ஆகும். இவ்வினாவின் இலகுதன்மை 65% ஆகும்.

**குறைந்த அடைவு மட்டத்தைப் பெற்ற பரீட்சார்த்திகளின் விடைகளில் அவதானிக்கப்பட்டவை.**

- சொல்லளவு கவனிக்கப்படாமை.
- கருத்தமைவில் தொடர்ச்சி காணப்படாமை.
- சொந்த மொழிநடையில் எழுதாமை.
- ஒரு பந்தியாக எழுதப்படாமை.

**அடைவு மட்டத்தை அதிகரிப்பதற்கான ஆலோசனைகள் :**

- சுருக்கத்தில் இடம்பெற்றுள்ள பிரதான கருத்து, துணைக்கருத்துகள் என்பவற்றை கிரகித்து எழுத வழிகாட்டல்.
- தரப்பட்ட பந்தியின் சாராம்சத்தைப் புரிந்துகொண்டு சொந்த மொழிநடையில் எழுதுவதற்குப் பயிற்சி அளித்தல்.
- சுருக்கம் எழுதும்போது கடைபிடிக்க வேண்டிய பொறிமுறைகளைப் பின்பற்றி எழுதுவதற்குப் பயிற்றுவித்தல்.
- எதிர்பார்க்கப்பட்ட (சொற்களின் எண்ணிக்கை) அளவில் எழுதப் பயிற்சியளித்தல்.
- கருத்துச் செறிவுள்ள ஒரு பந்தியாக எழுதுவதற்கு வழிப்படுத்துதல்.

வினா இலக்கம் 4

**4.** பின்வரும் உரைநடைப் பகுதியை வாசித்து அதன்கீழ் தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.

கல்வி மனித சமுதாயத்தை நல்வழிப்படுத்துகிறது. எனவே கல்வியை எல்லோரும் கற்கவேண்டும். மலைவாழைப்பழம் போன்ற கல்வியைக் கற்பதில் மக்கள் மகிழ்ச்சியடைய வேண்டும். கற்காதவர் விலங்குக்கு நிகரானவர் என்பார் வள்ளுவர். மனிதனை மனிதனாக மாற்றுவது கல்வி. எனவே கல்வியை அனைவருக்கும் கட்டாயமாக்க வேண்டும். மு.வரதராசன் (மு.வ.) அவர்கள் அடிப்படையில் கல்வியாளர். அவருடைய பட்டறிவின் துணைகொண்டு இங்கு கருத்துக்களை வெளிப்படுத்தியுள்ளார். நடைமுறையில் இன்றைய கல்விமுறையை மாற்றம் செய்ய வேண்டும் என்பது மு.வ.வின் கருத்தாகும். இனி, கல்வி குறித்த மு.வ.வின் சிந்தனையைக் காண்போம். நினைவாற்றலை வளர்ப்பது கல்விக்கூடங்களின் நோக்கமாக அமையக்கூடாது. சிந்தனை ஆற்றலை வளர்ப்பதே நோக்கமாக இருக்க வேண்டும் என்பது அவர் கருத்து.

(i) கல்வியை ஏன் அனைவரும் கற்க வேண்டும்?

(ii) கல்வி பற்றி வள்ளுவர் கூறும் கருத்து யாது?

(iii) கல்வி ஏன் கட்டாயமாக்கப்பட வேண்டுமென இங்கு கூறப்பட்டுள்ளது?

(iv) பின்வருவனவற்றுள் **பொருத்தமற்ற** கூற்றைத் தெரிவுசெய்க.

(அ) கல்வி பற்றிய மு.வ.வின் கருத்துக்கள் அவர் பட்டறிவால் விளைந்தவையாகும்.

(ஆ) இன்றைய கல்வி முறைமையில் மாற்றம் வேண்டாம் என்பது மு.வ.வின் கருத்தன்று.

(இ) கல்வி கற்பது இனிமையானதால், அதைப் பெறுவதில் மக்கள் மகிழ்ச்சியடைவர்.

(ஈ) கல்வியைக் கட்டாயமாக்க வேண்டும் என்பதில் கட்டுரையாசிரியருக்கு உடன்பாடில்லை.

(v) கல்வி நிறுவனங்களின் நோக்கம் யாதென ஆசிரியர் எடுத்துரைக்கின்றார்?

(10 புள்ளிகள்)

## 4 ஆம் வினாவிற்கு எதிர்பார்க்கப்பட்ட விடைகளும் புள்ளி வழங்கும் திட்டமும்

(i) கல்வி மனித சமுதாயத்தை நல்வழிப்படுத்துவதால் கற்க வேண்டும்.

(ii) கல்வியை கற்காதவர் விலங்குகளுக்கு ஒப்பானவர் என்பது வள்ளுவர் கூறும் கருத்தாகும்.

(iii) மனிதனை மனிதனாக மாற்றுவது கல்வி, எனவே கல்வி கட்டாயமாக்கப்பட வேண்டும் எனக் கூறப்பட்டுள்ளது.

(iv) கல்வியைக் கட்டாயமாக்க வேண்டும் என்பதில் கட்டுரையாசிரியருக்கு உடன்பாடில்லை.


**அல்லது**

("ஈ")

(v) கல்வி நிறுவனங்களின் நோக்கம், சிந்தனை ஆற்றலை வளர்ப்பது என ஆசிரியர் எடுத்துரைக்கின்றார்.

(2 × 5 = 10 புள்ளிகள்)


## 4 ஆம் வினாவிற்கு விடையளித்தல் தொடர்பான அவதானிப்புகளும் முடிவுகளும் :




4 ஆம் வினாவும் கட்டாய வினாவாகும். எனினும் 98% ஆனவர்களே இதற்கு விடையளித்துள்ளனர். இவ்வினாவுக்குரிய மொத்தப் புள்ளிகள் 10 ஆகும்.

08-10 வரையான வீச்சில் 77% ஆனோரும்
06-07 வரையான வீச்சில் 13% ஆனோரும்
03-05 வரையான வீச்சில் 6% ஆனோரும்
00-02 வரையான வீச்சில் 4% ஆனோரும்
புள்ளிகளைப் பெற்றுள்ளனர்.

இவ்வினாவுக்கு 08 அல்லது அதற்குக் கூடிய புள்ளிகளைப் பெற்றவர்கள் 77% ஆக இருக்கும் அதேவேளை 4% ஆனோர் 02 அல்லது அதற்குக் குறைவான புள்ளிகளைப் பெற்றுள்ளனர்.




4 ஆம் வினா ஐந்து பிரிவுகளைக் கொண்டது. அவற்றுள் பிரிவு (i) இன் இலகுதன்மை 95% ஆக உள்ளதுடன் மற்றைய பிரிவுகளுடன் ஒப்பிடும்போது பிரிவுகள் (iv), (v) ஆகியவற்றின் இலகுதன்மைகள் சற்று குறைவாகவே உள்ளன.

**குறைந்த அடைவு மட்டத்தைப் பெற்ற பரீட்சார்த்திகளின் விடைகளில் அவதானிக்கப்பட்டவை.**

- பந்தியை முழுமையாக வாசித்து, கிரகித்து பிரிவுகள் (iv),(v) ஆகியவற்றுக்கு சரியாக விடையளிக்கத் தவறியமை.
- வினா பிரிவு (iv) இல் 'பொருத்தமற்ற கூற்றைத் தெரிவுசெய்தல்' என்பதை விளங்கிக் கொள்ளாமை.

**அடைவு மட்டத்தை அதிகரிப்பதற்கான ஆலோசனைகள் :**

- பொருத்தமான உரைநடைப் பகுதிகளைத் தெரிவுசெய்து வினாக்களை வழங்கி விடையெழுதச் செய்வதனூடாக கிரகிக்கும் திறனை விருத்தி செய்தல்.
- நேரடி வினாக்களை மட்டுமன்றி மாணவர்கள் சிந்தித்து விடையளிக்கக் கூடியதான வினாக்களையும், அவற்றுக்கு விடை எழுதும் பயிற்சிகளையும் வழங்குதல்.

வினா இல. 5

**5.** உமது கிராமத்தில் பல்வேறு வகையான கிராமியக் கலைகளை நிகழ்த்துகின்ற கிராமியக் கலைஞர்கள் பலர் உள்ளனர். அவர்கள் போதிய வருவாயற்றும் உரிய கௌரவமின்றியும் வாழ்கின்றனர். கிராம அபிவிருத்திச் சங்கத்தின் செயலாளர் என்று உம்மைக் கருதிக்கொண்டு, நமது பண்பாட்டைப் பேணுகின்ற இக்கலைஞர்களுக்கு உரிய கௌரவத்தையும், அவர்களது வாழ்க்கை மேம்பாட்டுக்கான உதவிகளையும் வழங்குமாறு கேட்டு, கலாசார அமைச்சருக்கு **100** சொற்களில் ஒரு விண்ணப்பக் **கடிதம்** எழுதுக.

**அல்லது**

நீர் நமது வாழ்வுக்கு அத்தியாவசியமாகும். சுத்தமான நீரைப் பருகுவதன் மூலம் நம்முடைய உடல் ஆரோக்கியத்தைப் பேணமுடியும். அசுத்தமான நீரைப் பருகுவதனால் வாந்திபேதி முதலிய நோய்கள் ஏற்படும். எனவே சுத்திகரிக்கப்பட்ட நீரை அருந்துவது தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் **100** சொற்களில் ஒரு **துண்டுப்பிரசுரம்** எழுதுக. (15 புள்ளிகள்)

## 5 ஆம் வினாவிற்கு எதிர்பார்க்கப்பட்ட விடைகளும் புள்ளி வழங்கும் திட்டமும்

- **கடிதம்**

| | | |
|---|---|---|
| அமைப்பு | - | 05 புள்ளிகள் |
| உள்ளடக்கம் | - | 07 புள்ளிகள் |
| மொழிநடை | - | 03 புள்ளிகள் |
| மொத்தம் | - | 15 புள்ளிகள் |

**அமைப்பு**

- முகவரி - 01 புள்ளி
- உள் முகவரி - 01 புள்ளி
- விளிப்பு - 01 புள்ளி
- தலைப்பு - 01 புள்ளி
- பதவி, ஒப்பம் - 01 புள்ளி

**உள்ளடக்கம்**

- கிராமத்தில் பல்வேறு வகையான கிராமிய நிகழ்ச்சிகளை நிகழ்த்தும் கலைஞர்கள் பலர் வாழ்வதைக் குறிப்பிடல்.
- அவர்களுக்குத் தேவையான வாழ்வாதார வசதிகளும் கௌரவமும் இன்மையை எடுத்துக் காட்டல். (வறுமை, வாழிடமின்மை, நாட்டுப்புறக் கலைகள் மீதான புறக்கணிப்பு முதலியன.)
- இவர்கள் கிராமியக் கலைகளைப் பாதுகாக்கும் பாதுகாவலர்கள். அவர்களைப் பேணிப் பாதுகாப்பதும் அவர்களுக்கான வருமான வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதும் எனது கடமை என்பதை வற்புறுத்தல். அவர்களுக்கான நிதியுதவி, ஓய்வூதியம் வீட்டு வசதி முதலான அத்தியாவசிய உதவிகளை வழங்கவும். கலைகளைப் பேணும் நடவடிக்கைக்கூடாக அவர்களுக்கான கௌரவத்தை வழங்கும்படியும் வினயமாக வேண்டுதல்.

**மொழிநடை**

- பொருத்தமான மொழிநடை
- நிறுத்தக் குறிப் பயன்பாடு
- வழுக்கள் இன்மை
- சுட்டிப்பாகக் கூறுதல்

- **துண்டுப்பிரசுரம்**

| | | |
|---|---|---|
| அமைப்பு | - | 05 புள்ளிகள் |
| உள்ளடக்கம் | - | 07 புள்ளிகள் |
| மொழிநடை | - | 03 புள்ளிகள் |
| மொத்தம் | | 15 புள்ளிகள் |

**அமைப்பு**

- கவர்ச்சிகரமான தலைப்பு - 02 புள்ளிகள்
- விளிப்பு - 01 புள்ளி
- வெளியிடுபவர் பற்றிய விபரமும் திகதியும் - 02 புள்ளிகள்

**தலைப்பு**

- தூய நீர் அருந்துவோம்.
- சுத்தமான நீர் அருந்துவோம் உயிர் காப்போம்.
- சுத்தமான நீரே ஆரோக்கியம் தரும்.

  (இவை போன்ற தலைப்புகள்)

**உள்ளடக்கம்**

- சுத்தமான நீர் அருந்துவது ஆரோக்கியம் தரும்.


  நீர் நிலைகள், நீர்த் தாங்கிகள், நீர்க் குழாய்கள் முதலானவற்றை சுத்தமாக வைத்திருத்தல்.
- அசுத்தமான நீர் அருந்துவதால் ஏற்படும் தீமைகள்

  உதாரணம் : வாந்திபேதி, தொற்று நோய்கள், சிறுநீரகத் தொற்று முதலியவை.
- சுத்தமான நீரைப்பெறும் வழிமுறைகள் (கொதிக்க வைத்தல், வடிகட்டல், தொற்று நீக்கல்) முதலியன.
- அனைவரதும் ஒத்துழைப்பை வேண்டுதல்.

**மொழிநடை**

- கவர்ச்சியான மொழிநடை
- பொதுமக்களை விளித்து எழுதுதல்.
- சொற்செறிவு


## 5ஆம் வினாவிற்கு விடையளித்தல் தொடர்பான அவதானிப்புகளும் முடிவுகளும் :




இவ்வினாவும் கட்டாய வினாவாக இருந்தபோதிலும் 98% ஆனவர்களே இதற்கு விடையளித்துள்ளனர். இவ்வினாவிற்குரிய மொத்தப் புள்ளிகள் 15 ஆகும்.

12-15 வரையான வீச்சில் 26% ஆனோரும்
08-11 வரையான வீச்சில் 44% ஆனோரும்
04-07 வரையான வீச்சில் 22% ஆனோரும்
00-03 வரையான வீச்சில் 8% ஆனோரும்
புள்ளிகளைப் பெற்றுள்ளனர்.

இவ்வினாவுக்கு 12 அல்லது அதற்குக் கூடிய புள்ளிகளைப் பெற்றவர்கள் 26% ஆக இருக்கும் அதேவேளை 08% ஆனோர் 03 அல்லது அதற்குக் குறைவான புள்ளிகளைப் பெற்றுள்ளனர்.




5 ஆம் வினா இரண்டு பிரிவுகளைக் கொண்டது. இவற்றுள் முதலாவது பிரிவான 'கடிதம் எழுதுதல்' இலகுதன்மை கூடியதாகவும் 'துண்டுப்பிரசுரம் எழுதுதல்' இலகுதன்மை குறைந்ததாகவும் காணப்படுகின்றது.

**குறைந்த அடைவுமட்டத்தைப் பெற்ற பரீட்சார்த்திகளின் விடைகளில் அவதானிக்கப்பட்டவை.**

- **கடிதம்**
  - தொழின்முறைக் கடிதத்தில் உள்முகவரியைச் (பெறுநர்) சரியாக எழுதுவதில் இடர்பட்டமை.
  - கிராமியக் கலைகள் எவையென்பதை இனங்காணத் தவறியமை.
  - கலைஞர்களின் மேம்பாட்டுக்கான திட்டங்கள் பற்றி முழுமையாக எடுத்துக் காட்டாமை.

- **துண்டுப்பிரசுரம்**
  - சொல்லளவு குறைவாகக் காணப்பட்டமை.
  - தலைப்பு பொருத்தமாகவும், கவர்ச்சியாகவும் அமைந்திருக்காமை.
  - சுத்தமான நீர் பெறும் வழிமுறைகள் பற்றி முழுமையாக எழுதப்படாமை.

**அடைவுமட்டத்தினை அதிகரிப்பதற்கான ஆலோசனைகள்**

- **கடிதம்**
  - மாதிரி தொழின்முறைக் கடிதம் ஒன்றைக்காட்டி விளக்கமளித்தல்.
  - கடிதத்தில் இடம்பெற வேண்டிய உள்ளடக்கத்தினை கவனத்திற்கொண்டு எழுதுவதற்குப் பயிற்சியளித்தல்.

- **துண்டுப்பிரசுரம்**
  - நடைமுறையில் துண்டுப்பிரசுரங்கள் தேவைக்கேற்ப சுருக்கமாக அமையும் ; சில விரிவாக அமையும். இங்கு 100 சொற்களில் எழுதப்படும்போது விரிவு அவசியம். சொற்களின் எண்ணிக்கையில் கூடிய கவனம் செலுத்தப்படல் அவசியம்.
  - துண்டுப்பிரசுரங்களில் இடம்பெறவேண்டிய விடயங்கள் பற்றிக் கலந்துரையாடுதல்.
  - மாதிரித் துண்டுப் பிரசுரங்களைக் காட்சிப்படுத்தி விளக்குதல்.
  - வெவ்வேறு தலைப்புகளில் துண்டுப்பிரசுரங்கள் எழுதுவதற்கான பயிற்சி வழங்குதல்.

## 2.3. வினாப்பத்திரம் III உம் அதற்கு விடையளிக்கப்பட்டுள்ளமை தொடர்பான விபரங்களும்

### 2.3.1 வினாப்பத்திரம் III - இன் கட்டமைப்பு

**நேரம் :- 2 மணித்தியாலங்கள்** **மொத்தம் 80 புள்ளிகள்**

(விதிக்கப்பட்ட தமிழ் இலக்கிய பாடநூல்)

(1,2,3,4 ஆகிய வினாக்கள் கட்டாயமானவை. வினாக்கள் 5,6,7 இல் ஒன்றினைத் தெரிவு செய்தல் வேண்டும்.)

1. குறுவிடை வினாக்கள் 10. (ஒரு வினாவுக்கு 2 புள்ளிகள் வீதம் மொத்தம் 20 புள்ளிகள்)
2. செய்யுட்பகுதியும் உரைநடைப் பகுதியும் சேர்ந்த ஐந்து உபபகுதிகள்.
   (ஒரு உபபகுதிக்கு 4 புள்ளிகள் வீதம் மொத்தம் 20 புள்ளிகள்)
3. விருப்பு வினாக்கள் 02. அவற்றுள் ஒன்றுக்கு விடையளித்தல் வேண்டும்.
   (15 புள்ளிகள்)
4. விருப்பு வினாக்கள் 02. அவற்றுள் ஒன்றுக்கு விடையளித்தல் வேண்டும்.
   (15 புள்ளிகள்)
5. 5,6,7 ஆகிய வினாக்களில் யாதேனும் ஒரு வினாவுக்கு விடையளித்தல் வேண்டும்.
   (10 புள்ளிகள்)

**வினாப்பத்திரம் III இற்கான மொத்தப் புள்ளிகள் = 20+20+15+15+10**
**= 80 புள்ளிகள்**

## 2.3.2 வினாப்பத்திரம் III - எதிர்பார்க்கப்பட்ட விடைகளும், புள்ளிவழங்கும் திட்டமும், விடையளித்தல் தொடர்பான அவதானிப்பும் முடிவுகளும் ஆலோசனைகளும்

**வினா இல. 1**

**1.** சுருக்கமான விடை தருக.

(i) "மெல்லியர்பாற் கல்வி விரும்பாத வீணரெல்லாம்
எல்லையில்லா இன்படைதற்கிடையூறென்றே இயம்பாய்"

(அ) மெல்லியர் என்போர் யாவர்?

(ஆ) இங்கு 'வீணர்' எனக் குறிப்பிடப்படுபவர் யாவர்?

(ii) "மாத மூன்று மழையுள்ள நாடு
வருஷ மூன்று விளைவுள்ள நாடு"

(அ) இங்கு குறிப்பிடப்படும் நாடு யாது?

(ஆ) விளைவு என்பது எதனைக் குறிப்பிடுகிறது?

(iii) "பொய்கை ஊரன் கேண்மை
செய்து இன்புற்றனெம் செறிந்தன வளையே"

(அ) 'பொய்கை ஊரன்' என்பவன் நானிலத்துள் எந்த நிலத்தைச் சேர்ந்தவன்?

(ஆ) வளைகள் செறிந்தமைக்கான காரணம் யாது?

(iv) "கைராசிக்காரி நீங்கள்தான் மாமி என்ர தலப்புள்ளய ஏந்தணும்."

(அ) இங்கு 'கைராசிக்காரி' எனக் குறிப்பிடப்படுபவரின் பெயர் யாது?

(ஆ) 'தலப்புள்ள' எனக் குறிப்பிடப்படுவது யாது?

(v) "ஏலம்பூ வாய் பொசுங்க
எரியுறுது தீக்கொழுந்து
காலப்புனல் கனக்கும்
கண்ணீரையும் சுமந்து"

(அ) 'ஏலம்பூ வாய்' என்பதால் நீர் விளங்கிக்கொள்வது யாது?

(ஆ) 'காலப்புனல்' என்பதில் இடம்பெற்ற அணி யாது?

(vi) "கான் ஆள உனைவிடுத்த கண்இலா
அருளிலிதன் காதல் மைந்தன்"

(அ) 'கண்இலா அருளிலி' எனக் குறிப்பிடப்படுபவன் யார்?

(ஆ) அவன் 'அருளிலி' எனச் சுட்டப்படுவதற்கான காரணம் யாது?

(vii) "மீசைக்கு விதைதூவி இளமை மழை பெய்ய
பயிர் முளைத்த பருவம்"

(அ) 'இளமை மழை' எனக் குறிப்பிடப்படுவது எது?

(ஆ) 'பயிர் முளைத்தல்' என்பது எதனைச் சுட்டுகிறது?

(viii) "மண்ண நம்பி ஏலேலோ மரமிருக்க ஜலசா
மரத்த நம்பி ஏலேலோ கிளையிருக்க ஜலசா
கிளைய நம்பி ஏலேலோ இலையிருக்க ஜலசா
இலைய நம்பி ஏலேலோ பூவிருக்க ஜலசா
பூவ நம்பி ஏலேலோ பிஞ்சிருக்க ஜலசா"

(அ) இந்தப் பாடலைப் பாடும் தொழிலாளர் யாவர்?

(ஆ) இந்தப் பாடல் வரிகளினூடாகக் கவிஞர் எதனைப் புலப்படுத்த விரும்புகிறார்?

(ix) "இந்த பைல் இஞ்ச எப்பிடி வந்தது?" என்றேன்.

(அ) 'பைல்' என்ற ஆங்கிலச் சொல்லின் தமிழ் வடிவம் யாது?

(ஆ) 'இஞ்ச எப்பிடி' என்ற பேச்சு வழக்குத் தொடரின் எழுத்து வடிவத்தை எழுதுக.

(x) "தாழு முள்ளத்தர், சோர்வினர், ஆடு போல் தாவித்தாவிப்
பல பொருள் நாடுவோர்"

(அ) இங்கு ஆட்டின் செய்கை யாருக்கு உவமிக்கப்பட்டுள்ளது?

(ஆ) முயற்சியற்றவர் இயல்புகள் **இரண்டினைத்** தருக.

(20 புள்ளிகள்)

## 1 ஆம் வினாவிற்கு எதிர்பார்க்கப்பட்ட விடைகளும் புள்ளி வழங்கும் திட்டமும்

**சுருக்க விடை**

(i) (அ) பெண்கள்
(ஆ) பெண் கல்விக்குத் தடையான ஆண்கள் / பயனற்றவர்

(ii) (அ) திருக்குற்றாலம் / குற்றால மலை / குற்றால நாடு
(ஆ) விளைச்சல்

(iii) (அ) மருத நிலத்துக்குரியவன்
(ஆ) தலைவனுடனான நட்பை நினைத்தலால்

(iv) (அ) மூத்தம்மா
(ஆ) மூத்தபிள்ளை / தலைப்பிள்ளை / முதற்பிள்ளை

(v) (அ) வாசனையுள்ள வாய் / நறுமணமுள்ள வாய்
(ஆ) உருவக அணி

(vi) (அ) திருதராட்டினன்
(ஆ) கருணை இல்லாது / அருள் இல்லாது பாண்டவர்களைக் காட்டில் வாழும்படி அனுப்பியமை

(vii) (அ) இளமைப் பருவம் / இளம் பராயம் / கட்டிளமைப்பருவம்
(ஆ) மீசை அரும்புதல் / மீசை முளைத்தல்


(viii) (அ) மீனவர்
(ஆ) ஒன்றில் ஒன்று தங்கியிருத்தல் என்ற நம்பிக்கை

(ix) (அ) கோப்பு / கோவை
(ஆ) இங்கு எப்படி / இங்கே எப்படி

(x) (அ) பலபொருள் நாடுவோருக்கு
(ஆ) தாழ்வான உளங் கொண்டிருத்தல் / சோர்வு கொண்டிருத்தல்


(2 x 10 = 20 புள்ளிகள்)

## 1 ஆம் வினாவிற்கு விடையளித்தல் தொடர்பான அவதானிப்புகளும் முடிவுகளும் :




1ஆம் வினா கட்டாய வினாவாகும். இவ்வினாவிற்கான மொத்தப் புள்ளிகள் 20 ஆகும்.

16-20 வரையான வீச்சில் 6% ஆனோரும்
11-15 வரையான வீச்சில் 27% ஆனோரும்
06-10 வரையான வீச்சில் 37% ஆனோரும்
00-05 வரையான வீச்சில் 30% ஆனோரும்
புள்ளிகளைப் பெற்றுள்ளனர்.




இவ்வினாவில் 10 உபபிரிவுகள் காணப்படுகின்றன. அவற்றுள் கடினத்தன்மையுடைய வினாக்களாக (i) அ, ஆ, (iii) ஆ, (v) அ, (vi) அ, ஆ (vii) ஆ, (viii) ஆ, (x) அ, ஆ ஆகியன அமைந்துள்ளன.

இலகுதன்மையுடைய வினாக்களாக (iv)அ, ஆ, (viii)அ, (ix)ஆ ஆகியன அமைந்துள்ளன.

இவற்றில் வினா (iv) ஆ பிரிவிற்கு 80% ஆன பரீட்சார்த்திகளும், வினா (iv) அ, (ix) ஆ பிரிவுகளுக்கு 76% ஆன பரீட்சார்த்திகளும் சரியாக விடையளித்துள்ளனர்.

**குறைந்த அடைவு மட்டத்தைப் பெற்ற பரீட்சார்த்திகளின் விடைகளில் அவதானிக்கப்பட்டவை.**

- பாடல் அடியோடு தொடர்புபடுத்தி “வீணர்” என்ற சொல்லின் பொருளை அறிய முடியாமை.
- ‘ஏலம்பூவாய்’ தொடர்பான கேள்விக்கு சரியான விடையளிக்கத் தவறியமை.
- பாடல் அடியினை முழுமையாக விளங்கிக்கொண்டு விடையளிக்கத் தவறியுள்ளமை.
- பாடலின் ஊடாக உணர்த்தப்படும் உட்கருத்தினை விளங்கிக் கொள்ளாமை.

**அடைவு மட்டத்தை அதிகரிப்பதற்கான ஆலோசனைகள் :**

- பாடலையோ, கவிதையையோ கற்பிக்கும்போது பாடலின் பொருள், அதன் புலப்பாட்டுத்தன்மை, சொற்கள் இடம்பெற்ற சந்தர்ப்பம், அணிகள் என்பவற்றை எடுத்துக்காட்டுதல்.
- பாடலின் பொருளைத் தெளிவாக விளங்கிக் கொள்வதற்குப் பொருத்தமான வழிமுறைகளைக் கையாளுதல்.
- பாடல்களில் இடம்பெறும் பிரதான சொற்கள், சொற்றொடர்களுக்கு அழுத்தம் கொடுத்தல்.

  உதாரணம் : வீணர், ஏலம்பூவாய்

வினா இல. 2

**2.** பின்வரும் செய்யுட் பகுதிகளையும் உரைநடைப் பகுதிகளையும் வாசித்து அவற்றின்கீழே தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.

(i) ஓர் தட்டிலே பொன்னும் ஓர் தட்டிலே நெல்லும் ஒக்கவிற்கும்
கார்தட்டிய பஞ்ச காலத்திலே தங்கள் காரியப்பேர்
ஆர் தட்டினும் தட்டுவாராமலே அன்னதானத்துக்கு
மார் தட்டிய துரை மால் சீதக்காதி வரோதயனே

(அ) இங்கு சீதக்காதியின் கொடைச் சிறப்பு எவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது?

(ஆ) பஞ்சம் நிலவும் காலத்து அவலநிலையைக் கவிஞர் விவரிக்குமாற்றை விளக்குக.

(ii) ஓடுகின்ற நீரையெதிர்த் தோடுகின்ற மீன்கள்
ஊருகின்ற சிற்றெறும்பின் ஒழுங்குமுறை வாழ்க்கை
ஆடுகின்ற பூமரங்கள் அசைகின்ற இலைகள்
அதிகாலை எழுந்துஇரை தேடவரும் பறவை
மூடுகின்ற இமைக்கடங்கா முழுநிலவு விழிகள்
முந்தானைச் சேலைகட்டும் செந்தாழம் பூக்கள்
கூடுகின்ற இயற்கையெழில் குதூகலத்தைத் தருமே
குழந்தையென எனது மனம் குதித்தாடும் தினமே

(அ) கவிஞர் உள்ளமானது குழந்தை போலக் குதூகலிப்பதற்கான காரணங்களை விளக்குக.

(ஆ) இயற்கையினூடாக நாம் கற்றுக்கொள்ளக்கூடியவை எவை?

(iii) யானை அனையவர் நண்பொரீஇ நாயனையார்
கேண்மை கெழீஇக் கொளல் வேண்டும் - யானை
அறிந்தறிந்தும் பாகனையே கொல்லும் எறிந்தவேல்
மெய்யதா வால்குழைக்கும் நாய்.

(அ) நல்ல நண்பர்க்கு உவமையாக நாய் குறிப்பிடப்பட்டிருப்பதன் பொருத்தப்பாட்டை விளக்குக.

(ஆ) யானை அனையவர் நட்பை நீக்க வேண்டுமென கவிஞர் ஏன் கருதுகிறார்?

(iv) கீழ்த்திசை நாடுகட்குச் செல்ல வேண்டிய மேற்றிசைப் பண்டம், தமிழ்நாட்டில் இறக்கப்பெற்று வேறு மரக்கலங்களில் கீழ்த்திசை நாடுகட்கு அனுப்பப்பட்டது. மேற்றிசை நூல்களே சங்க இலக்கியத்தைப் போல் இவ்வணிகத்துக்குச் சான்று தருகின்றன. எனவே இத்தாலிய நாட்டில் வாழ்ந்த ஸ்டொயிக் (stoic) வாதிகள் உரோமப் பேரரசு காலத்தில் எவ்வாறு ஓர் உலக மனப்பான்மையை வளர்த்தார்களோ அவ்வாறே சங்க காலத்திற்கு முற்பட்ட காலம் தொடங்கி ஓர் உலக மனப்பான்மை தமிழ்நாட்டில் பரவியுள்ளது. யாதும் ஊரே யாவரும் கேளிர் என்றும் யாதானும் நாடாமால் ஊராமால் என்றும் கூறுவதற்கு இம்மனப்பான்மை ஊக்கமளித்தது.

(அ) தமிழரின் உலக மனப்பான்மை எவ்வாறு வளர்ந்தது எனக் கட்டுரையாசிரியர் விளக்குகிறார்?

(ஆ) 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' எனும் கூற்றினூடாக உலக மனப்பான்மை வெளிப்படுமாற்றை விபரிக்குக.

(v) நானும் மூத்தம்மாவைப் போல் சுயமாய் ஓர் இளவரசனாய் இயங்க விழைந்தேன். உன்னிப்பாக அவவைப் பார்க்கத் தொடங்கினேன். எந்தக் காரிருளையும் கிழித்துக் கொண்டு குடுகுடுவென நடக்கும் மனோ தைரியம் அவவுக்கு. நானும் அப்படி நடந்து பார்த்தேன். இரத்தம் உறைந்துபோய் கால்கள் மரத்துவிடவில்லை.

பயம் என்னைப் பீடிக்கவில்லை. மஞ்சோனா மரத்தின் கீழ் தனியே இருக்கப் பழகினேன். கரு மேகத்தைப் பார்த்து கரும்பூதமாய் உள்ளுக்குள் ஓடத்தோன்றுவதில்லை. மூத்திரம் முடுத்தால் மூத்தம்மாவை எழுப்பிக் கொண்டு சிணுங்குவதில்லை. இந்த ராஜ்யத்தின் அரசியைப் போல், நானுமொரு இளவரசனானேன்.

(அ) மூத்தம்மாவின் ஆளுமைப் பண்புகளாக இங்கு சுட்டப்பெறுபவை யாவை?

(ஆ) "இந்த ராஜ்யத்தின் அரசியைப் போல், நானுமொரு இளவரசனானேன்" என்பதன் மூலம் கதாசிரியர் எதை உணர்த்த விழைகிறார்?

(20 புள்ளிகள்)

## 2ஆம் வினாவிற்கு எதிர்பார்க்கப்பட்ட விடைகளும் புள்ளி வழங்கும் திட்டமும்

(i) (அ) நாட்டில் நிலவும் கடுமையான பஞ்சம் ஏற்பட்ட போதும் அவர் வீட்டுக்கதவை யார் தட்டினாலும் / கொடுப்பதை சுயநலவாதிகள் யார் தடுத்தாலும் (யாசிக்கின்ற) தட்டு வராமலே / தட்டப்பட்ட ஓசை வர முன்னரே / தட்டுப்பாடு வராமலே அன்னதானம் வழங்குவதற்கு பின்னிற்காத வள்ளண்மை உடையவர் சீதக்காதி என அவரின் கொடைச்சிறப்புக் கூறப்பட்டுள்ளது.

(ஆ) மழை வரண்டு, பஞ்சம் ஏற்பட்ட நிலையில் பொன்னும் நெல்லும் சமமாக தட்டுக்களிலே வைத்து அளக்கப்பட்ட காலம் எனக் குறிப்பிடுவதினூடாக நெல் கிடைத்தற்கு அரியதாயிருந்த அவலநிலை சுட்டப்பெறுகின்றது. பஞ்சத்தால் மக்கள் யாசகம் செய்ய வேண்டிய அவலநிலை.

(ii) (அ) இயற்கை நிகழ்ச்சிகள் கவிஞரது உள்ளம் குழந்தை எனக் குதூகலிப்பதற்குக் காரணமாக அமைந்துள்ளன.

நீரை எதிர்த்து ஓடும் மீன்கள்
சிற்றெறும்பின் ஒழுங்கு முறையான வாழ்வு
பூ மரங்கள் ஆடுதல், இலைகள் அசைதல்
அதிகாலை எழுந்து இரைதேட வரும் பறவை
முழு நிலவு
முந்தானைச் சேலை கட்டும் செந்தாழம்பூக்கள்

(ஆ) எதிர்நீச்சல் போடுதல்
ஒழுங்கு முறையான வாழ்க்கை
அதிகாலை எழுந்து இரைதேடல் முயற்சி
தொடர்ந்து இயங்குதல்

(iii) (அ) எசமானால் நாயின் மீது பாய்ச்சப்பட்ட ஆயுதம் உடம்பில் தைத்து இருந்த நிலையிலும் நாய் நன்றியுடைதாக எசமானின் முன் வாலை ஆட்டி நிற்கும். இதனால் நன்றியுடைய நாய் நல்ல நண்பர்க்கு உவமிக்கப்பட்டது.

(ஆ) யானை, தனக்கு நல்லது செய்த யானைப்பாகனையே கொல்லுமளவிற்கு நன்றி மறந்த பிராணியாகும். எனவே தான் யானை போன்று நன்றி மறந்தவரது நட்பை விலக்க வேண்டுமென்று கவிஞர் கருதுகின்றார்.

(iv) (அ) தமிழ்நாடு கீழ்த்திசை, மேற்றிசை நாடுகளினிடேயேயான வணிகத்தின் மையப் புள்ளியாக இருந்தமை. தமிழ்நாடு அந்நாடுகளுடன் செய்த வணிகம் காரணமாக தமிழரின் உலக மனப்பான்மை வளர்ந்தது எனக் கட்டுரையாசிரியர் குறிப்பிடுகின்றார்.

(ஆ) எல்லா ஊர்களும் நமது ஊர்களாகும். உலக மக்கள் அனைவரும் நமது உறவினர்கள் ஆவார்கள் என்ற இக்கூற்று உலகம் தழுவிய மனப்பான்மையை வெளிப்படுத்துகின்றது.


(v) (அ) சுயமாய் இயங்குதல்
மனோ தைரியம்
பயமின்மை

(ஆ) மூத்தம்மாவின் குணப் பண்புகள் இந்தக் கதாபாத்திரத்தினுள் உள்வாங்கப்பட்டு இயங்கும் தன்மை ஏற்பட்டு விட்டது என்பதையே உணர்த்தவிழைகிறார்.

(4 x 5 = 20 புள்ளிகள்)

## 2ஆம் வினாவிற்கு விடையளித்தல் தொடர்பான அவதானிப்புகளும் முடிவுகளும் :


**2 ஆம் வினாவுக்கு புள்ளிகள் பெற்றுள்ள விதம்**




2ஆம் வினாவும் கட்டாய வினாவாகும். 100% ஆனோர் இவ்வினாவைத் தெரிவு செய்துள்ளனர். இவ்வினாவிற்குரிய மொத்தப்புள்ளிகள் 20 ஆகும்.

16-20 வரையான வீச்சில் 14% ஆனோரும்
11-15 வரையான வீச்சில் 32% ஆனோரும்
06-10 வரையான வீச்சில் 28% ஆனோரும்
00-05 வரையான வீச்சில் 26% ஆனோரும் புள்ளிகளைப் பெற்றுள்ளனர்.

**2 ஆம் வினாவின் பிரிவுகளுக்கும் உபபிரிவுகளுக்குமான இலகுதன்மைகள்**




2ஆம் வினா 5 பிரிவுகளைக் கொண்டுள்ளது. இவற்றில் உபபிரிவுகள் (ii) அ, (iii) அ, ஆ, (v) அ ஆகியன இலகுதன்மை கூடியனவாக உள்ளன. உபபிரிவுகள் (iv) அ, ஆ, (v) ஆ ஆகியன இலகுதன்மை குறைந்தனவாக உள்ளன.

**குறைந்த அடைவு மட்டத்தைப் பெற்ற பரீட்சார்த்திகளின் விடைகளில் அவதானிக்கப்பட்டவை.**

- உரைநடைப் பகுதிகளை முழுமையாகக் கிரகித்து விடையளிக்கத் தவறியுள்ளமை.
- வினா (iv) இல் 'உலக மனப்பான்மை', என்னும் தொடரின் கருத்தினை விளங்காது விடையளித்தமை.
- வினா (v) இல் தரப்பட்ட வாக்கியத்தின் மூலம் கதாசிரியர் உணர்த்த விரும்புவதை இனங்காணத் தவறியமை.

**அடைவு மட்டத்தை அதிகரிப்பதற்கான ஆலோசனைகள் :**

- உரைநடைப் பகுதிகளைக் கற்பிக்கும்போது அவற்றில் இடம்பெறும் முக்கியமான சொற்கள் சொற்றொடர்களை எடுத்துக்காட்டி விளக்குவதுடன் அவற்றை அறிவதில் மாணவர்களுக்கு ஆர்வத்தை ஏற்படுத்துதல்.
- உரைநடைப் பகுதிகளில் வரும் சம்பவங்கள், உரையாடல்கள் மூலம் அவற்றை எழுதிய ஆசிரியர் வெளிப்படுத்த விரும்பும் விடயங்கள் பற்றி மாணவர்களுடன் கலந்துரையாடி விளக்குதல்.
- பாடல்களின் பொருட்சிறப்புகளை அறிந்துகொள்ளும் ஆற்றலை விருத்தி செய்தல்.

வினா இல. 3

**3. நாவலர் எழுந்தார்** என்ற கட்டுரையில்,

(அ) நாவலரின் ஆளுமையும் நேர்மையும்

(ஆ) பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளையின் சம்பவச் சித்திரிப்புத் திறனும்

புலப்படுமாற்றை விளக்குக.

**அல்லது**

**கம்பியூட்டர்** என்ற சிறுகதையில்,

(அ) எழுத்தாளரையும் அவரது குடும்பத்தையும் கம்பியூட்டர் அன்னியோன்னியமாக்கிய விதத்தையும்

(ஆ) அதனை நகைச்சுவையுடன் எழுத்தாளர் சித்திரிக்குமாற்றையும்

விளக்குக. (15 புள்ளிகள்)

## 3 ஆம் வினாவிற்கு எதிர்பார்க்கப்பட்ட விடைகளும் புள்ளி வழங்கும் திட்டமும்

(அ) நாவலரது ஆளுமை

- தமிழ் மக்களின் தலைமையைத் தெரிவு செய்யக்கூடிய தகுதி.
- தமிழ் அறிஞர் குழாத்துக்கு தலைமை தாங்கக் கூடிய தகுதி.
- நிலைமையை அனுசரித்து பொருத்தமான இடத்தில் வாதங்களை முன்வைக்கும் திறன். (அது கிடக்க கொண்டு வா தபாற் தந்திக் கட்டுக்களை)
- கம்பீரமான தோற்றம், வீறு கொண்ட பார்வை, எண்ணங்களின் வேகம் - இவற்றை வருணிக்க கம்பர் இல்லை எனக் கட்டுரையாசிரியர் கூறுதல்.
- ஒருவர் ஒருவராகவோ இருவராகவோ கூட்டமாகவோ வாதத்துக்கு வரலாம் என நாவலர் அழைத்தல்.
- பிரசண்ட மாருதத்திற்குப் பிறகு என்று சொல்லப்படுகின்ற அமைதி சபையில் நிலவியது எனச் சபை நாவலரது செயலால் அடங்கிப் போனமை.
- நாவலர் நோய் வாய்ப்பட்டிருந்த போதும் நியாயத்துக்காக வாதிட முற்படும் போது நோயைப் பொருட்படுத்தாமல் வாதிட்டமை.

**நேர்மை :**

- பிறிற்றோவின் கபடச் செயலை அனுமதிக்காமை.
- பிறிற்றோவைத் தெரிவு செய்தால் அவர் நல்லூர் கந்தசாமி கோயில் வழக்கைத் தமக்குச் சாதகமாகத் திருப்புவார் என்பதை நாவலர் அறிந்தும் அதற்கு உடன்படாமை.
- நேர்மையான ஒரு தலைவரே தமக்குத் தேவை என்பதில் உறுதியாக இருத்தல்.
- பிறிற்றோ கட்சியினரின் நேர்மையற்ற செயல் நாவலரின் இதயத்தில் பெரு நெருப்பை கொளுத்தி விட்டது எனக் கட்டுரையாசிரியர் குறிப்பிடல்.

(08 புள்ளிகள்)

(ஆ) பண்டித மணியின் சம்பவச் சித்திரிப்புத் திறன்

- பண்டிதமணி இந்தச் சம்பவம் நடந்தபோது உடனிருக்கவில்லை. செவி வழியாகக் கேட்ட கதையொன்றை நாடக பாணியில் உயிர்த்துடிப்புடன் சித்திரித்தமை.
- நாவலரது சுகவீனம் அவரது சோர்வு ஆகியவற்றைச் சித்திரித்த பின் வாதம் தடம் மாறியபோது நாவலர் எழுந்த காட்சியையும் நடந்து சென்ற காட்சியையும் கம்பராமாயணக் காட்சியுடன் ஒப்பிட்டு எழுதியமை.

நாவலர் எழுகின்ற காட்சியைச் சீதையின் சுயம்வரத்தில் வில் முறிக்க இராமன் எழுந்த காட்சியுடன் ஒப்பிடுதல்.

உ-ம் : "பொழிந்த நெய் யாகுதி வாய்வழி பொங்கி எழுந்த கொழுங்கன லென்ன எழுந்தான்"

- நாவலர் நடந்து சென்ற காட்சியை இராமன் வில்முறிக்க நடந்து சென்ற காட்சியுடன் ஒப்பிடுதல்.

  உ-ம் : "மாக மடங்காலும் மால்விடையும் பொன்
  னாகமும் நாகமும் நாண நடந்தார்"

- அவரது காசநோயை அருணந்தி சிவாச்சாரியரது வயிற்று வலியுடன் ஒப்பிட்டு எழுதுதல்.

- நாவலரது ஆளுமைப் பண்பை வெளிப்படுத்த அவர் பேசியதாகக் கூறும் தொடர்களுக்கு அழுத்தம் கொடுத்தல்.
  "விலகுபிள்ளை........"
  "அதுகிடக்க எடுத்துக்கொண்டு வா தந்தி தபால் கட்டுக்களை"

(07 புள்ளிகள்)

(8 + 7 = 15 புள்ளிகள்)

**அல்லது**

(அ) எழுத்தாளரின் கூற்றாக

- கணிப்பொறி எங்கள் வாழ்க்கையில் பெரிய திருப்பத்தைக் கொண்டு வந்தது. நாங்கள் கம்பியூட்டர் பரிபாஷையில் பேசிக்கொண்டோம் எனல்.
- எழுத்தாளர் மனைவியுடன் ஊடாடுகிற போது மேகலா என்ற பெயரை மேகா என்று எழுதுவதைக் கண்டு அடையும் மகிழ்ச்சி.
- அவர்கள் பரிமாறிக்கொள்ளும் பரிபாஷையினூடாக வெளிப்படுத்தப்படும் அன்னியோன்யம்.
- மகனுக்கும் மனைவிக்கும் இடையிலான உரையாடலிலும் செயல்களிலும் ஒருவருக்கு ஒருவர் உதவுவதை விபரித்தல்.
- எழுத்தாளரது, தொலைந்துபோன கதையை மகன் மீளப்பெற்றுக் கொடுத்ததில் ஏற்பட்ட மகிழ்ச்சி.
- "கணிப்பொறியின் வருகையால் எங்கள் வீடு விஞ்ஞானத் துள்ளல் துள்ளி வேகமாக முன்னேறியது" என்ற ஆசிரியர் கூற்று.

(09 புள்ளிகள்)

(ஆ)
- வீட்டிற்கு கணிப்பொறி வந்தவுடன் அதனை இறக்குதல் பற்றிச் சித்திரித்தல்.

  உதாரணம் : "மனைவி ஆலத்தி எடுக்க நிற்பது போல் ஆவலுடன் வாசலில் நின்றாள்"
  "நிறைபொங்கல் பானையை இறக்குவது போல மெத்த மெதுவாக இறக்குதல்"


- மனைவி தன் தோழிக்கு இயல்பாக அளிக்க விரும்பும் பதிலில்
  "கொஞ்சம் இரு' எனக்கு ஞாபகத்தில் இல்லை. கம்பியூட்டரைப் பார்த்துச் சொல்லுறன்"

- மனைவியுடன் கணிப்பொறிப் பரிபாஷையில் பேசுவது
  Press any key to entre
  If you want to escape press here
  முதலானவற்றினூடாக நகைச்சுவையாக சித்திரித்தல்

(06 புள்ளிகள்)


(9 + 6 = 15 புள்ளிகள்)

## 3ஆம் வினாவிற்கு விடையளித்தல் தொடர்பான அவதானிப்புகளும் முடிவுகளும்




3ஆம் வினாவும் கட்டாய வினாவாகும். இவ்வினாவிற்குரிய மொத்தப் புள்ளிகள் 15 ஆகும்.

12-15 வரையான வீச்சில் 3% ஆனோரும்
08-11 வரையான வீச்சில் 18% ஆனோரும்
04-07 வரையான வீச்சில் 29% ஆனோரும்
00-03 வரையான வீச்சில் 50% ஆனோரும்
புள்ளிகளைப் பெற்றுள்ளனர்.




3 ஆம் வினா இரு பகுதிகளைக் கொண்டுள்ளது. இவற்றுள் ஒரு பகுதிக்கே பரீட்சார்த்தி விடை எழுத வேண்டும். ஒவ்வொரு பகுதியும் இரண்டு உபபிரிவுகளைக் கொண்டுள்ளது.

முதற்பகுதி தொடர்பாக, உபபிரிவு 'அ' விற்கு 34% ஆனவர்களும் 'ஆ' விற்கு 24% ஆனவர்களும் சரியாக விடையளித்துள்ளனர். இரண்டாம் பகுதி தொடர்பாக, உபபிரிவு 'அ' விற்கு 34% ஆனவர்களும் 'ஆ' விற்கு 22% ஆனவர்களும் சரியாக விடையளித்துள்ளனர். எல்லா உபபிரிவுகளுக்கும் 40% இற்குக் குறைந்த பரீட்சார்த்திகளே சரியாக விடையளித்துள்ளனர்.

**குறைந்த அடைவு மட்டத்தைப் பெற்ற பரீட்சார்த்திகளின் விடைகளில் அவதானிக்கப்பட்டவை.**

- நாவலர் எழுந்தார்.
  - ஆளுமை, நேர்மை என்ற சொற்களின் பொருளைச் சரியாக விளங்கிக் கொள்ளாது விடை எழுதியமை.
  - 'புலப்படுமாற்றை விளக்குக' என்பதைக் கருத்திற் கொள்ளாது குறிப்புகளாக விடையளித்தமை.
  - சம்பவம் மட்டும் விவரித்து எழுதப்பட்டிருந்ததே தவிர சித்திரிப்புத் திறன் எடுத்துக் காட்டப்படாமை.
- கம்பியூட்டர்
  - கதைப்பாங்கில் விடை எழுதியுள்ளமை.
  - வினாவைச் சரியாக விளங்கிக் கொள்ளாது கதையின் ஆரம்பத்தில் இருந்தே விடை எழுதியமை.
  - கம்பியூட்டர் எழுத்தாளரையும், அவரது குடும்பத்தையும் அந்நியோன்னியப்படுத்திய விதம், அதனை நகைச்சுவையுடன் எடுத்துக்காட்டும் விதம் என்பவற்றை விளங்கிக் கொள்ளாமை.

**அடைவு மட்டத்தை அதிகரிப்பதற்கான ஆலோசனைகள் :**

- உரைநடைப் பகுதிகளைக் கருத்தூன்றி வாசிப்பதற்கு வழிப்படுத்துதல்.
- எழுத்தாளர் பற்றி அறிமுகப்படுத்துதல்.
- உரைநடைப் பகுதிகளில் கூறப்படும் சம்பவங்களின் பின்னணியை விளக்குதல்.
- விடயங்களைப் பகுத்தாராய்ந்து எழுதும் திறனை வளர்ப்பதற்கு ஏற்ற பயிற்சிகளை வழங்குதல்.
- விடைகளை எழுதும்போது வினாக்களுக்குப் பொருத்தமான மேற்கோள்களையும், உதாரணங்களையும் எடுத்துக்காட்டி எழுத வழிப்படுத்தல்.
- சிறுகதை ஆசிரியர்களின் படைப்பாற்றல் திறன் பற்றிய விளக்கத்தை அளித்தல்.

வினா இல. 4

**4. பேதைமை** என்ற அதிகாரத்தில்,

(அ) பேதைமை உடையோரின் செயல்கள்

(ஆ) பேதைமை உடையோரைச் சுட்டப் பயன்படும் அணிகள்

என்பனவற்றை விளக்குக.

**அல்லது**

**குகப்படலத்தில்,**

(அ) பரதன் கோசலையை குகனுக்கு அறிமுகம் செய்தல்

(ஆ) கோசலை கூறிய வாழ்த்துரை

ஆகியவற்றினூடாகக் கம்பனின் கவியாற்றல் புலப்படுமாற்றை விபரிக்குக. (15 புள்ளிகள்)

## 4 ஆம் வினாவிற்கு எதிர்பார்க்கப்பட்ட விடைகளும் புள்ளி வழங்கும் திட்டமும்

4. (அ)
- தனக்கு கெடுதியான செயல்களை ஏற்றுக்கொண்டு நன்மை தரும் செயல்களை கைவிடல்.
- தனக்குப் பொருந்தாத ஒழுக்கத்தில் ஆசை கொள்ளுதல்.
- தகாத செயல்களுக்கு நாணாது இருத்தல்.
- தக்க செயல்களை ஏற்காது இருத்தல்.
- அன்பு இல்லாதிருத்தல்.
- நன்மை தரும் செயலை விரும்பாதிருத்தல்.
- ஏழு பிறவியில் அழுந்துவதற்குரிய நரகத் துன்பத்திற்கு காரணமான செயலை செய்வான்.
- நிறைவு பெறாத செயல்களிலேயே ஈடுபடுவான்.
- தன்னைக் குற்றவாளியாக்கக்கூடிய செயல்களைச் செய்வான்.

(09 புள்ளிகள்)

(ஆ) அணிகள்

**குறள் - 8 உவமை அணி**

"மையல் ஒருவன்................."

பேதையின் கையில் ஒரு பொருள் பெற்றால் அது பித்துப் பிடித்த ஒருவன் மயங்கியது போலாகும்.

| | | |
|---|---|---|
| உவமானம் | - | பித்துப்பிடித்தவன் மது அருந்தி மயங்கி நடத்தல். |
| உவமேயம் | - | பேதையின் கையில் பொருள் கிடைக்க அவன் செய்வதறியாது நடத்தல். |
| பொதுத்தன்மை | - | செய்வதறியாது மயங்கிக் கிடத்தல். |

**குறள் - 10 உவமை அணி**

"கழா அக்கால................."

சான்றோர் கூட்டத்துள் பேதை புகுதல், ஒருவன் தூய்மையற்றவற்றை மிதித்து கழுவாத காலை படுக்கையில் வைப்பது போன்றது.

| | | |
|---|---|---|
| உவமானம் | - | தூய்மையில்லாததை மிதித்துக் கழுவாத காலை படுக்கையில் வைத்தல். |
| உவமேயம் | - | சான்றோர் கூட்டத்தில் பேதை புகுதல். |
| பொதுத்தன்மை | - | தகாத செயல் |

(06 புள்ளிகள்)

(9 + 6 = 15 புள்ளிகள்)

**அல்லது**

(அ) • "கோக்கள் வைகும் முற்றத்தான்" என தசரதனைச் சிறப்பித்து அவனின், முதற்தேவி என கோசலையையும் உயர்த்திக் கூறுதல்.

- மூன்றுலகும் ஈன்றவனான பிரமனை, முன்னீன்ற ஆதிமூலமாகிய பரம்பொருளையே மகவாகப் பெற்றவள் எனச் சிறப்பித்தல்.
- "இராசமாதா" என அடைந்திருக்க வேண்டிய உயர்நிலையை பரதன் பொருட்டுத் துறந்த கோசலையை, பெரியவள் எனப் பாராட்டுதல்.
- "யான் பிறத்தலாற்றுறந்த" என, பரதன் கூறுவதாகக் காட்டப்படுவதன் மூலம் அவனின் தன்வெறுப்புணர்ச்சியைக் காட்டுதல்.


(08 புள்ளிகள்)

(ஆ) • நாட்டை விட்டுக் காடு சென்றமையை, துயர் என்னாமல் நலம் என்று கூறுதல் (குகனின் நட்புக் கிடைத்தமையால்)


- "கைவீரக் களிறு அனைய காளை" என உவமை, உருவக வாயிலாக குகனின் வீரத்தைப் பாராட்டுதல்.
- "ஐவீரும் ஒருவீராய்" என வேடுவனான குகனை ராமனின் சகோதரனாய் அங்கீகரித்தமையைச் சுட்டுதல்.
- "நீண்டகாலம் நாட்டை அனைவரும் ஒற்றுமையாக ஆளுங்கள்" எனப் பாராட்டிக் கூறுதல்.

(07 புள்ளிகள்)
(8 + 7 = 15 புள்ளிகள்)

## 4 ஆம் வினாவிற்கு விடையளித்தல் தொடர்பான அவதானிப்புகளும் முடிவுகளும்




4 ஆம் வினாவும் கட்டாய வினாவாகும். இவ்வினாவுக்குரிய மொத்தப்புள்ளிகள் 15 ஆகும்.
இதில்,
12-15 வரையான வீச்சில் 7% ஆனோரும்
08-11 வரையான வீச்சில் 20% ஆனோரும்
04-07 வரையான வீச்சில் 25% ஆனோரும்
00-03 வரையான வீச்சில் 48% ஆனோரும்
புள்ளிகளைப் பெற்றுள்ளனர்.




இரு பகுதிகளைக் கொண்ட நான்காம் வினாவில் ஒரு பகுதிக்கே பரீட்சார்த்திகள் விடை எழுத வேண்டும். ஒவ்வொரு பகுதியும் இரண்டு உபபிரிவுகளைக் கொண்டுள்ளது.

முதற்பகுதி தொடர்பாக உபபிரிவு 'அ' இற்கு 34% ஆன பரீட்சார்த்திகளும், 'ஆ' இற்கு 25% ஆன பரீட்சார்த்திகளும் விடையளித்துள்ளனர்.

இரண்டாம் பகுதி தொடர்பாக உபபிரிவு 'அ' இற்கு 44% ஆன பரீட்சார்த்திகளும் உபபிரிவு 'ஆ' இற்கு 36% ஆன பரீட்சார்த்திகளும் சரியாக விடையளித்துள்ளனர்.

**குறைந்த அடைவு மட்டத்தைப் பெற்ற பரீட்சார்த்திகளின் விடைகளில் அவதானிக்கப்பட்டவை.**

**பேதைமை**

- பேதைமை என்ற அதிகாரத்தில் உள்ள குறள்களின் கருத்தினைத் தெளிவுற அறிந்திராமை.
- பொருள் விளக்கமின்றி குறள்களை மட்டும் எழுதியிருந்தமை.
- அணிகளை இனங்காண்பதில் இடர்ப்பட்டமை.
- அணிகளை இனங்கண்ட போதும் அவற்றைத் தெளிவுற விளக்காமை.

**குகப்படலம்**

- பொருத்தமான பாடல்வரிகளை மேற்கோள் காட்டி எழுதாமை.
- பாடலின் பொருளை மட்டுமே எழுதியிருந்ததுடன் கவியாற்றலை எடுத்துக்காட்டத் தவறியமை.

**அடைவு மட்டத்தை அதிகரிப்பதற்கான ஆலோசனைகள் :**

- குறள்களின் பொருளை மாணவர்கள் அறிந்து தெளிவாக எழுதும்படி செய்தல்.
- ஒரு அதிகாரத்திற்குரிய குறள்களை வகுத்தும் தொகுத்தும் எழுதுவதற்கான பயிற்சிகள் வழங்குதல்.
- பேதைமையுடையவர்களைச் சுட்டும் குறட்பாக்களில் உள்ள அணிகளை இனங்காணச் செய்து, அவற்றின் பொருத்தப்பாட்டினை விளக்குதல்.
- பொருத்தமான பாடல்வரிகளை மேற்கோள்காட்டி எழுதப் பயிற்றுவித்தல்.
- சொல், சொற்றொடர்களூடாக கம்பர் பாத்திரப்பண்புகளை விபரிக்கும் திறனை எடுத்துக் காட்டுதல்.

## 5, 6, 7 ஆம் வினாக்களுள் ஏதாவது ஒன்றைத் தெரிவு செய்து எழுதுக.

**5.** **"இனி நினைந்திரக்க மாகின்று..."** என்று தொடங்கும் புறநானூற்றுப் பாடலில்,

(அ) இளமைக் காலத்து உணர்வுகளும்

(ஆ) முதுமைக் காலத்து உணர்வுகளும்

சித்திரிக்கப்படுமாற்றினை விபரிக்குக. (10 புள்ளிகள்)

### 5 ஆம் வினாவிற்கு எதிர்பார்க்கப்பட்ட விடைகளும் புள்ளி வழங்கும் திட்டமும்


(அ)
- இளமை மைந்தர் மகளிருடன் இணைந்து குளிர்ந்த பொய்கையில் விளையாடி மகிழ்தல்.
- நீர்த்துறையிலுள்ள உயர் மருத கிளையில் இருந்து துடுமென பொய்கையில் குதித்தல்.
- கரையில் நிற்போர் வியந்து பார்க்கும் படி நீரின் அடியிலுள்ள மண்ணை எடுத்து வந்து காட்டிய ஒளிவு மறைவு அறியா இளமை

(06 புள்ளிகள்)

(ஆ)
- பூண் பூட்டிய தடியை ஊன்றி நடக்கும் நிலை
- நடுக்குற்ற நிலை
- இடையிடையே இருமல் ஏற்படும் நிலை
- தொடர்ந்து பேச முடியாத நிலை (சில சொற்கள் மட்டுமே பேசக்கூடிய நிலை)
  இவ்வாறான இரு நிலைகளையும் முதுமை நிலையில் கழிவிரக்கத்துடன் உணர்தல்.


(04 புள்ளிகள்)
(6 + 4 = 10 புள்ளிகள்)

### 5 ஆம் வினாவிற்கு விடையளித்தல் தொடர்பான அவதானிப்புகளும் முடிவுகளும்




இவ்வினா தெரிவு வினாவாகும்.
இவ்வினாவிற்கான மொத்தப் புள்ளிகள் 10ஆகும்.

08 - 10 வரையான வீச்சில் 28% ஆனவர்களும்
06 - 07 வரையான வீச்சில் 20% ஆனவர்களும்
03 - 05 வரையான வீச்சில் 19% ஆனவர்களும்
00 - 02 வரையான வீச்சில் 33% ஆனவர்களும்
புள்ளிகளைப் பெற்றுள்ளனர்.




தெரிவு வினாக்களில் ஒன்றான இவ்வினாவின் "அ, ஆ" ஆகிய பிரிவுகளுக்கு முறையே 55%, 54% ஆன பரீட்சார்த்திகளே சரியாக விடையளித்துள்ளனர்.

**குறைந்த அடைவு மட்டத்தைப் பெற்ற பரீட்சார்த்திகளின் விடைகளில் அவதானிக்கப்பட்டவை.**

- இளமைக்காலத்து உணர்வுகளையும், முதுமைக் காலத்து உணர்வுகளையும் பாடலில் இருந்து வேறுபடுத்தி எழுதத் தவறியமை.

**அடைவு மட்டத்தை அதிகரிப்பதற்கான ஆலோசனைகள் :**

- செய்யுள்களில் / கவிதைகளில் இடம்பெறும் வாழ்க்கைச் சம்பவங்கள், உணர்வுகள் என்பவற்றை எடுத்துக்காட்டி கலந்துரையாடுதல். அவற்றைத் தொகுத்து எழுதச் செய்தல்.

வினா இல. 6

**6. எது நல்ல சினிமா** என்ற கட்டுரையில்,

(அ) காட்சிப் படிமங்கள்

(ஆ) ஒலி

(இ) படத்தொகுப்பு

ஆகியவற்றினூடாக சினிமா உருவாகுமாற்றை கட்டுரையாசிரியர் எவ்வாறு எடுத்துக்காட்டுகின்றார்?

(10 புள்ளிகள்)

## 6ஆம் வினாவிற்கு எதிர்பார்க்கப்பட்ட விடைகளும் புள்ளி வழங்கும் திட்டமும்

(அ) காட்சிப் படிமங்கள்

- சினிமாவினுடைய காட்சிகள் எல்லாமே அழுத்தமான அழகான, வரிசையான காட்சி படிமங்களால் வெளிப்படுத்தப்படும் போது நல்ல சினிமா உருவாகும்.
  - சினிமா மொழியின் முக்கிய கூறு காட்சித் தொடர்
  - காட்சிப் படிமங்கள் மூலம் சொல்லக்கூடிய ஒன்றை வார்த்தை மூலம் கூற முயன்றால் சினிமா நலிவடையும். எனவே காட்சிப் படிமங்கள் முக்கியமானவை.

    உதாரணம் : பாலுமகேந்திராவின் அழியாத கோலங்கள்.

  இத்தகைய காட்சிப் படிமங்கள் சினிமாவை நல்ல சினிமா ஆக்குகிறது.

(03 புள்ளிகள்)

(ஆ) ஒலி

- பேசும் வார்த்தைகள் இயல்பான ஒலிகள் காட்சிப் படிமத்தை மேலும் விளக்குவதாக அமைகின்ற போது நல்ல சினிமா உருவாக வாய்ப்புண்டு.
  - சினிமாவை உருவாக்குவதில் ஒலிக்கும் மிக முக்கிய பங்குண்டு.
  - சினிமாவில் காட்சிப் படிமத்தின் தாங்கலாக இது வருகிறது.
- சினிமாவில் ஒலி பல வகைகளில் கையாளப்படுகிறது.
  - இயல்பான ஒலி
    பேசும் வார்த்தைகள்
  - காட்சிப் படிமத்திற்கு ஒத்திசைவாக ஒலி - சினிமாவில் இடம்பெற வேண்டும்
  - சினிமாவில் ஒலி சிறப்பாக கையாளப்படலுக்கு உதாரணம் பாரதிராஜாவின் கல்லுக்குள் ஈரம்

(03 புள்ளிகள்)

(இ) படத்தொகுப்பு


- காட்சிப் படிமங்களையும் ஒலிப் பதிவுகளையும் அர்த்தமுள்ள கோர்வையாக அமைப்பதே படத்தொகுப்பாகும்.
  - காட்சிப் படிமங்களும், ஒலிப் பதிவுகளும் ஒரு அர்த்தமுள்ள கோர்வையாக அமைய வேண்டும்.
  - சினிமாவுக்கு அடித்தளமாக அமைவது படத்தொகுப்பாகும்.
  - நிகழ்ச்சித் தொடர் கோவைப்படுத்தப்படும் முறைமைக்கு ஏற்ப நிகழ்ச்சித் தொடரின் அர்த்தமும் மாறும்.
  - காட்சிப் படிமங்களை இணைக்க பல முறைகள் கையாளப்படல்.
    i. Cut - காட்சி மாறுவது
    ii. மயங்கித் தெளிதல் - காட்சி மங்கி அதே தருணத்தில் அடுத்த காட்சி திரையில் தோன்றுதல்
    iii. மயங்கித் தெளிதல் - திரை இருண்டு பின் மறுகாட்சி வருவது
    உதாரணம் : சத்யஜித்ரே - பதேர் பாஞ்சாலி
    பருவங்கள் மாறல் (மயங்கித் தெளிதல்)
- இவற்றுக்குத் துணையாக காமிரா, லென்ஸ், ஒளி விளக்குகள், ஒலிப்பதிவு நாடா, ஒளியெறிதல் முதலியன அமைகின்றன.

  மேற்குறித்த மூன்றும் பொருத்தமுற இணைகின்றபோது நல்ல சினிமா உருவாகும்.

(4 புள்ளிகள்)


(3 + 3 + 4 = 10 புள்ளிகள்)

## 6 ஆம் வினாவிற்கு விடையளித்தல் தொடர்பான அவதானிப்பும் முடிவுகளும்




6ஆம் வினா தெரிவு வினாக்களில் ஒன்றாகும். இவ்வினாவிற்கான மொத்தப் புள்ளிகள் 10 ஆகும்.

இதில்,
08-10 வரையான வீச்சில் 8% ஆனோரும்
06-07 வரையான வீச்சில் 14% ஆனோரும்
03-05 வரையான வீச்சில் 24% ஆனோரும்
00-02 வரையான வீச்சில் 54% ஆனோரும்
புள்ளிகளைப் பெற்றுள்ளனர்.




இவ்வினா மூன்று உபபிரிவுகளைக் கொண்டது. (அ), (ஆ), (இ) பிரிவுகளுக்கு முறையே 33%, 32%, 26% ஆன பரீட்சார்த்திகள் சரியாக விடையளித்திருந்தனர்.

**குறைந்த அடைவு மட்டத்தைப் பெற்ற பரீட்சார்த்திகளின் விடைகளில் அவதானிக்கப்பட்டவை.**

- தெரிவு வினாவான இவ்வினாவினை 17% ஆனவர்களே தெரிவு செய்திருந்தனர்.
- காட்சிப்படிமங்கள், ஒலி, படத்தொகுப்பு ஆகியவற்றினூடாக சினிமா உருவாகுமாற்றை எடுத்துக் காட்டாது அவற்றுக்கான விளக்கம் மட்டுமே எழுதப்பட்டிருந்தமை.

**அடைவு மட்டத்தை அதிகரிப்பதற்கான ஆலோசனைகள் :**

- நல்ல சினிமா ஒன்றின் உருவாக்கத்தில் காட்சிப்படிமங்கள், ஒலி, படத்தொகுப்பு ஆகிய தொழினுட்ப அம்சங்களின் முக்கியத்துவத்தை எடுத்துக்காட்டுகளூடாக விளக்குதல்.

வினா 7.

**7. "ஆசைக்கிளியே..."** என்று தொடங்கும் நாட்டார் பாடலில்,

(அ) காதலி பற்றிய வருணனை

(ஆ) காதலனின் மன உறுதி

ஆகியன வெளிப்படுமாற்றை விளக்குக. (10 புள்ளிகள்)

## எதிர்பார்க்கப்பட்ட விடைகளும் புள்ளி வழங்கும் திட்டமும்

7. (அ) காதலி பற்றிய வருணனை

- காதலன் தனது காதலியை பலநிலைகளில் வைத்து வர்ணிக்கிறான்.
  - ஆசைக்கிளியே, ஓசைக்குரல் உடையவளே
  - நீலவண்டே
  - மருதங்கிளி வங்கிசமே
  - ஏலங்கிராம்பே
  - சீனத்துச் செப்பே
  - சிங்காரப் பூ நிலவே

(05 புள்ளிகள்)


(ஆ) காதலனின் மன உறுதி

- உன்னைக் கைவிடமாட்டேன் கவலைப்படாதே என ஆறுதல் கூறுதல்.
- அல்லாஹ்வை முன்வைத்து சத்தியம் செய்தல்.
- உன்னை அடையாவிட்டால் முடிவு மரணம் என்பதை வெளிப்படுத்துதல்.
- சிறப்பாக வாழ்ந்தாலும் ஏழைக்குத் தீங்கு செய்தால் அல்லாஹ் ஏற்கமாட்டான் என்று கூறுவதன் மூலம் உன்னை ஏமாற்ற மாட்டேன் என நம்பிக்கையை ஏற்படுத்தல்.

(05 புள்ளிகள்)
(5 + 5 = 10 புள்ளிகள்)


## 7ஆம் வினாவிற்கு விடையளித்தல் தொடர்பான அவதானிப்பும் முடிவுகளும்

**7 ஆம் வினாவுக்கு புள்ளிகள் பெற்றுள்ள விதம்**




7 ஆம் வினா தெரிவு வினாக்களில் ஒன்றாகும். இவ்வினாவிற்கான மொத்தப் புள்ளிகள் 10 ஆகும்.

இதில்,
08-10 வரையான வீச்சில் 15% ஆனோரும்
06-07 வரையான வீச்சில் 18% ஆனோரும்
03-05 வரையான வீச்சில் 28% ஆனோரும்
00-02 வரையான வீச்சில் 39% ஆனோரும்
புள்ளிகளைப் பெற்றுள்ளனர்.




இவ்வினாவின் 'அ' பிரிவுக்குரிய இலகுதன்மை 49% ஆகவும் 'ஆ' பிரிவுக்கு 34% ஆகவும் அமைந்துள்ளது.

**குறைந்த அடைவு மட்டத்தைப் பெற்ற பரீட்சார்த்திகளின் விடைகளில் அவதானிக்கப்பட்டவை.**

- பொருத்தமான பாடலடிகளை மேற்கோள் காட்டி காதலி பற்றிய வருணனைகளை விளக்காமை.
- காதலனின் மனவுறுதியை விளக்கும் குறிப்பிட்ட பாடல் அடிகளை இனங்கண்டு எழுதத் தவறியமை.

**அடைவு மட்டத்தை அதிகரிப்பதற்கான ஆலோசனைகள் :**

- நாட்டார் பாடல்களில் இடம்பெறும் வருணனைகளை அதற்கே உரிய பொருள் விளங்கும்படி எடுத்துக்காட்டுதல்.
- பாடல் வரிகளைப் பொருத்தமாக மேற்கோள் காட்டி விடை எழுத வழிப்படுத்துதல்.

## 2.3.3 வினாப்பத்திரம் III இற்கு விடையளித்தல் தொடர்பான அவதானிப்பும் முடிவுகளின் தொகுப்பும் பொதுவான ஆலோசனைகளும்

**அவதானிக்கப்பட்ட பொதுவான குறைபாடுகள்**

- ⋆ மாணவர்கள் இலக்கியப் பாடப்பரப்பில் இடம்பெற்றுள்ள உரைநடைப் பகுதிகள், செய்யுட்பகுதிகள் என்பவற்றில் பூரணமான விளக்கத்தைப் பெற்றிராமை.
- ⋆ செய்யுட்பகுதிகள், உரைநடைப் பகுதிகள் என்பவற்றை நயந்து இரசனையுடன் அவற்றை வெளிப்படுத்தும் திறன் குறைவாகக் காணப்பட்டமை.
- ⋆ செய்யுள்கள், உரைநடைப் பகுதிகள் என்பவற்றில் இடம்பெறும் அரும்பதங்கள், சொற்றொடர்கள் போன்றவற்றின் கருத்தினை விளங்கிக் கொள்ளாமை.
- ⋆ பாடப்பரப்பில் இடம்பெறும் அணிகள் (உவமை, உருவகம்), தொடர்கள் போன்றவற்றின் பொருத்தப்பாடு, சிறப்பு என்பவற்றை இனங்காணாமை.

**ஆலோசனைகள்**

- ⋆ விதிக்கப்பட்ட பாடநூல்களின் பாடப்பரப்பினை விளக்கமாகவும் தெளிவாகவும் கற்பித்தல்.
- ⋆ பாடப்பரப்புகள் தொடர்பாக வாய்மொழி வினாக்களுக்கு விடையளிக்கச் செய்தல்.
- ⋆ நூல், நூலாசிரியர், நூல் எழுதப்பட்ட காலம், பின்னணி போன்ற பொதுவான விளக்கத்தினை ஆசிரியர் வழங்குதல்.
- ⋆ இலக்கியம் சம்பந்தமான பொது அறிவுப் போட்டிகளை நடாத்துதல்.
- ⋆ மாணவர் மன்றங்களில் மாணவர்களே இலக்கியச் சொற்பொழிவுகள், விவாதங்கள், சுய ஆக்கங்கள் என்பவற்றை முன்வைப்பதற்கு ஊக்கமளித்தல்.
- ⋆ பாடப்பரப்பில் பொருத்தமானவற்றை நாடகமாக்கி நடிக்க வழிகாட்டுதல்.
- ⋆ செய்யுள் கற்பித்தலில் பாவோதல் முறையைக் கையாளுதல்.
- ⋆ பாடப்பரப்பில் இடம்பெறும் சொற்கள், சொற்றொடர், அணிச் சிறப்புக்களை எடுத்துக்காட்டி விளக்குதல்.
- ⋆ பாடப்பரப்பினை உள்ளடக்கிய அருஞ்சொற்பொருள் அகராதி தயாரித்தல்.
- ⋆ மாணவர்களின் ஆக்கங்கள் அடங்கிய கையெழுத்து சஞ்சிகை வெளியிடுவதற்கு ஆலோசனைகள் வழங்கி ஊக்குவித்தல்.
- ⋆ பொருத்தமான இடங்களில் சந்தர்ப்பம் கூறி விளக்குவதற்கான பயிற்சிகளை வழங்குதல்.
- ⋆ கட்டுரை ஆசிரியர்கள், கதாசிரியர்கள், புலவர்கள், கவிஞர்கள் முதலானோர் தமது கருத்துக்களை புலப்படுத்தக் கையாண்டுள்ள உத்திகள் பற்றி போதிய விளக்கமளித்தல்.

## பாகம் III

## 3 விடையளிக்கும்போது அவதானிக்கப்பட வேண்டிய விடயங்களும் ஆலோசனைகளும்

### 3.1 விடையளிக்கும்போது அவதானிக்கப்பட வேண்டிய விடயங்கள்

- ⋆ மாணவர்கள் நவீன அறிவுக் கருவூலங்களைத் தேடிக் கற்று அவற்றைப் பொருத்தமான இடங்களில், குறிப்பாக வினாப்பத்திரம் II இல் கட்டுரை, கடிதம் செய்தியாக்கம் போன்ற எழுத்தாக்கங்களுக்கு பிரயோகித்தல்.

- ⋆ கேட்கப்பட்ட வினாக்களுக்குப் பொருத்தமாக தாம் கற்ற விடயங்களைப் பிரயோகிக்கும் திறனை வளர்த்துக் கொள்ளல்.

- ⋆ வினாக்களினால் எதிர்பார்க்கப்படும் விடயங்களைத் தெளிவாக விளங்கி விடையளித்தல். (தெளிவுறுத்துக, சித்திரிக்குக, விவரிக்குக, விளக்குக, ஆராய்க, எடுத்துக்காட்டுக, வலியுறுத்துக)

- ⋆ **கற்றல் இடமாற்றம்** இங்கு வேண்டப்படுகிறது. அதாவது தாம் பல்வேறு வழிகளில் கற்ற விடயங்களைப் பொருத்தமான சந்தர்ப்பங்களில் பயன்படுத்தி எழுதுதல்.

- ⋆ வாக்கிய வழுக்களும் சொற்பிழைகளும் இன்றி எழுதும் திறனை வளர்த்துக் கொள்ளுதல்.

- ⋆ சொந்த மொழிநடையில் புதிய சிந்தனைகளைப் புகுத்தி விடையளித்தல்.

- ⋆ வினாக்களில் இடம்பெறும் முதன்மைச் சொற்களை அவதானித்து விடையளித்தல்.

- ⋆ தெளிவான கையெழுத்தில் உறுப்பமைய எழுதுதல்.

- ⋆ விடயங்களை ஒழுங்கமைப்பு முறையிலும் நேர்த்தியாகவும் முன்வைத்தல்.

**வினாப்பத்திரம் I**

- 1 ஆம் வினாப்பத்திரத்திற்கு விடையளிக்கும்போது ஒவ்வொரு வினாவிற்கும் மிகச் சரியான விடையைத் தெரிவுசெய்து அவ்விடைக்குரிய இலக்கத்தைக் கொண்ட கூட்டினுள் தெளிவாகப் புள்ளடியிடல் வேண்டும்.

- இவ்வினாப்பத்திரம் 40 பல்தேர்வு வினாக்களைக் கொண்டது. 1 - 20 வரையான வினாக்கள் மொழிவளத்தைக் கணிப்பிடுவதாக அமைகின்றன.
  20-30 வரையான வினாக்கள் இலக்கணப் பயன்பாட்டுத்திறன் பற்றி கணிப்பிடுவதாக அமைகின்றன.
  31-40 வரையான வினாக்கள் நடைமுறைப் பயன்பாட்டுச் சொற்கள், கிரகித்தல், பந்தியாக்கம் என்பவற்றில் மாணவர்களது ஆற்றலைக் கணிப்பிடுவதாக அமைகின்றன.

- மாணவர்கள் இலக்கண வினாக்களுக்கு விடையளிக்க இடர்ப்படுவதனால், அதில் அதிக கவனம் செலுத்தி கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகளை மேற்கொள்ள வேண்டும்.

- அதிக பயிற்சிகளைச் செய்வதன் மூலம் இவ்வினாப்பத்திரத்திற்குரிய புள்ளிகளை அதிகரித்துக்கொள்ள முடியும்.

- விடையளிக்கும்போது சரியான விடையைத் தெரிவுசெய்ய இடர்படின் கொடுக்கப்பட்ட கவனக் கலைப்பான்களை (பிழையான விடைகளை) நீக்கி மிகப்பொருத்தமான விடையைத் தெரிவு செய்வதற்குப் பயிற்சி வழங்குதல்.

## வினாப்பத்திரம் II

- ★ மாணவர்கள் வினாப்பத்திரத்திலுள்ள அறிவுறுத்தல்களை முழுமையாகவும் தெளிவாகவும் வாசித்து விளங்கிக்கொள்ள வேண்டும்.

- ★ இவ்வினாத்தாள் 5 வினாக்களை கொண்டது. எல்லா வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.

- ★ குறுவிடை வினாக்கள் இப்பகுதியில் முதலாம் வினாவாக இடம்பெறும்.

- ★ இரண்டாம் வினா கட்டுரை எழுதுவது தொடர்பானதாகும். மாணவர்கள் கொடுக்கப்பட்ட நான்கு கட்டுரைகளின் வழிகாட்டற் குறிப்புகளையும் நன்கு வாசித்து தனக்கு எழுதுவதற்கு வாய்ப்பான விடயத்தைத் தெரிவுசெய்ய வேண்டும்.

- ★ கட்டுரை எழுதும்போது பின்வரும் விடயங்களைக் கவனத்தில் கொண்டு எழுதவேண்டும்.
    - பொருள் அமைவும் அளவும்
    - கருத்து வெளிப்பாடும் அளவும்
    - எழுத்து நுட்பங்கள் (பந்தி அமைப்பு, பந்திகளிடையேயான தர்க்கரீதியான தொடர்ச்சி, குறியீடுகள், உறுப்பமைவு, நேர்த்தி)
    - பொருத்தமான தலையங்கம் (குறைந்த சொற்களைக் கொண்ட கவர்ச்சியான தலைப்பு)

- ★ சுருக்கம் எழுதும்போது பின்வரும் விடயங்கள் கருத்திற்கொள்ளப்பட வேண்டும்.
    - பிரதான கருத்து, துணைக்கருத்துக்கள் இனங்காணப்படல்.
    - சொந்த மொழிநடையில் எழுதுதல்.
    - பிரதான அம்சங்களை அனுசரித்து கட்டுக்கோப்பாக கருத்துச் சிதைவின்றி எழுதுதல்.
    - ஒரு பந்தியாக எழுதுதல்.
    - குறித்த சொல்லளவில் எழுதுதல்.
    - தெளிவாகவும் நேர்த்தியாகவும் எழுதுதல்.

- ★ கிரகித்தல் வினாவிற்கு விடையளிக்கும்போது கொடுக்கப்பட்ட உரைநடைப் பகுதியை நன்கு வாசித்து கிரகித்து மிகச்சரியான விடையைத் தெளிவாகவும் சுருக்கமாகவும் சுட்டிப்பாகவும் எழுத வேண்டும்.

- ★ 5 ஆம் வினாவில் இரு தெரிவு வினாக்கள் வழங்கப்படும். மாணவர்கள் இரு வினாக்களில் ஒன்றைத் தெரிவுசெய்து எழுத வேண்டும். தமக்கு மிகப் பரிச்சயமான விடயத்தை தெரிவுசெய்து எழுதுதல் நன்று.
கடிதம், அறிக்கை, துண்டுப்பிரசுரம், விளம்பரம் ஆகியவற்றை எழுதுவதற்கான பயிற்சி வழங்குதல் வேண்டும்.

- ★ அவதானிக்க வேண்டிய விடயங்களை அனுசரித்து எழுதுதல் வேண்டும்.
    - அமைப்பு
    - பொருட் பொருத்தம்
    - மொழிநடை

- ★ ஒவ்வொரு வினாவுக்குமுரிய விடைகளை எழுதும்போது விடைத்தாளில் புதிய பக்கத்தில் ஆரம்பித்தல் நன்று.

- ★ விடைத்தாளின் ஒவ்வொரு பக்கத்திலும் சுட்டெண்ணைத் தெளிவாக எழுதுதல் அவசியம்.

- ★ விடை எழுதும்போது வினா இலக்கத்தையும் பகுதி வினா இலக்கங்களையும் தெளிவாகவும், சரியாகவும் குறிப்பிடல் வேண்டும்.

## வினாப்பத்திரம் III

மாணவர்கள் வினாப்பத்திரத்திலுள்ள அறிவுறுத்தல்களை முழுமையாக, சரியாக வாசித்து விளங்கிக் கொள்ள வேண்டும். எத்தனை வினாக்களுக்கு விடையளித்தல் வேண்டும்? கட்டாய வினாக்கள் எவை? நேர ஒதுக்கீடு எவ்வளவு? என்பவற்றை முதலில் சரியாக விளங்கிக்கொண்டு, பின்னர் வினாக்களைச் சரியாக வாசித்து தெளிவாக விளங்கி விடையளித்தல் வேண்டும்.

- விதிக்கப்பட்ட பாடநூல்களின் பாடப்பரப்பினை நுணுக்கமாகக் கற்பித்தலும் - கற்றலும் மாணவர்கள் சரியான விடையைத் தெளிவாக எழுதுவதற்கு வாய்ப்பாக அமையும்.

- வினாக்களுக்குப் பொருத்தமான விடைகளை கட்டுரைப்பாங்கில் எழுதும் பயிற்சிகளை வழங்குவதால் அடைவுமட்டத்தை அதிகரிக்கலாம்.

- படைப்புக்கள், படைப்புத்திறன், படைப்பாசிரியர் கையாண்ட உத்திகள் என்பவற்றை நுணுக்கமாகக் கற்பித்தல் வேண்டும்.

- விதிக்கப்பட்ட பாடப்பரப்புகள் தொடர்பாக சொற்பொழிவு, விவாதம், ஒப்படைகள் என்பவற்றை வழங்கி மாணவர்களை இலக்கிய ஆளுமை மிக்கவர்களாக மிளிரச் செய்யலாம்.

- வினாவுக்கு ஏற்ப விடையளிக்கும் திறனை விருத்தி செய்வதற்குப் பயிற்சிகள் அவசியம்.

- இலக்கியங்களை நயந்து, வெளிப்படுத்துவதற்கான களங்களை அமைத்துக் கொடுத்தல் வேண்டும்.

## 3.2 கற்றல் கற்பித்தல் தொடர்பான கருத்துக்களும் ஆலோசனைகளும் :

- மாணவர்கள் தமிழ்மொழி, இலக்கியம் சார்ந்த தகவல்களைச் சேகரிக்கவும், சுயமாகக் கற்றலில் ஈடுபடவும் தூண்டுதல்.

- மொழி கற்றல் கற்பித்தலின்போது அடிப்படைத் திறன்களான கேட்டல், பேசுதல், வாசித்தல், எழுதுதல் என்பவற்றில் தேர்ச்சி பெறும் வகையில் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படல் வேண்டும்.

- இலக்கணம் தொடர்பான விடயங்களைப் பாடப்பரப்பினூடாகவும் எடுத்துக் காட்டி விளக்குதல்.

- இலக்கியத்தைக் கற்பிக்கும்போது நயந்து கற்பித்தலும் மாணவர்களை நயக்கச் செய்தலும் வேண்டும். பாடப்பரப்பில் வரும் விடயங்கள் தொடர்பாக மேலதிக விளக்கங்கள் கொடுத்தல். பகுத்தும் தொகுத்தும் எழுதவழிப்படுத்தல். பயிற்சிகளை ஆர்வத்துடன் செய்யத் தூண்டுதல்.

- மொழிச் செம்மை பற்றிய கரிசனை அதிகம் வேண்டப்படுகிறது. எழுத்துப் பிழைகள், வாக்கியப் பிழைகளைத் தவிர்ப்பதற்கான பயிற்சிகளும் ஆழமான, அழகிய சொந்த மொழிநடையில் விடைகளை முன்வைக்கும் திறனையும் விருத்தி செய்வதற்கு அவ்வப் பாடமுடிவில் மேலதிக பயிற்சிகளை ஆர்வத்துடன் செய்யத் தூண்டுதல்.

- புதிய நூல்களைத் தேடி வாசிக்கவும், அவற்றிலிருந்து பெறும் தகவல்களைக் கொண்டு கட்டுரை, கடிதம், சிறுகதை, துண்டுப்பிரசுரம் போன்ற ஆக்கங்களை உயர்ந்த மட்டத்தில் படைப்பதற்கு வழிகாட்டுவதுடன் அவற்றில் சிறந்தவற்றைக் காட்சிப்படுத்தி ஊக்குவிப்பு வழங்குதலும் பாராட்டுதலும்.

- மாணவருக்கு போதியளவு எழுத்துப் பயிற்சிகள் வழங்குதலும் அவற்றைத் திருத்துதலும் பின்னூட்டல் வழங்குதலும் மொழி ஆசிரியரின் கடமையாகும்.

- கட்டுரைகள், சிறுகதைகள், உத்தியோகபூர்வ கடிதங்கள், அறிக்கைகள், துண்டுப்பிரசுரங்கள், விளம்பரங்கள் போன்றவற்றின் மாதிரிகளை காட்சிப்படுத்திக் கலந்துரையாடல்.